# உதயன்

சுடர்: 29 கதிர்: 311 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 17, வெள்ளி 03.10.2014

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்

யாழ். - 20/=

வன்னி - 20/=


மேகமூட்டம்/ மழை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h

ஈரப்பதம்: 48%

காற்றமுத்தம்: 1008 hPa

வெளிச்சத் தெளிவு: மிக நன்று

சூரியோதயம்: 05:23

சூரியஸ்தமனம்: 18:04



இறுதிப் போட்டியில் சென்னை - கொல்கத்தா

பக்கம் 18




சிரச ஊடகவியலாளர் சந்தன குருப்புஆராச்சி தாக்கப்பட்டதையும் சட்டத்தரணிகள் நாமல் மற்றும் மஞ்சுள மிரட்டப்பட்டதையும் கண்டித்து சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கட்சி உறுப்பினர்கள் உட்படப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். (ற-10)

## குற்றச் செயல்களுக்கு தண்டனைகள் இல்லை

### இலங்கையின் நிலைமை குறித்து மன்னிப்புச் சபை விசனம்

நியூயோர்க், ஒக்.3

இலங்கையில், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடித்து வருகின்றது என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 40 பக்க அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனித உரிமை ஆர்வலர்கள், புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமை கண்காணிப்பாளர்கள், பாதுகாவலர்கள் இலங்கையில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதால், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினரிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட

22 ஆம் பக்கம் பார்க்க

## பாப்பரசரை இன்று சந்திக்கிறார் மஹிந்த



கொழும்பு, ஒக்.3

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸை இன்று சந்திக்க உள்ளார். வத்திக்கானின் அப்போஸ்தலர் மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

22 ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதியைத் தீர்மானிப்போர் தமிழர்களும், முஸ்லிம்களுமே


### இந்தமுறை அதுவே நிலைமை என்கின்றார் சோபித தேரர்

கொழும்பு, ஒக்.3

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க வேண்டிய பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான காலம் தற்போது கனிந்துவிட்டது. ஆகவே, இதுவிடயத்தில் இனியும் எதிரணிகள் காலதாமதம் செய்யாது உடனடியாக பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யவேண்டும்." - இவ்வாறு தெரிவித்துள்ளார் கோட்டை விகாராதிபதியும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான மாதுலுவாவே சோபித தேரர்.

இந்தமுறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியை தெரிவு செய்யும் சக்தியாக தமிழ் - முஸ்லிம் மக்களும் காணப்படுகின்றனர். அவர்களை ஒரே மேசையில் கொண்டுவந்து பேச்சு நடத்த நான் தயாராக இருக்கின்

22 ஆம் பக்கம் பார்க்க



## சப்ரகமுவ தமிழ் மாணவனை விடுவிக்கக் கோரி போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக்.3

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தமிழ் மாணவன், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு 50 நாள்கள் கடந்துள்ள நிலையில், குறித்த மாணவனை விடுவிக்குமாறு கோரி, அனைத்

22 ஆம் பக்கம் பார்க்க

அளுத்கம கூட்டுச் சம்பவம்; மாற்றமடைகிறது அறிக்கை | பக்கம் 14

## மஹிந்தவின் வருகையில் பங்கேற்பதா? கூட்டமைப்பினர் இன்னமும் முடிவில்லை

### நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 03

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பங்கேற்பது தொடர்பில் இன்னமும் இறுதி முடிவு செய்யப்படவில்லை. இது தொடர்பில் விரைவில் மீண்டுமொரு முறை கலந்துரையாடப்படும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு அமைச்சரவைக்கும் இடையி

22 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் மாகாண நியமன உறுப்பினர் பதவி வவுனியாவுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.3

வடக்கு மாகாண சபை பொறுப்பேற்று ஒரு வருடம் நிறைவடையவுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண நியமன உறுப்பினர் பதவி சுழற்சி முறையில் அடுத்ததாக வவுனியா மாவட்டத்துக்கு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்

22 ஆம் பக்கம் பார்க்க

## சொத்துக்களை மாற்றம் செய்யும்போது ஏமாற்றப்படுகின்றனர் அதிக முதியோர்

### சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி கஸ்புல்லா நசீர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

சொத்துக்களை மாற்றம் செய்யும்போதே இலங்கையில் அதிகளவான முதியோர்கள் ஏமாற்றப்படுகின்றனர். சட்டங்கள் தொடர்பான தெளிவு இல்லாத காரணத்தால், அவர்களின் பிள்ளைகளே 'அவர்களை ஏமாற்றி சொத்துக்களை மோசடி செய்கின்றனர் - இவ்வாறு தெரிவித்தார் சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி கஸ்புல்லா நசீர்.

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் கைதடி முதியோர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற கருத்த

22 ஆம் பக்கம் பார்க்க


வரையுங்கள் கார்ட்டூன்



வரைந்ததை அனுப்பி வையுங்கள்

தரம் கண்டு பிரசுரிப்போம்

வரையுங்கள் கார்ட்டூன்
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.


## இராணுவம் இருப்பதையே விரும்புகின்றனராம் தமிழர்

### வாக்கெடுப்பு நடத்தினால் தெரியுமாம் கூறுகின்றார் வன்னி கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம், ஒக். 03

வடக்கிலிருந்து படையினர் வெளியேற்றப்பட வேண்டுமா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், இங்குள்ள மக்கள் அதற்கு எதிராகவே வாக்களிப்பார்கள் - இவ்வாறு கூறியுள்ளார் வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுடந்த ரணசிங்க.

பயங்கரவாதச் செயற்பாடுகள்

22 ஆம் பக்கம் பாாக்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜனாதிபதித் தேர்தலை விரும்பவில்லை

## நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.3
ஜனாதிபதி தேர்தல் முதலில் நடத்தப்படுவதை விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம். ஜனாதிபதி தேர்தலை விடவும் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதையே தமது கட்சி விரும்புகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"தற்போதைய நாடாளுமன்றம் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கவில்லை. மக்களின் ஆணையை புதிதாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு பின்னர் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகம். சில முக்கியமான விடயங்களின் போது சில அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டை எட்டும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்றத் தேர்தல்கள் முதலில் நடத்தப்பட வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு. அனைத்து முஸ்லிம் கட்சிகளையும் அணி திரட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

**நாடாளுமன்றத் தேர்தல்கள் முதலில் நடத்தப்பட வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு. அனைத்து முஸ்லிம் கட்சிகளையும் அணி திரட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.**



## 'எபோலா' வைரஸுக்கு மருந்து?

பாங்ஹொக், ஒக்.3
எபோலா வைரஸுக்கு எதிரான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தாய்லாந்தின் மருத்துவ ஆய்வுமருத்துமனை ஒன்று அறிவித்துள்ளது.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு ஒன்று பாங்ஹொக்கில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த மருத்துவர்கள், இந்த மருந்துகள் எபோலாவுக்கு எதிராக சிறப்பாக தொழிற்படுகின்றது என்று தெரிவித்துள்ளனர்.

எபோலாவால் பாதிக்கப்படும் கலன்களில் உட்புகக் கூடிய அளவும் நுண்ணியதாகத் தயாரிக்கப்பட்ட எதிர்ப்பு மருந்து. அந்த கலன்களின் ஊடாக எபோலா வைரஸின் புரதவளத்தையும் அழிக்கும். அதன் மூலம் இந்த நோய் முழுவதுமாக கட்டுப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## இலங்கை மீனவருக்கு மறியல்

இராமநாதபுரம்.ஒக்.3
இந்தியக் கடற்பரப்புக்குள் மீன்பிடித்தனர் என்று கூறப்படும் இலங்கை மீனவர்கள் 12 பேரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க இராமநாதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



புத்தளம் மாவட்டத்திலிருந்து கடந்த 30ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 12 பெரும்பான்மையின மீனவர்கள், கன்னியாகுமாரி அருகே 14 கடல் மைல் தொலைவில் இந்திய கடல் பகுதியில் இந்தியக் கடலோரக் காவற்படையால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்த 3 தொன் மீன்கள் மற்றும் இரண்டு படகுகளும் இந்திய அதிகாரிகள் பறிமுதல் செய்யப்பட்டது.

குறித்த மீனவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு நேற்று இராமநாதபுரம் நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்டனர். விசாரணை மேற்கொண்ட நீதிவான் 12 மீனவர்களையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை சென்னை புழல் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். (ற-14)

## இலங்கை மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

### மீன்பிடித்துறை அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.3
தூத்துக்குடி கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடலோரக் காவற்படையால் கைது செய்யப்பட்ட 12 இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மீன்பிடித் துறை அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.



அதேவேளை, அரபிக் கடலில் மீன்பிடிக்கச்செல்லும் இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பரப்பை ஊடறுத்தே செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது என்றும், அவர்கள் இந்திய கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடாத போதும், இவ்வாறு கைது செய்யப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## பொலிஸாரால் தாக்கப்பட்ட பெண் நட்டஈடு கோரி வழக்கு

கொழும்பு, ஒக்.3
இரத்தினபுரியில், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் தாக்குதலுக்கு உள்ளான பெண், தன் மீதான தாக்குதலுக்கு எதிராக 5 கோடி ரூபா நட்டஈடு கேட்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இது தவிர, தன் மீதான தாக்குதலுக்கு எதிராக பொலிஸ் திணைக்களத்திடமிருந்து 5 கோடி ரூபாய் அபராதம் கேட்டு, முறைப்பாடொன்றையும் செய்யவுள்ளத்ாகவும் அப்பெண் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பெண் சில தினங்களுக்கு முன்னர் பொது இடம் ஒன்றில் வைத்து பொலிஸ் சார்ஜன்டினால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தார். அந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் பரவி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. (ற)

## தாடி வெட்டினார் அமைச்சர் ராஜித



கொழும்பு, ஒக்.3
மீனவர்களுக்கான இறங்குதுறையொன்று நிர்மாணிக்கும் வரை தனது தாடியை வெட்டமாட்டேன் என்று கடந்த 9 வருட காலமாக போராட்டத்தில் ஈடுபட்ட மீனவரின் தாடி, மீன் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவால் நேற்று வெட்டப்பட்டது. தெல்வத்த, பெராலிய பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

குறித்த மீனவர், தனது போராட்டத்தை 2005ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து வந்தார். இந்தநிலையில், குறித்த பிரதேசத்தில் இறங்குதுறையொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் ந டும் நிகழ்வு, நேற்று மீன்வளத் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. அப்போது, குறித்த மீனவரை சந்தித்த அமைச்சர், இறங்குதுறை அமைப்பது தொடர்பான தனது உறுதியை நிறைவேற்றியுள்ளேன் என்று தெரிவித்ததுடன், அதனால், மீனவரின் தாடியை வெட்டுமாறு கோரியுள்ளார்.

அதன்பின்னர் மீனவரின் தாடியை, தானே வெட்டிவிட்ட அமைச்சர், இந்த இறங்குதுறை நிர்மாணத்துக்காக 3 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (ற)





மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு அவர்களது நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தமைக்காகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த மீனவர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியதை அடுத்து, 36 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர். அவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் பெறுப்பேற்று, தற்போது பேசாலை வாடி வீட்டில் தங்க வைக்கப்பட்ட நிலையில் இன்று அவர்கள் இந்தியக் கடலோரக் காவற்படையினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## விபத்துகள்

தென்மராட்சி

### இராணுவ வாகனம் மோதி ஒருவர் காயம்

சாவகச்சேரி, கச்சாய் வீதியில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் காயமடைந்துள்ளார். மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது, இராணுவ வாகனம் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா முருகானந்தா (வயது-55) என்பவரே காயமடைந்தவராவார்.

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட முருகானந்தா சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்பவராவார். அவர் வியாபாரத்தை முடித்து வீடு திரும்பும்போதே மாலை 7 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தால் தூக்கி வீசப்பட்டு, தலையிலும் கையிலும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ற-9)



சிலாபம்

### வான் மரத்துடன் மோதி பெண் சாவு

சிலாபம் - புத்தளம் வீதியின் புளிச்சாக்குளம் பகுதியில் வானொன்று வீதியை விட்டுவிலகி, மரத்தில் மோதியதில் பெண்ணொருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் வானின் சாரதியும், அதில் பயணித்த இருவரும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற)

வெலிமடை

### மோ.சைக்கிள் - பஸ் விபத்து: சிறுவன் சாவு

வெலிமடை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 14 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். வெலிமடை சந்தைக்கு தனது தந்தையுடன் சிறுவன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, தனியார் பஸ் ஒன்றுடன் மோதி விபத்து நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் சிறுவன் உயிரிழந்துள்ளதுடன், தந்தை காயமடைந்த நிலையில் வெலிமடை வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 17 வெள்ளி (03.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 311

# ஜெயலலிதாவுக்கு ஆதரவாக ஈழ அகதிகள் ஆர்ப்பாட்டம்

## முகாம்களில் கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பு

சென்னை, ஒக்ரோபர் 3

**தமிழக முதல்வருக்கு அளிக்கப்பட்ட சிறைத் தண்டனை தீர்ப்பை வரவேற்றுக் கொண்டாடிய இலங்கை அரசை எதிர்த்துப் புதுக்கோட்டை தோப்புக்கொல்லை முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்கள் கறுப்புக்கொடி ஏந்தி நேற்றுப் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.**

**தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடந்த 27ஆம் திகதி, 100 கோடி இந்திய ரூபா அபராதமும் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.**

இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் அதிர்வலையை ஏற்படுத்தியது. ஆனால், இந்தத் தண்டனைக்கு இலங்கை அரசு ஆதரவு தெரிவித்ததாக செய்தி வெளியாகியது.

இந்த நிலையில் தோப்புக் கொல்லை முகாம் வாசிகள், நேற்றுமுன்தினம்புதன்கிழமை காலையில் ஒன்று திரண்டு கறுப்புக்கொடிகளை ஏந்தி, தமிழக முதல்வருக்கு ஆதரவாகவும் இலங்கை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

தமிழக அகதி முகாம்களில் வசிக்கும் மக்களின் நிலைமையை அறிந்து தமிழக மக்களுக்கு வழங்குவதைப் போல பல்வேறு நலத்திட்டங்களைத் தமிழ் அகதிகளுக்கும் முதல்வர் ஜெயலலிதா வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடதக்கது. (த)

## மின் பாவனையாளர்கள் அனைவருக்கும் சலுகை

### புதிய மின்கட்டணங்கள் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.3

வீட்டு மின் பாவனையாளர்கள் அனைவருக்கும் பயன் கிட்டும் வகையில் 25 சதவீத நிவாரண சலுவை கிடைக்கக் கூடியதான மின்கட்டண முறைமை இலங்கை மக்கள் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மாதமொன்றில் 300 மின் அலகுகளுக்குக் குறைவாகப் பயன்படுத்தும் மின் பாவனையாளர்களுக்கு மாத்திரமே மின் கட்டண அறவீட்டில் 25 சதவீதம் குறைக்கப்படும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை மின்சார சபையின் தலைவர் டபிள்யூ. பீ.கனேகல.

மின் கட்டண அறவீடுகள் தொடர்பாக திறைசேரியுடன் இணைந்து புதிய அட்டவணை தயாரிக்கப்பட்டதன் பின்னரே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அந்தத் தீர்மானத்தால் ஏறத்தாழ 90 வீதமான வீட்டு மின்பாவனையாளர்களுக்குப் பயன்கள் கிட்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வீட்டு மின்பாவனையாளர் தொடர்பாக அனுமதிக்கப்பட்டுள்ள புதிய மின் கட்டண அறவீட்டு முறை வருமாறு,

மாதமொன்றில் பாவிக்கப்

(22ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பின் பதிவு; கொள்கையளவில் இணக்கம்

கொழும்பு, ஒக். 3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இணக்கப்பாடொன்றுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் கூட்டத்தில் இது தொடர்பில் அனைத்துக் கட்சிகளும் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளன எனக் கூறப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது குறித்தும் ஆராயப்பட்டது. கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் டெனீஸ்வரன் வலியுறுத்தினார். அவருடன் இணைந்து மேலும் பலரும் அந்தக் கருத்தை ஆமோதித்தனர்.

இந்நிலையில் இது குறித்துக் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இந்தக் கோரிக்கை தொடர்பில் ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தார் என அமைச்சர் டெனீஸ்வரன் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இணக்கப்பாட்டுக்கு வருவதில் கடந்த சில வருடங்களாக சிக்கல் நீடித்து வருகிறது. புலத்தில் உள்ள மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் நீண்டகாலமாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றபோதும் அது கைகூடாமல் இழுபறியில் இருந்து வருகிறது. கூட்டமைப்பை பதிவு செய்யவேண்டும் என அந்த அமைப்புக்குள்ளேயே

(22ஆம் பக்கம் பார்க்க)

## குடிதண்ணீர் திட்டங்கள் குறித்து ஆராய்வார் அமைச்சர் தினேஷ்

### கிளிநொச்சியில் இன்று

கிளிநொச்சி, ஒக்.3

நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன இன்று கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார்.

பிற்பகல் 2 மணிக்குக் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்துகொள்ளும் அமைச்சர் பூநகரி, கிளிநொச்சி நகரம், பரந்தன் நகரம், வட்டக்கச்சி, அக்கராயன் பகுதிகளில் நடைபெற்றுவரும் குடிதண்ணீர்த் திட்ட வேலைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயவுள்ளதுடன் பூநகரியில் கொக்குப்படையான் மாழப்புகுளம் உருவாக்கம் தொடர்பாகவும் ஆராய்வார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் உட்படப் பல அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (த-18)

## சிகிச்சைக்காக யுவதி ஒருவர் ஹெலி மூலம் கொழும்புக்கு

யாழ்ப்பணம், ஒக். 3

யாழ். போதனா வைத்திய சாலையில் புற்றுநோயினால் அவதியுற்ற யுவதி ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக ஹெலி மூலம் அவசரமாக்க் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்திய சாலையில் புற்றுநோய் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த யுவதி ஒருவரின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து அவரை உடனடியாகக் கொழும்பு கொண்டு செல்வதற்கு முடிவாகியது. குடும்ப உறவுகளின் முயற்சியினால் ஹெலி மூலம் அவர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் ஹெலி மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவதை அவதானித்த பொதுமக்கள் முக்கிய அரசியல் வாதிகள் யாரும் நோய் வாய்ப்பட்டுள்ளனரா எனப் பேசிக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. (த-101)

## இந்திய நாடாளுமன்றம் முன்பாக அ.தி.மு.கவினர் உணவு தவிர்ப்பு



புதுடில்லி, ஒக். 3

அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட 'உணவு தவிர்ப்பு மௌன அறப் போராட்டம்' இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்திய நாடாளுமன்ற வளாகத்துக்கு உள்ளே அமைந்துள்ள காந்தி சிலை முன்பாக நடைபெற்ற இந்த ஒருநாள் போராட்டத்தில், இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் சேர்ந்த அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

இதுவரை தமிழ்நாட்டுக்குள் மட்டும் நடைபெற்று வரும் இது போன்ற போராட்டங்களை நாடு முழுவதும் விரிவுபடுத்த அந்தக் கட்சியினர் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படும் சூழலில் நேற்றைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்துக்கான ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அக்கட்சியின் மக்களவை உறுப்பினர்களின் தலைவர் வேணுகோபால் கூறும் போது, இது ஓர் அறப்போராட்டம் என்றும் அமைதியாக மட்டுமே தங்கள் வருத்தத்தை வெளிப்படுத்துகிறோம் என்றும் கூறினார். (த)

## 45 கிலோ கிராம் தங்கத்துடன் மாதகல் கடலில் 2 பேர் கைது

### இந்தியாவுக்குக் கடத்த முற்பட்டவேளை

யாழ்ப்பாணம், ஒக். 3

மாதகலில் இருந்து தமிழகத்துக்கு 45 கிலோ கிராம் தங்க பிஸ்கட்டுகளைக் கடத்த முற்பட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணச் சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

அவர்களால் கடத்தலுக்குப் பயன்படுத்திய கண்ணாடி இழைப் படகும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

மாதகல் பிரதேசத்திலிருந்து 25 கடல் மைல் தொலைவில் சந்தேக நபர்கள் இருவரும் இந்தியா நோக்கிச் சென்று கொண்டிருந்தவேளை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமையும் சுமார் ஒன்றரைக் கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினமும் அவ்வாறு படகில் ஏற்றிக்கொண்டு செல்ல முற்பட்டபோது 45 கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டது. அவற்றை உரைப்பையினுள் சுற்றிப் பின்னர் மீன்பிடிக்கும் வலைக்குள் மறைத்துப் படகில் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. (த-4)

## வாள்வெட்டில் 4 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 3

வடமராட்சி கலிகையில் உள்ள ஆலயம் ஒன்றில் பூசை வழிபாடுகளின்போது ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இடம்பெற்ற வாள் வெட்டில் 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு தரப்பினருக்கு இடையே இந்தத்தகராறு ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரவித்தனர். இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் மேலும் கூறப்பட்டது. (த-4)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகின. இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட மாணவர்களின் பெறு பேறுகள் வருமாறு:-

**சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை**
சி.வனோஜா-192, ந.டிலக்ஷன்-181, சி.சிவ ரூபனா-180, தி.சுபாங்கி-179, ம.பதுர்சனா-177, கோ.தனுசாந்-177, ஜெ.விஷ்ணவி-175, சி.விது ராங்கா-173, ஸ்ரீ. சாகரா-172, செ.ரைற்றஸ்-172, சி.லக்சிகா-172, வி.பிரணவன்-172, பா.அபி னயா-171, ஆ.வேணுஷன்-171, த.நிரோசிகா-170, கு.அபியுகன்-169, சி.பிரவீன்-167, இ.கோபி தன்-167, மு.லக் சன்-166, பு.கிருஷாலி-166, சி.சஞ்சிகா-165, ம.டினோஜா-165, ந.அஸ் வினி-165, நா.அபிசா-164, பி.கிஷாந்-163, யோ.ரம்மியராஜ்-162, ஜெ.விஹாசினி-162, சி.மயூர்த்தனன்-162, பொ.ராகவி-161, தே.குவிந் தன்-160, சி.ஜனார்த் தனன்-160, சு.நிலக் ஷன்-160, ஜ.அபி நவன்-159, செ.பிரசாத்-159.

**ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயம்**
ஜெ. சாருஜன்-165, சு.அனுசா-162, வி.விதுசா-158

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**
ப.பிரவீனன்-182,, எஸ்.பதுமன்-181, ஜீ.பிரி யாங்கி-179, யூ.தீபிகா-173, எஸ்.கே.யனுஸ் ஜக்சன்-173, ரி.பிரியந்தி-172, என்.ஸ்ரீகிருஷ்ணா-170, எஸ்.அபிஷாந்-169, எஸ்.தாரு ஜன்-169, சி.சுலோசனா-168, ஆர்.சஞ்ஜய்-168, கே.திஷானுஜன்-168, வி.விதுர்ஷன்-167, ஏ.லக்சிகா-167, பி.சத்தியகரன்-166, எஸ்.பவ தாரணி-166, எம்.கோபிகன்-165, கே.சிவ கஜன்-165, எஸ்.சாரங்கன்-163, ஜோ.ஜக் ஷயன்-161, ரி.டானியல் ஜனுதாஸ்-161, பி.சாம்சன்-161, எஸ்.நர்த்தனன்-160, பி.பிருந் தன்-160, யு.யூடிஸ் வர்ஷன்-160, எஸ். துஷியந்தி-160, ஆர்.விஷ்னுகாந்தன்-159, வி.கனுசன்-159, எஸ்.தமிழினி-159, எஸ். கோகுலப்பிரியன்-158.

**கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**
லி.ரஞ்சனரம்யா - 174, பா.றனோஜன்- 172, பா.டிலக்சன்- 167, யோ.மதுஷா- 161, ப.பானு ஜன்- 158, ந.தீபநேசன்- 158.

**மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை**
ர. கோகிலா 187, ம. டினோஜன் 183, க. கனு சிகன் 180, கு. அபிரா 178, ஜீ. சானுசன் 176, க. கம் சன் 174, சி. சாருண்ஜா 173, த.சங்கவி 172, வி.அபினாஸ் 172, சு.ஜோய்சரோன் 171, கோ. அபிஷா 169, ச. சயிந்தன் 166, கு. அசானிகா 165 சு. சங்கீரத்தனா 163, பு. வேணுஜன் 161. (வ- 9)

**வவுனியா அல்-அமீன் முஸ்லிம் மகா வித்தி.**
மஹ்சூன் முகம்மது நிஸாத்-161, சமுர்தீன் பாத்திமா ரீமா-162

**மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**
ந.மேரிறக்ஷனா -185, இ.கபிலன்- 167, க.அபிநயன்- 167, ம.நிதர்சனா- 167.


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
24.01.1959

ஆண்டவன் அடியில்
25.10.2012

திருமதி
**தவராணி தவராசா**
திதி: தசமி (03.10.2014)

விழிகள் நனைகிறது
வேதனை நெஞ்சை முட்டுகிறது
தாயின் வருகைக்காய் குஞ்சுகள் காத்திருந்து
காலம் தான் கரைகிறதே!
ஒரு நாளா? இருநாளா ஈராண்டுகளானதம்மா
மனமென்ற சிறையிலே குடிகொண்ட நினைவுகளை
மனந்திறந்து சொல்லாது
மனதோடு அழுகின்றோமம்மா
நெஞ்சமதைக் கல்லாக்கி கொஞ்சமதை மறந்தாலும்
மறையாத உங்கள் நினைவுகளை
மாண்புடனே சுமந்திடுவோம்
மண்ணிலே நாங்கள் மானிடராய் வாழும் வரை.

(52427)(10.6.3)

இல.115/2, ஆலடி வீதி,
தோணிக்கல், வவுனியா.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
மணியம்
ரவீந்திரன்
(ரவி)



தோற்றம்
25.10.1966

மறைவு
12.10.2013

கருவறை உறவாய், கல்லறை முடிவாய்
காற்றினில் கலந்தவனே - ரவி
உன் பாசக்குரல் அம்மா கதற!
உன்னைத் தோளில் சுமந்த அப்பா குமுற!
உன் பின்னால் வலம்வந்த தம்பிமார் ஏங்கித்தவிக்க!
உன் நண்பர் குழாம் திகைத்து நிற்க
உன் சொந்த உறவுகள் பதைபதைத்துப் போக
நீ எம்மைவிட்டு ஓராண்டு எங்கே! எங்கே!

நீ தலைவனாய் இருந்து
எம்மை எல்லாம் கைதூக்கிவிட்டாய்
நாடுவிட்டு வெளிநாடு சென்றாய்
உன் குடும்பத்தை மட்டுமன்றி பல குடும்ப விடிவுக்காய்
பலரை வெளிநாடு அழைத்தாய் - ஆனால்
உன்னால் உயர்வுபெற்ற பலர்
கண்ணீரில் நனைய - நீ
கரைகாணா இடத்திற்கு சென்றுவிட்டதென்ன
இன்று எம் இதயம் வலிக்கிறது - ரவி
உன் இழப்பைத் தாங்க முடியவில்லை - ரவி
உன் நினைவிலே துடிக்கின்றோம்
மறுபடியும் தாய் மடியில் வரமாட்டாயா?
ஓராண்டு சென்றாலும்
நீங்காது உன் துயர்...

T. மணியம்
புறாமார்க் வாணவெடித் தொழிற்சாலை
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(52740)(7.6.3)


# வாணி விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.3
யாழ்ப்பாணம், தாவடி நியூட்டன் அக்கடமியின் வாணி விழா நிகழ்வுகள் நாளை சனிக் கிழமை பி.ப.2.30 மணிக்கு அக்கடமி மண்டபத்தில் நடை பெறும். நிர்வாகி மதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் மாண வர்களின் கலை நிகழ்வுகளும் சிறப்பு பட்டி மன்றமும் இடம் பெறும். (வ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.3
யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசம் நடத்தும் வாணி விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும். விழாவில் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வு களும் இடம்பெறும். (வ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.3
யாழ் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியா லயத்தின் வாணி விழா இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மாணவர் களின் கலைநிகழ்வுகளுடன் நடைபெறும். (வ-ரி)

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆல யத்தில் இன்று வெள்ளிக்கிழமை அபிஷேகத்தை தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு நவராத் திரி பூசைவழிபாடுகள் நடை பெறும். (வ-17)

★ ★ ★

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆராதனை மண்டபத்தில் நடைபெற வுள்ளது. சைவ மன்றத் தலைவர் செல்வன் சி.கமல்ராஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி சோமேசசுந்தரி கிருஷ் ணகுமார் கலந்துகொள்வார். (வ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.3
கோப்பாய் வடக்கு, இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு விசேட பூசைகளுடன் மானம்பூ உற்சவம் நடைபெறும். (வ-17)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு வதரியீட விநாயகர் ஆல யத்தின் மானம்பூ திருவிழா இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு நடை பெறும். மானம்பூ உற்சவத்தை முன் னிட்டு இன்று மாலை 4 மணிக்கு விசேட பூஜை அபி ஷேகம் இடம் பெற்றுசுவாமிவீதிவலம்வருதல்இடம்பெறும்.(வ-17)


## மரண அறிவித்தல்



**சிவராஜா நிசாந்**

49/1, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராஜா நிசாந் நேற்று முன்தினம் (01.10.2014) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவராஜா - குமுதினி தம்பதியரின் மூத்த புதல்வனும் பிரசாந்தின் (லண்டன்) அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 399 5716

49/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(52797)
(12.6)

# மக்கள் தொகை குறைந்து நிலப்பரப்பு எஞ்சும் அபாயம்



யாழ்ப்பாணம்.ஒக்.3

இளைய தலைமுறையினர் நாட்டைவிட்டு வெளியேறுவதால் எமது இனத்தின் விகிதாசாரம் வீழ்ச்சி கண்டு வருவதுடன் இந்த நிலை தொடருமானால் மிகப் பரந்த நிலப்பரப்பில் வாழ்ந்து வரும் எமது மக்களின் தொகை குறைவடைந்து நிலப்பரப்புக்கள் மட்டுமே எஞ்சுகின்ற அபாயம் ஏற்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

சாவற்கட்டு கிராமத்திலிருந்து சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டு பாதிப்புக்களை எதிர்கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் வாழ் வாதார உதவிகள் வழங்கும் செயற்திட்டம் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற நிலையில் அவர்களின் தொழில் முயற்சியை மீளக்கட்டியெழுப்புவதற்காக கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரனின் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

இளம் தலைமுறையினர் இந்த மண்ணைவிட்டு வெளியேறுவதைத் தவிர்த்து, தாம் தமது சொந்த மண்ணில் வாழ வேண்டும் என்ற மனோ நிலையை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

கடந்த போரால் எமது பிரதேசங்களில் இளம் தலைமுறையினருக்கு பல வழிகளிலும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. அதனால் அன்று இளம் தலைமுறையினர் பாதுகாப்புத் தேடி நாட்டைவிட்டு வெளியேறினார்கள். ஆனால் இன்று அந்த நிலைமை மாற்றம் பெற்றுள்ளது. போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள இயல்புச் சூழல் மக்களின் வாழ்வியலுக்கு ஏற்ற அனைத்து சாதகத்தன்மைகளையும் கொண்டுள்ளன.

இந்தநிலையில் இன்றும் எமது இளைஞர்களும் யுவதி களும் நாட்டைவிட்டு வெளியேறுவதும் உயிராபத்துக்கள் நிறைந்த கடற்பயணங்களை மேற்கொண்டு பாதிப்புக்களை எதிர்கொள்வதும் ஏற்புடையதல்ல. அதுமட்டுமன்றி வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தமது சொத்துக்களை விற்று பய ணிக்க தலைப்பட்டு அது தோல்வியில் முடிந்ததும் அவர்களும் அவர்களின் குடும்பங்களும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படுவதும் வேதனைக்குரியது.

எனவே பாதுகாப்பு என்ற நோக்கங்களுக்கு மாறாக வெளிநாட்டுச் சுகபோக வாழ்க்கை என்ற கனவே இன்று இளைஞர்கள் மத்தியில் மேலோங்கிக் காணப்படுகின்றது.

அந்த கனவு அவர்களை மட்டுமன்றி அவர்களைச் சார்ந்தவர்களின் எதிர் காலத்தையும் அழித்து விடுகின்றது" என்று கூறினார். (வ-14)

## பழந்தமிழர் வாழ்வியல் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் கோரல்

யாழ்ப்பாணம்.ஒக்.3

பழந்தமிழர்களின் வாழ்வியல் நடைமுறைகள் மற்றும் அவர்களது வழிபாட்டு முறைகள் உணவு முறைகள் என்பவற்றை ஆவணப்படுத்தும் நோக்குடன் யாழ். பழந்தமிழர் இயக்கத்தினால் ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

பழந்தமிழர்கள் மாநாட்டை மூன்றாவது தடவையாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் கொண்டாடவுள்ள நிலையில் இந்த மாநாட்டில் நூல் வடிவில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியீடு செய்யவதற்கு இந்த ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

பழந்தமிழர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் இந்த ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க முடியும். ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக ம.வித்தியானந்தநேசன், நிறுவுநர், பழந்தமிழர் இயக்கம், இல-7 கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தமது கட்டுரைகளை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## கணினி பயிற்சி நிலையத்தை இடமாற்றுவதை நிறுத்துக

### பெற்றோர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.3

தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் யாழ்ப்பாணத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கட்டடத்தில் நடத்தப்படுகின்ற கணினி பயிற்சி நிலையத்தை வேறிடத்துக்கு மாற்ற வேண்டாம் என்று பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது பயிற்சி நடைபெற்று வரும் இடத்துக்கு அண்மையில் ஆளுநர் அலுவலகம் மற்றும் மாவட்டச் செயலகம் என்பன உள்ளன. இதனால் எமது பிள்ளைகள் கற்பதற்கு பாதுகாப்பான இடமாக இது காணப்படுவதுடன் போக்குவரத்துக்கு இலகுவானதாகவும் உள்ளது. தற்போது கணினி பயிற்சி வகுப்புக்களை மக்கள் நடமாட்டம் குறைவாக உள்ள தனியாரின் வீடொன்றுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அங்கு நடைபெறுகின்ற பயிற்சி வகுப்புக்களில் ஆண் பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் இணைந்து கற்கின்றனர். எனவே பிள்ளைகளுக்கு போதுமானளவு பாதுகாப்பு கிடைக்காது. இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படலாம்.

தற்போது எமது நாட்டில் நடைபெறுகின்ற கலாசார சீரழிவுகளை மனதில் கொண்டு இந்த பயிற்சி நிலையத்தை தற்போதுள்ள இடத்திலிருந்து புதிய இடத்துக்கு மாற்ற வேண்டாம் என்று பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ)

## வயலின் சங்கீத வகுப்புகள்

தென்மராட்சி கலை மன் றத்தினர் விஜயதசமி தின மான இன்று வயலின், சங்கீதம் ஆகிய வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளனர். வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் பி.ப. 3 மணிக்கு சாவக்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள கலை மன்றத்துக்கு வருகை தருமாறு மன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் அறிவித்துள்ளார். (வ-9)

## மானம்பூ திருவிழா

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலய நவராத்திரி விரத பூஜை கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து வசந்த மண்டப பூசை இடம்பெற்று கண்ணகியம்மன் வீதிவலம் வந்து வட்டுமத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள இலுப்பையடி ஞான வைரவர் ஆலயத்தில் கன்னி வாழை வெட்டும் வைபவம் இடம்பெறும். (வ)

## திருவிவிலிய கண்காட்சி

கொழும்புத்துறை, ஒக்.3

யாழ்.மறைக் கல்வி நடுநிலையம் நடத்தும் மாபெரும் திருவிவிலியக் கண்காட்சி நாளை 4 ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

'இறையாட்சி உங்களிடையே' என்னும் தொனிப் பொருளில் யாழ்.மறைக் கல்வி நடுநிலையத்தில் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கண்காட்சி நடைபெறும்.

திருவிவிலியக் கண்காட்சி பொம்மலாட்டம் மறைக்கல்வித் திரைப்படங்கள் விவிலிய விளையாட்டுக்கள் என்பன இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் - தீவகம், கிளிநொச்சி மறைக் கோட்டப் பகுதியினரும் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பருத்தித் துறை, இளவாலை முல்லைத்தீவுமறைக் கோட்டம் பகுதியினரும் கண்காட்சியை பார்வையிடலாம்.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் தீவகம், கிளிநொச்சிப் பகுதி பாடசாலை மாணவர்கள் 7ஆம் திகதி பருத்தித்துறை, இளவாலை, முல்லைத்தீவு பகுதி பாடசாலை மாணவர்களும் பார்வையிட ஒழுங்குகள் மேற்கொள்ளபட்டுள்ளதாக மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் தெரிவித்துள்ளார். (வ-135)

அழைப்பு



மாமனிதர் குமார் பொன்னம்பலம்
அவர்களது 76 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு
ஞாபகார்த்த நினைவு பேருரை
தலைப்பு
"ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் விசாரணையும் தமிழ் மக்களின் எதிர்காலமும்"
உரை நிகழ்த்துபவர்
[illegible] இரத்தினவேல் சிரேஷ்ட சட்டத்தரணி
[illegible] 2014) சனிக்கிழமை
காலம் : நாளை (04.10.2014) [illegible]
நேரம் : பி.ப 3.30 - 6.30 மணிவரை
இடம் : திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகம், இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



மேற்படி நிகழ்வில்
தாங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்
மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு,
இல. 136, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 302 4316
(C/16723)(10.6)

காணி விற்பனைக்கு
பலாலி றோட், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயில் 11½ பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உள்ளது.
No Brokers
(52795) (7.6.3)
தொ.பே: 076 524 9811, 076 670 3897

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
THE JAFFNA EDUCATION CENTRE
செல்லா தியேட்டருக்கு முன்பாக (மேல் மாடியில்)
Spoken English with Grammar
"சிங்களம்"
Shorthand Typing.இரு மொழிகள் மூலமும் ESOL, IELTS ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 03.10.2014
ஆசிரியை: இ.லோகநாயகி
(32793) (12.3.6)
TP No: 076 669 8953


பாராட்டி வாழ்த்துகின்றோம்



[illegible]
தேசிய பாடசாலை
மாணவி
செல்வி லீனஸ் ஆருண்யா
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் (2014) 167 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார். மேலும் உயர் கல்வியைக் கற்று சிறப்புக்களைப் பெற வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
சித்தப்பா குடும்பம்
த.தனராஜ், த.நதி,
த.தஸ்மிதன், த.லித்திகா
அளம்பில், முல்லைத்தீவு.

YOUTH COMPUTER SERVICES PVT Ltd.
விஜயதசமியை முன்னிட்டு புதிய பிரிவுகள்
[illegible] 10 தரம் 11 மாணவர்களுக்கான ICT
தரம் 10 [illegible] திகதி முதல் ஆரம்பம்
வகுப்புக்கள் 04.10.2014 [illegible]
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை, ஆரம்பத்திலேயே இணைந்து முழுப்பயன் [illegible]
- முழுமையான செய்முறை வகுப்புக்கள்
- தமிழ் மொழியிலான விளக்க குறிப்புக்கள்
- அலகு ரீதியான மாதாந்த, வார பரீட்சைகள்
- தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்.
பதிவுகள் 03.10.2014 வரை
தொடர்புகளுக்கு : YOUTH COMPUTER SERVICES PVT Ltd. 26, Seenivasagam Road Jaffna
0213214927/0779847813

# இன்று வண்ணை வேங்கடேஸ்வரர் தேரேறி வருகிறார்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற காத்தற் கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தி வண்ணையம்பதியில் வேங்கடேஸ்வரராக வீற்றிருந்து இன்று தேரேறி வருகின்றார். அடியார்களால் 'பெருமாள் கோயில்' என்று அழைக்கப்படுகிற இந்த வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் இன்று தேர்த்திருவிழா.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்கின்ற வேங்கடேசப் பெருமான் தமது அருட் சக்திகளான ஸ்ரீ தேவி, பூமிதேவி சகிதம் அலங்கார பூஜிதராக இன்று சித்திரத் தேரேறி சிங்காரப் பவனி வருகின்றார். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்தவராகிய பெருமாள் பக்தர்களைக் காத்து ரட்சிக்க இன்று தேரேறி வருகின்றார். வருடாந்த மஹோற்சவத்திலே அழித்தலைக் குறிக்கின்றதாக இன்று ரதோற்சவம் இடம்பெறுகிறது. அநியாயங்களையும் அக்கிரமங்களையும் இல்லாதொழிக்க எம் பெருமான் ரதத்திலே ஆரோகணிக்கின்றார். இன்றைய அலங்காரத் தேர்ப் பவனியைக் காண்பதற்கு நாம் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

சித்திர ரதத்தினிலே ஆரோகணித்து வருகின்ற வேங்கடேசப் பெருமாள் திருவருள் பெற அதிக எண்ணிக்கையிலான அடியார்கள் இன்று இந்த ஆலய வீதியிலே கூடுவார்கள். தம்மை வழிபட்டு நிற்கும் மெய்யடியார்களை பெருமான் ஒருபோதும் கைவிடமாட்டான். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் வேங்கடேசப் பெருமானின் தேர் வடம் பிடித்திழுத்தால் சொர்க்கத்திலே ஓர் இடம்பிடிக்கலாம் என்பது ஆன்றோர் நம்பிக்கையாகும். ஆதலால்,

அடியார் பெருமக்கள் அனைவரும் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு முண்டியத்துச் செல்லும் பக்திப் பரவச நிலை சொல்லுந்தரமன்று.

**"பச்சை மாமலைபோல் மேனி பவள வாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே"**

என்ற ஆழ்வார் பாசுரம் ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியின் பெருங் கருணைத் திறனை வியந்து போற்றுவதைக் காணலாம். ஊர் கூடித் தேர் இழுக்கின்ற இன்றைய ஆனந்த கோலாகல நிகழ்வு மிகவும் பக்தி பூர்வமானது. மக்கள் வெள்ளத்தின் நடுவே மங்கலகரமாக பெருமானின் ரதம் ஆடி அசைந்து வருகின்ற அற்புத கோலாகலக் காட்சியை இன்று வண்ணையம்பதி பெருமாள் ஆலயத்தில் காணலாம். பத்மசாலி எனப்படுகின்ற பண்டாரவளைச் செட்டிமார் பரம்பரையினரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்ற இந்தக் கோயில் வானளாவ உயர்ந்த கம்பீரமான இராஜகோபுரத்துடன் அழகாகக் காட்சி தருகின்றது.

வருடந்தோறும் 10 நாள் உற்சவம் மிகச் சிறப்பாக நடை பெறுகின்றது. ஏகாதசியைத் தீர்த்த நாளாக கொண்டு நிகழும் இந்தக் கோயில் மஹோற்சவம் தினசரி மிகவும் விமரிசையாகப் பக்தி பூர்வமாக நிகழும். அடியார்க்கருளும் பெருமானாக விளங்கும் வேங்கடேசன் தன்னைக் கைதொழுதேத்தும் அடியவர்க்கு அருள் பாலிக்கும் பாங்கு சொல்லிமாளாது. ஆகவே இன்றைய தேர்த்திருவிழா நன்னாளில் மகா விஷ்ணு மூர்த்தியை வணங்கி போற்றித் [illegible] துதித்து அவனருளாலே அவன்தான் வணங்கி உய்தி பெற்று நற்கதி அடைவோமாக.

கலாபூஷணம்:இராசையா ஸ்ரீதரன்

# சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.3

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வட பிர தேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெற வுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இளைஞர் விவகார அமைச்சின் வடமாகாண ஓய்வுநிலை பணிப்பாளர் தி.சிவ.தட்சணாமூர்த்தி கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ். மோகனகுமார், யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் சி.அனுராஜ், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் எஸ்.சிவகுமார், ஹெல்தி லங்காவின் வடமாகாண இணைப்பாளர் சி.சிவநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் 9பேருக்கு நியமனம்

பளை, ஒக்.3

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் நிலவும் அட்டவணைப் படுத்தப்படாத பதவி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் 9 ஊழியர்களுக்கு நேற்று முன்தினம் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

பிரதேச சபை கேட்போர்கூட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச சபைத் தலைவர் பெ.டோ.அன்ரன் சிற்றூழியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ- 9)

# யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக்.3

புதிய யோகாசன, தியான வகுப் புகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு உரும்பிராய், மருதனார்மடம் வீதி, இல.17 இல் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன. (வ)

# செயலமர்வு

கரணவாய், ஒக்.3

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சித்திரபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணி முதல் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இதில் தரம் 11 முதல் 13 வரையான வகுப்புக்களில் சித்திரபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது பங்குபற்ற ஆவன செய்யுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-108)

# காந்தி தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் காந்தி தின விழாவும் தமிழ்த் தினமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக வருகை நிலை விரிவுரையாளர் பண்டிதர் ம.ந.கடம் பேஸ்வரன் கலந்துகொள்வார். (வ)

# 80 மணிநேரம் சமுதாயப் பணி செய்ய உத்தரவு

தென்மராட்சி ஒக்.3

மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதி மன்றில் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)


## வீடு வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் 68ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மாடி வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (52805)(7.6.3)

தொடர்பு: 077 582 3346, 077 969 0615

## துளிர்கள் நிறுவனத்தின்

இலவச உள ஆற்றுப்படுத்தல் Counseling கற்கை நெறி சமூக சேவையில் ஆர்வமுள்ள இருபாலாரும் 15.10.2014 முன் தங்கள் சுயவிவரங்களைத் தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பி பதிவுக்கு முந்துங்கள். (52802) (7.6.3)

பணிப்பாளர், துளிர்கள்.
30, கர்பஸ் லேன், திருநெல்வேலி.





## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியர்
செல்வி சி.மாலினி
அவர்களின் பெறாமகன்
**சிவராஜா நிசாந்**


அவர்களின் மரணச்செய்தி கேட்டுத் துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம், (52799) (43.6.3)
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்.

எப்பவோ முடிந்த காரியம்

## 13 ஆம் ஆண்டு நினைவுதினம்
## 03.10.2014

மலர்வு 01 . 03 . 1939



உதிர்வு 03 . 10 . 2001

**அமரர் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு**

(வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும், ஜீவதானியும், சிவயோக சுவாமிகளின் அடியவரும்)

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

**"எனையீன்ற தந்தைக்[illegible] [illegible]குமெ தாயக்கும் - மக்கள் [illegible]னைமன்ற தமிழ்நாடு தனக்கும் - என்னால் தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால் செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்"**

இன்று (03.10.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட இலங்கை சர்வோதய சேவை வளாக புஸ்பாமணி மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு, மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்]

வட இலங்கை சர்வோதயம் புங்குடுதீவு-3

வட இலங்கை சர்வோதய குடும்பத்தினர். (52754)(4.3.6)


## யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

O/L சித்தியடையவில்லையா?
ஆங்கிலம் சித்தியடையவில்லையா?
கவலையை விடுங்கள்!

100% விசா உத்தரவாதம்

**Singapore, Malaysia, Mauritius இல் தொழிலுடன் கூடிய கல்வி வாய்ப்புக்கள்!**

- எவ்விதமான முகவர் கட்டணமும் இல்லை
- பாடநெறியின் முடிவில் PR பெற்றுக் கொள்வதற்கான வசதிகள்
- பின்னர் உங்கள் கனவுலக நாட்டு விசாவை பெற்றுக்கொள்ளும் வழிகள்

FREE
Air Ticket
Accommodation
Sim card
Transport From Airport to Accommodation

உங்கள் கனவை [illegible] எம் மூலம் நனவாக்குங்கள்!
உங்கள் கலாசார சூழலுடன்

**Coss Jaffna (Pvt) Ltd**
381B, Stanley Road, Jaffna.
Tel: 021 221 7552, 011 564 4440,
Mobile:076 7561 346, Fax:011 221 7552
E-mail: cossjaffna@gmail.com
(C/16670)(10.3)

# ஐ.எஸ்.ஐ.எஸ்.வசமாகியது பக்தாத் இராணுவத் தளம்

## 300 படையினர் சாவு



பக்தாத், ஒக்.3
அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் வான்வழித் தாக்குதல்களுக்கு இடையே ஈராக் தலைநகர் பக்தாத் அருகே உள்ள இராணுவத் தளத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.
அந்த முகாமில் இருந்த 300 படையினர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஈராக்கில் சன்னி பிரிவைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் கைப்பற்றிய இஸ்லாமிய தேசம் பகுதியில் அமெரிக்க இராணுவம் கடந்த மாதம் தொடக்கம் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.
இதற்கு பழி தீர்க்கும் வகையில் ஷியா பிரிவினர் வாழும் பகுதிகளில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
பக்தாத் அருகே உள்ள ஈராக் இராணுவ தளத்தை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர். அந்தமுகாமில் இருந்த 300 படையினரை அவர்கள் கொலை செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இது போல் ஷியா பிரிவினர் பெருமளவில் உள்ள பல இடங்களில் கொடூரத் தாக்குதல்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்தியுள்ளனர்.
மேலும் சப் அல் போர் நகரில் அவர்கள் கையெறி குண்டுகள் வீசியதில் 5 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயம் அடைந்தனர். (வ)

# 41 மாணவர் சாவு

## சிரிய பாடசாலை குண்டுவெடிப்பில்

பெய்ரூட், ஒக்.3
சிரியாவின் கோம்ஸ் நகரிலுள்ள அரச பாடசாலையில் நேற்று முன்தினம் இரண்டு குண்டுகள் வெடித்ததில் 41 மாணவர்கள் உயிரிழந்தனர் என்று மனித உரிமைகள் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.
ஐ.எஸ். தீவிரவாதிகளால் சீர்குலைந்துள்ள சிரியாவின் கோம்ஸ் நகரிலுள்ள பாடசாலைக் குழந்தைகளை குறிவைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
அரச பாடசாலையில் மாணவர்கள் கல்வி பயின்றபோது இந்தக் கோரச் சம்பவம் நடைபெற்றுள்ளது. குண்டு வெடிப்பில் சுமார் 41 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.
மேலும், பாதுகாப்பு படையினர், பொதுமக்கள் என 10 இற்கும் மேற்பட்டோர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும், பல மாணவர்களை காணவில்லை என்று சிரியா மனித உரிமைகள் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.காயம்அடைந்த மாணவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.
பாடசாலையில் ஒரு தீவிரவாதியே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளான் என்று கூறப்படுகிறது. ஒரு குண்டை பாடசாலையில் வைத்துவிட்டு மற்றொரு குண்டை அவனே வெடிக்க செய்துள்ளான். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்க வில்லை. இருப்பினும் அல்கொய்தாவுடன் தொடர்புடைய இயக்கம் ஒன்று அந்தப் பகுதியில் பல்வேறு முறைகளில் இரட்டை குண்டு தாக் குதல்களை நடத்தி வருகிறது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



ஜேர்மனியிலுள்ள மூனிச் நகரில் செவ்வாய்க்கிழமை குளோனிங் கோழிகளுக்கு எதிராக சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது மிகப்பெரிய கோழி பொம்மை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

# கலிபோர்னியா முதல்வர் சுட்டுக்கொலை

கலிபோர்னியா, ஒக்.3
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாண முதல்வர் டேனியல் கிரெஸ்போ சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
இதுதொடர்பாகப் பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், குடும்பத்தகராறு காரணமாக டேனியல் கிரெஸ்போ கொல்லப்பட்டதாகத் தெரியவந்தது.
இந்தச் சம்வபவத்தில் அவரது மனைவி லைவிட்டோகிரிஸ்போ மற்றும் அவரது மகனுக்கு தொடர்பு இருக்கலாம் என்று கூறப்பட்டது. அதனையடுத்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகரப் பொலிஸார் லைவிட்டோ கிரிஸ்போவைக் கைது செய்து விசாரணைக்குப் பின்னர் விடுவித்ததுடன் தொடர்ந்து,விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

# முதன்முறையாக அமெ.ஒருவருக்கு எபோலா

வொஷிங்டன், ஒக்.3
அமெரிக்காவில் முதல் முறையாக ஒருவருக்கு எபோலா நோய் கண்டிருப்பது மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியாவில் அந்த நபருக்கு எபோலா தொற்று ஏற்பட்ட தாகவும், அதன் பின்னர் அவர் டெக்ஸாஸுக்கு வந்ததாகவும் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் கூறுகையில்;
"எபோலா நோய்க்கான அறிகுறிகளுடன் அந்த நபர் டெக்ஸாஸ் ஹெல்த் பிரஸ்பைடேரியன்' மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அவர் அண்மையில் லைபீரியாவுக்குச் சென்று வந்ததை அறிந்த மருத்துவர்கள் அவரைத் தனிமைப்படுத்தி மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டனர். அதில், அவருக்கு எபோலா நோய் இருப்பது தெரியவந்தது'' என்று தெரிவித்தனர்.
ஏற்கெனவே எபோலா நோயால் பாதிக்கப்பட்ட பலர், சிகிச்சைக்காக விமானம் மூலம் அமெரிக்காவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். எனினும், அமெரிக்காவில் நடைபெற்ற பரிசோதனையில் ஒருவரிடம் எபோலா நோய் கண்டறியப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும். மேற்கு ஆபிரிக்க நாடுகளில் வேகமாகப் பரவி வரும் இந்த நோய், இதுவரை 6,574 பேரைத் தாக்கியுள்ளது என்றும் - இதில் 3,091 பேர் இந்த நோயால் உயிரிழந்ததாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (வ)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு உணவு ஈராக் விமானப்படையே வழங்கியது

பக்தாத், ஒக்.3
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு ஈராக் விமானப்படை உணவு விநியோகித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ஈராக் மற்றும் சிரியா பகுதிகளை இணைத்து தீவிர இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்தியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், அந்தநாட்டு அரச படைகளுக்கு எதிராக போரிட்டு வருகின்றனர்.
இந்தநிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளை அழித் தொழிக்கும் நடவடிக்கையில் ஈராக்கிய படைகளுடன் இணைந்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினரும் வான் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.
ஈராக்கின் மேற்குப் பகுதியில் உள்ள சக்லாவ்யா என்ற பகுதியில் தீவிரவாதிகளுடன் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக ஈராக் இராணுவம் போரிட்டு வருகின்றது.
அவர்களுக்கு உணவு, தண்ணீர், தளபாடங்கள் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குத் தேவை ஏற்பட்டதையடுத்து ஆகாய மார்க்கமாகப் போர் நடக்கும் பகுதிகளில் அவற்றை வீச அரசு முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து விமானப் படைப் பிரிவைச் சேர்ந்த சில விமானிகளின் தலைமையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.
ஆனால் அவர்கள் தவறுதலாக தீவிரவாதிகள் நிறைந்த பகுதியில் இந்தப் பொருள்களை வீசியுள்ளதாகப் பின்னர் தெரியவந்தது என்று மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவரும், பிரிகேடியர் ஒருவரும் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.
குறித்த விமானிகள் அனைவரும் புதிதாக பயிற்சிக்கு வந்துள்ள இளைஞர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பு மற்றும் இராணுவக் குழுவில் பணி புரியும் நாடாளுமன்ற உறுப்பினரான ஹக்கீம் அல் சமிலி இதனை உறுதி செய்துள்ளார்.
இந்தச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட உள்ளதாக இருவரும் தெரிவித்துள்ளனர். (வ)

# விடைபெற்றார் உலகை சுற்றி வந்த முதல் பெண்


வொஷிங்டன், ஒக்.3
விமானத்தில் தனியாக பயணித்து உலகை சுற்றி வந்த முதல் பெண் விமானியான ஜெரால்டைன் ஜெரிமாக் உயிரிழந்துள்ளார். அவர் தனது 88 ஆவது வயதில் செவ்வாய்க்கிழமை உயிரிழந்



துள்ளார். ப்ளோரிடாவில் உள்ள அவரது இல்லத்தில் ஜெரால் டைன் இறப்பைத் தழுவியதாக அவரது தோழியான மேரி கெல்லி கூறியுள்ளார். 1964 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி தனது 38 ஆவது வயதில் செஸ்னா 180 என்ற சிறிய ரக விமானத்துக்கு ஸ்பிரிட் ஆப் கொலம்பஸ் என்றுபெயரிட்டு ஒஹியோவில் உள்ள கொலம்பஸ் விமான நிலையத்தில் இருந்து உலகை சுற்றி வர புறப்பட்டார் ஜெரால் டைன். 5 அடி உயரமும், 45 கிலோ எடையும் கொண்ட அவர் 29 நாள்கள் விமானத்தில் பயணம் செய்து 23,103 மைல் தூரத்தைக் கடந்து வெற்றிகரமாக மீண்டும் கொலம்பசுக்கு திரும்பினார். ஒஹியோ பல்கலைக் கழகத்தில் ஏரோநாட்டிகல் பொறியியல்துறையில் கற்ற முதலாவது பெண்மணி என்ற பெருமையைப் பெற்ற ஜெரால்டைன் 1958 ஆம் ஆண்டிலிருந்து விமானத்தில் பறந்து வந்தார். அப்போது அவருக்கு 32 வயது தான் இருக்கும். தான் விமானத்தில் உலகைச் சுற்றி வந்த அனுபவத்தை புத்த கமாக 'த்ரீ-எய்ட் சார்லி' என்ற பெயரிட்டு அவர் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

# கார் குண்டு தாக்குதல் ஈராக்கில் 63 பேர் சாவு

ஈராக்கில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் வெவ்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட கார் குண்டு, பீரங்கித் தாக்குதல்களில் 63 பேர் உயிரிழந்துள்ளனர்.
இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது:
தலைநகர் பக்தாத்தின் வட மேற்குப் பகுதியில் கார் குண்டு வெடித்ததில் 8 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர். நகரின் மற்றோர் பகுதியில் நிகழ்த்தப்பட்ட கார் குண்டுத் தாக்குதலில், 7 பேர் உயிரிழந்தனர். 21 பேர் காயமடைந்தனர். மற்றும் ஒரு பகுதியில் பயங்கரவாதிகள் நிகழ்த்திய சிறு பீரங்கித் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர். குறித்த மூன்று தாக்குதல்களும் பக்தாத்தில் ஷியா பிரிவினர் அதிகளவில் வசிக்கும் பகுதிகளைக் குறி வைத்து நிகழ்த்தப்பட்டன. இதற்கிடையே, ஷியாக்களின் புனித நகரான கர்பாலாவில் நிகழ்த்தப்பட்ட கார் குண்டு வெடிப்பில் பொதுமக்கள் 4 பேரும், 2 பொலிஸாரும்



உயிரிழந் தனர். 16 பேர் காய மடைந்தனர். பக்தாத்துக்கு 50 கி.மீ. தொலைவிலுள்ள இஸ்காந்தரியா நகரில் நிகழ்த்தப்பட்ட மற்றொரு கார் குண்டுத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர். ஈராக்கின் தெற்குப் பகுதி நகரமான நஜஃபில் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் 14 பேர் உயிரிழந்தனர். ஷியா பிரிவினர் அதிகம் வசிக்கும் ஹெறரெய்யா மாகாணத்தில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நிகழ்த் தப்பட்ட இரு வேறு கார் குண்டுத் தாக்குதல்களில் 11 பேர் உயிரிழந்தனர். 32 பேர் காயமடைந்தனர். மேலும், பக்தாத்தின் ஜஃபாரானியா பகுதியில் கார் குண்டு வெடித்து இருவர் உயிரிழந்தனர். 9 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஏற்கெனவே நிகழ்த்தப்பட்ட இதோபோன்ற பெரும் பாலான தாக்குதல்களுக்கு, ஈராக்கில் மூன்றிலொரு பகுதியைக் கைப்பற்றியுள்ள இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (வ)

# மனித எலும்புக் கூடு ரயில் பெட்டியில் மீட்பு

## ஹைதராபாத்தில் பரபரப்பு

ஹைதராபாத், ஒக்.3
ரயில் பெட்டியொன்றின் கழிவறையில் மனித எலும்புக் கூடொன்று மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் ஹைதராபாத்தில்பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.
விசாகப்பட்டணம் - ஹைதராபாத் இடையே பயணிக்கும் விசாகா எக்ஸ்பிரஸ் ரயிலின் இரண்டு பெட்டிகள் மட்டும் கடந்த 16 ஆம் திகதி பராமரிப்பு பணிகளுக்காக செகந்திராபாத் ரயில்வே பணிமனையில் நிறுத்தி வைக்கப்பட்டன.
அதனைத் தொடர்ந்து ரயில் பெட்டியைப் பழுது பார்க்கச் சென்ற இரண்டு ரயில்வே தொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட ரயில் பெட்டிகளில் இருந்து கடுமையான துர்நாற்றம் வீசுவதாக உயர் அதிகாரிகளுக்குத் தகவல் அளித்துள்ளனர்.
தகவலின் பேரில் விரைந்து வந்த செகந்திராபாத் ரயில்வே பொலிஸார், ரயில் பெட்டியொன்றின் கழிவறையில் மனித எலும்புக் கூடு ஒன்று கிடந்ததைக் கண்டுபிடித்தனர்.
மீட்கப்பட்ட எலும்புக் கூடு ஒரு ஆணினுடையதாக இருக்க வேண்டும் எனச் சந்தேகம் தெரிவித்துள்ள பொலிஸார், அதனைக் கொண்டு வந்து ரயில் பெட்டியின் கழிவறைக்குள் போட்டது யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)



மகாத்மா காந்தியின் பிறந்த தினமான நேற்று அவரது கனவுத் திட்டமான 'ஸ்வச்ச பாரத்- தூய்மை இந்தியா' என்ற திட்டத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்தார்.

# ராணுவ ஹெலி விபத்தில் மூவர் உயிரிழப்பு

பரேலி, ஒக்.3
உத்தரப் பிரதேசத்தில் இராணுவ ஹெலி ஒன்று விபத்துக்குள்ளானதில், இரண்டு விமானிகள் உட்பட 3 பேர் உயிரி ழந்தனர்.
கடந்த திங்கட்கிழமை காலை பரேலி இராணுவத் தளத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இராணுவ ஹெலி விபத்துக்குள்ளானது.
இதில் 2 விமானிகளும், ஒரு பொறி யியலாளரும் உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# புதிய வண்ணப் படத்தை அனுப்பியது மங்கள்யான்

பெங்களூர், ஒக்.3
செவ்வாய்க் கிரகத்தின் முப்பரிமாண புகைப்படத்தை மங்கள் யான் விண்கலம் அனுப்பியுள்ளது. செவ்வாய்க் கிரக சுற்றுவட்ட பாதையில் கடந்த மாதம் 24 ஆம் திகதி நிலை நிறுத்தப்பட்ட இந்தியாவின் மங்கள்யான் விண்கலம் அன்று முதலே செவ்வாய்க் கிரகத்தின் புகைப்படங்களை அனுப்பிவருகிறது. கடந்த திங்கட்கிழமை மங்கள்யான் அனுப்பிய வண்ணப் புகைப்படத்தில் செவ்வாய்க் கிரகத்தின் முப்பரிமாணத் தோற்றம் இடம்பெற்றுள்ளது. செவ்வாய்க் கிரகத்தை முப்பரிமாணத்தில் படம் பிடிப்பதற்காகப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கமரா மூலம் இந்தப் படம் எடுக்கப்பட்டதாக இஸ்ரோ கூறியுள்ளது. (வ)



# தூய்மையான இந்தியா திட்டம் நேற்று ஆரம்பம்

டில்லி, ஒக்.3
மகாத்மா காந்தியின் பிறந்த தினமான நேற்று அவரது கனவுத் திட்டமான 'ஸ்வச்ச பாரத்- தூய்மை இந்தியா' என்ற திட்டத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்தார். இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதில் தாம் மிகவும் பெருமைப் படுவதாக அவர் கூறினார்.
டில்லி இந்தியா நுழைவாயில் பகுதியில், தூய்மை இந்தியா திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரதமர் மோடி, "மகாத்மா காந்தியின் கனவு திட்டமான 'ஸ்வச்ச பாரத்' திட்டத்தை அவரது பிறந்த நாளான இன்று ஆரம்பித்து வைப்பதில் பெருமை கொள்கிறேன். இந்தத் திட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் எனது நன்றி. உலக நகரங்களுடன் ஒப்பிடும்போது, இந்திய நகரங்கள் தூய்மையாக இல்லை என்பதை நம் அறிவோம். 'ஸ்வச்ச பாரத்' திட்டம் குறித்த காந்தியின் கனவு இன்னமும் முழுமை பெறவில்லை. எதிர்வரும் 2019 இற்குள் முழுமையான தூய்மை இந்தியா என்ற இலக்கை அடைவோம். விரைவில் காந்திஜியின் ஸ்வச்ச பாரத் கனவு நிறைவேற அவரது 150 ஆவது ஜெயந்தி தினமான இன்று உறுதி ஏற்போம்" என்று கூறி உறுதிமொழி ஒன்றையும் வாசித்தார்.
அதை அடுத்து, மத்திய அரசு அலுவலகங்களில் பணி புரிபவர்கள் அலுவலகங்களுக்கு வந்து தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர்.
ரயில்வே நிலையங்களில் இந்தத் திட்டம் முழு வீச்சில் நடைமுறைப்படுத்தப் பட்டது.
வாரம் 2 மணித்தியாலம் என வருடத்துக்கு 100 மணி நேரம் இந்தத் தூய்மைப் பணியில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். (வ)

# செவ்வாய்க் கிரக ஆராய்ச்சியில் இந்தியா — அமெ. புதிய கூட்டு

செவ்வாய்க் கிரகம் தொடர்பான ஆராய்ச்சிகளில் இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து செயற்படும் வகையில், இஸ்ரோவுக்கும், நாஸாவுக்கும் இடையே புதிய விண்வெளி ஆராய்ச்சி ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியுள்ளது.
பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை செவ்வாய்க்கிழமை சந்தித்த போது இரு நாடுகள் இடையேயான பொருளாதார உறவுகள், கூட்டு விண்வெளி ஆராய்ச் சித் திட்டங்கள், இந்தியாவில் அமெரிக்க முதலீடுகளை அதிகரித்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேச்சில் ஈடுபட்டார்.
அதைத் தொடர்ந்து, ரொரன்டோ நகரில் நடைபெற்ற சர்வதேச விண்வெளி ஆய்வரங்கத்தில் பங்கேற்ற இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் கே. ராதாகிருஷ்ணனும், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் சார்ள்ஸ் போல்டனும் சந்தித்து நடத்திய பேச்சின்போது இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. (வ)

# அப்சல் குருவின் தூக்குத் தண்டனை உத்தரவு நகலை வெளியிட வேண்டும்

## மத்திய தகவல் ஆணையகம் உத்தரவு

அப்சல் குருவின் தூக்குத் தண்டனை உத்தரவு நகலை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வெளியிட வேண்டும் என்று திகார் சிறை நிர்வாகத்துக்கு மத்திய தகவல் ஆணையகம் உத்தரவிட்டுள்ளது.
2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அப்சல்குரு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தூக்கிலிடப்பட்டார்.
அப்சல் குருவின் தூக்குத் தண்டனை தொடர்பான நகல், தூக்கிலிடப்பட்ட காணொலிப் பதிவு, தண்டனை தொடர்பாக அவரது குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்ட கடித நகல் ஆகியவற்றைத் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் பரஸ்நாத் சிங் என்பவர் கேட்டிருந்தார்.
அந்த விவரங்களை அளிக்க திகார் சிறை நிர்வாகம் மறுத்து விட்டது. அவற்றை வெளியிடுவது தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் என்று சிறை நிர்வாகம் தெரிவித்தது.
இதுகுறித்து, மத்திய தகவல் ஆணையகத்திடம் பரஸ்நாத் சிங் மேல்முறையீடு செய்தார்.
அதையடுத்து மத்திய தகவல் ஆணையாளர் எம். ஸ்ரீதர் ஆச்சாரியலு பிறப்பித்த உத்தரவில், அப்சல் குருவின் தூக்குத் தண்டனை உத்தரவு தொடர்பான நகல்களை திகார் சிறை நிர்வாகத்தினர் வழங்க மறுத்தது சரியானதல்ல. தூக்குத் தண்டனை விவரங்களை வெளியிடுவதற்கும், தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுவதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது?
அப்சல் குரு தூக்கிலிடப்பட்ட காணொலி பதிவையும், அவரைத் தூக்கிலிட்ட அதிகாரியின் பெயரையும் வெளியிட வேண்டாம் எனத் தகவல் ஆணையகம் உத்தரவிட்டது. (வ)

# திருச்சி சென்ற இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டார்


திருச்சி, ஒக்.3
ஒருநாள் நுழைவிசையில் திருச்சிக்குச் சென்ற யாழ்ப்பாண இளைஞரொருவர் விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டார். திங்கட்கிழமை நண்பகல் ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் விமானமொன்று கொழும்பிலிருந்து திருச்சியை வந்தடைந்தது. அதில் வந்த பயணிகளை அதிகாரிகள் சோதனை செய்தனர்.
அப்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயகுமார் (வயது- 38) என்பவர் ஒரு நாள் சுற்றுலா நுழைவிசையில் திருச்சிக்கு வந்திருந்தமை தெரியவந்தது.
அவரிடம் எதற்காக தமிழகம் வந்தீர்கள் என்று அதிகாரிகள் கேட்டபோது, முன்னுக்குப் பின் முரணாகப் பதில் அளித்தார். இதனால் சந்தேகமடைந்த அதிகாரிகள் மத்திய உளவுப் பொலிஸ் மற்றும் கியூ பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.
அவர்கள் வந்து விசாரித்த போதும் அவரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.
அதையடுத்து விஜயகுமாரை விமான நிலையத்தில் இரவு முழுவதும் வைத்திருந்து திங்கட்கிழமை காலை திருச்சியிலிருந்து இலங்கை சென்ற ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விமானத்தில் திருப்பி அனுப்பி வைத்தனர். இந்தச் சம்பவம் திருச்சி விமான நிலையத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. (வ)

# ரயில் விபத்து; 12 பேர் சாவு

வாரணாசி, ஒக்.3
உத்தரப் பிரதேச மாநிலத்தில் இரு எக்ஸ்பிரஸ் ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக் குள்ளானதில் 12 பேர் உயிரிழந்தனர். 45 பேர் காயமடைந்தனர்.
வாரணாசியில் இருந்து கோரக்பூர் நோக்கி வந்து கொண்டிருந்த கிரிஷாக் எக்ஸ்பிரஸ் ரயிலும் லக்னோவில் இருந்து பரூனி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பரூனி எக்ஸ்பிரஸ் ரயிலும் கோரக்பூரில் இருந்து 7 கி.மீ. தொலைவில், ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டன. கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.
45 பேர் படுகாயமடைந்தனர்.



மேலும், 12 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ரயில்வே செய்தித் தொடர்பாளர் அனில் சக்சேனா தெரிவித்துள்ளார். உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.
இந்த விபத்தைத் தொடர்ந்து கோராக்பூர்- வாரணாசி பாதையில் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.
சமிக்ஞை விதிகளை கிரிஷாக் எக்ஸ்பிரஸ் ரயில் சாரதி மீறியதால், அவரை ரயில்வே நிர்வாகம் பணி இடைநீக்கம் செய்துள்ளது.
விபத்து குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக ரயில் பாதுகாப்பு ஆணையாளர் பாஜ்பாய் தெரிவித்துள்ளார். உத்தரப் பிரதேசத்தில் கிரிஷாக் எக்ஸ்பிரஸுடன் பரூனி எக்ஸ்பிரஸ் ரயில் மோதி ஏற்பட்ட பயங்கர விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் நரேந்திர மோடி தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். (வ)



போரா முஸ்லிம் சமூகத்தின் உலக ஆன்மிகத் தலைவரான 53ஆவது டாய் அல் முட்லக் - செய்ட்னா முப்ஃபாடல் சய்பூடீன் சாஹிப், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் நேற்று இடம் பெற்றுள்ளது. மேற்படி சந்திப்பு மிகவும் சுமுகமானதாக நடந்தது என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மிருகங்களை பாதுகாக்க விசேட திட்டம் நடைமுறை

கொழும்பு, ஒக்.3
நாட்டிலுள்ள 7 விசேட வகை மிருகங்களைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தத் திட்டத்தின் கீழ் யானை, புலி, முதலை, கரடி, திமிங்கிலம், ஆமை மற்றும் கொக்கு ஆகியன பாதுகாக்கப்படவுள்ளன என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.டீ ரத்நாயக்க குறிப்பிட்டார்.

“இந்த விசேட மிருகங்கள் தொடர்பில் சுற்றுலாப் பயணிகள் அதிக அவதானம் செலுத்தியுள்ளனர். நாட்டிலுள்ள ஏனைய மிருகங்களைப் பாதுகாப்பதற்கான சூழலை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டினார். (ற)

## தலையாட்ட மறுப்பவர்களை வெளியேற்றும் நடவடிக்கை

### நோனிஸ் மீதான தாக்குதல் குறித்து பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க கருத்து

கொழும்பு, ஒக்.3
இலங்கை வெளிவிவகார சேவையை சாராத, அரசு தெரிவிப்பதற்கெல்லாம் தலையாட்டாத இராஜதந்திரிகளை வெளியேற்றும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே பிரிட்டனுக்கான இலங்கை தூதுவர் கிறிஸ் நோனிஸ் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க.

பிரிட்டன் தூதுவர் குறித்து வெளியான தகவல்கள் தொடர்பில் விசாரித்து தெளிவுபடுத்தப்படுதல் அவசியம். ஏனெனில் இது இலங்கையின் சர்வதேச உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயம்- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:
"அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்த விடயங்கள் இந்த விடயத்தில் குழப்பம் நிலவுவதைப் புலப்படுத்தியுள்ளன. மிகத் திறமையான, அரசின் தாளத்துக்கெல்லாம் ஆடாத வெளிவிவகார சேவையைச் சாராத இராஜதந்திரிகளை வெளியேற்றும் நடவடிக்கையின் ஒரு பகுதியே இது.

கடந்த காலத்தில், தயான் ஜெயதிலக, தாமரா குணநாயகம், அசிதபெரேரா,பாலிதகோஹன்ன போன்றவர்களை வெளியேற்றும் முயற்சிகள் இடம்பெற்றன."- என்று தெரிவித்துள்ளார். (ற)

## மத்தேகொட இராணுவ முகாமில் வெடிப்பு சம்பவம்



கொழும்பு, ஒக்.3
மத்தேகொட இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியசாலையில் நேற்றுக் காலை வெடிப்புச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்ற இந்த வெடிச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய கூறினார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு விசேட குழுவொன்று மத்தேகொட முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இராணுவத்தின் தீயணைப்பு வாகனங்களுடன், கோட்டே மற்றும் தெஹிவளை நகர சபைகளின் தீயணைப்பு வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# மேற்குலக நாடுகளின் சூழ்ச்சிகள் மீள ஆரம்பம்

### டலஸ் அழகப்பெரும கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.3
மேற்குலக நாடுகள் மீண்டும் சூழ்ச்சித் திட்டங்களை தீட்டத் தொடங்கியுள்ளன என்று தெரிவித்துள்ளார் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் டலஸ் அழகப்பெரும.



அண்மையில் காலி ஹபராதுவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"விரைவில் ஜனாதிபதி அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. நாம் அதைப் பற்றி பேசுவதற்காக வரவில்லை. நாட்டுக்கு எதிராக உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மேற்குலக நாடுகள் இலங்கையை சிக்க வைக்க பல தடவைகள் முயற்சித்தன. ஒன்றும் சரிவரவில்லை. தற்போது மீண்டும் இறுதி முயற்சியாக இலங்கை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் சதித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளன.

நாட்டைப் பாதுகாக்கும் நீல மதில் சுவராக நாம் இருக்க வேண்டும். போரின் இறுதிக் காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலித் தலைவர்களை பாதுகாக்க மேற்குலக நாடுகள் முயற்சித்தன. வெள்ளைக் கொடி ஏந்தி வரும் நபர்களை வெளியேற அனுமதிக்குமாறு கோரியிருந்தன.

ஜனாதிபதி மேற்குலக நாடுகளுக்கு அடிபணியாத காரணத்தால் நாட்டை சிக்க வைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2005ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்றுவிடுவார் என்ற பலரும் நம்பினர். மேற்குலக நாடுகள் பல கோடி ரூபா செலவழித்து ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியீட்டத் திட்டங்கள் செய்தன. மஹிந்த வந்தால் போர் என்றே எதிர்க் கட்சிகளும் பரப்புரை செய்தன"- என்று தெரிவித்துள்ளார். (ற)



கன்சர்வேடிவ் கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பிரிட்டன் சென்றுள்ள எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, லண்டன் மேயர் போரிஸ் ஜோன்சன் பிரபுவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அத்துடன் அந்த நாட்டின் முன்னாள் அமைச்சர் லியம் பொக்ஸையும் அவர் சந்தித்துள்ளார். (ற)

## பதவியைத் தொடர்வதற்கு நோனிஸ் நிபந்தனை விதிப்பு

கொழும்பு, ஒக்.3
நிபந்தனைகளுக்கு உட்பட்டால் பதவியைத் தொடரத் தயார் என்று பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி கிறிஸ் நோனிஸ் தெரிவித்துள்ளார். தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.



தமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே தொடர்ந்தும் தூதுவர் பதவியை வகிக்க முடியும் என்று நோனிஸ் அரசுக்கு அறிவித்துள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், கிறிஸ் நோனிஸ் தாக்குதல் சம்பவம் குறித்து வெளிவிவகார அமைச்சு இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்திய நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, நோனிஸ் இதுவரையில் உத்தியோகபூர்வமாக தமது பதவிவிலகல் கடிதத்தை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ற)

## பொலிஸ் விசாரணையில் அதிருப்தி: வழக்கை மீளப்பெற்ற லஞ்ச ஊழல் ஆணைக்குழு

கொழும்பு, ஒக்.3
பொலிஸாரின் விசாரணைகளில் திருப்தியில்லாத காரணத்தால், நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்றை லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மீளப் பெற்றுக்கொண்டுள்ளது.

திருகோணமலை பிரதான சிறைச்சாலை அதிகாரி விஜயசேகர ஜயலத் என்பவருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கே இவ்வாறு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நபர் லஞ்சம் பெற்றுக் கொண்டார் என்று தெரிவித்து இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எனினும், குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்டு வந்த விசாரணைகளில் திருப்தியில்லை என்று நீதிமன்றில் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிமன்றில் மனு தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டன.

அதில் வழக்கை மீளப் பெறுக்கொள்வதாக கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டியவிடம், ஆணைக்குழு அறிவித்துள்ளது.

**இலஞ்சம் பெற்றமை தொடர்பிலேயே வழக்கு தொடரப்பட்டிருந்தது.**

பொலிஸாருக்கு வழங்கிய இரண்டு வாக்கு மூலங்களும் முன்னுக்குப் பின் முரணாக அமைந்துள்ளன என்று ஆணைக் குழுவின் அதிகாரி சீ.சந்திரசிறி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

5000 ரூபா பணம் மற்றும் 6900 ரூபா பெறுமதியான செல்லிடப்பேசி ஆகியவற்றை குறித்த நபர் லஞ்சமாகப் பெற்றுக்கொண்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளனர். அதனால் வழக்கை மீளப் பெறுக்கொள்வதாக லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றில் தெரிவித்தது. (ற)

இலங்கை தமிழ் சஞ்சிகை வரலாற்றில் முதன் முறையாக தீபாவளி மலர்

ஒக்டோபர் மாத சஞ்சிகை இதோ இன்று வெளிவருகின்றது!




100 பக்கங்கள்

இலவசம் O/L மாதிரி வினாத்தாள் கையேடு

**ஆன்மிகம்**



திருக்கோணேஸ்வரம்...
சூரிய பகவான்...
மாவிட்டபுரம் காங்கேயமூர்த்தி...
அனுமன் செய்த தியாகம்...

**சிறுகதைகள்**



பழிக்குப் பழி...
கல்யாணம்...
தாய்மைக்குத் தண்டனை...
ஓர் அபலையின் வாழ்க்கை...

**கவிதைகள்**



இருட்டுத் தேசம்...
தாயும் சேயும்...
ஏக்கம்...
மறக்க முடியா மழை நாள்...

**கட்டுரைகள்**



தெய்வத் திருமகள்...
ரொமான்ஸ் இரகசியம்...
சாமுத்திரிகா இலட்சணம்...
ஒழியட்டும் நரகாசுரர்கள்...
ஆண்களை வசப்படுத்துங்கள்...

**சினிமா**



மறக்கமுடியாத சித்திரம்...
சினிமா விமர்சனம்...
'ஐ' இன் பிரம்மாண்டம்...
சர்ச்சைக்குள்ளான 'கத்தி'...

**கருத்துக்கணிப்பு**



வன்முறைக்கு வன்முறை சரியாகுமா?...

**மருத்துவம்**



நீங்கள் நலமா?...
விக்கல் வருவது ஏன்?...
பெண்களைத் துரத்தும் மறைமுக வில்லன்...

**நேர்காணல்கள்**



நட்சத்திர இல்லத்தரசி...
ஜூனியர் சுப்பர் ஸ்டார்...

தரம் 04 பிரபலங்களின் நுட்பமான 20 வினா - விடைகள்



இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு: யாழ். - 0776569617 / 077 1945812
கொழும்பு - 0718 628379 / 011 5737592
விளம்பர தொடர்புகளுக்கு: 078 8864730 / 0787 273035

(C/16678)

## தொலைக்காட்சியில் சம்பளம் அள்ளும்

# கதாநாயகிகள்







சினிமாவில் கதாநாயகர்கள், கதாநாயகிகள் வாங்கும் சம்பளத்தைக் கேட்டாலே தலை சுற்றும். 50 கோடி ரூபாவிலிருந்து 5 கோடி வரையில் அந்தச் சம்பளம் மாறுபடும். ஆனால் சினிமாவிலிருந்து சின்னத்திரைக்குத் தாவிய கதாநாயகிகள் பெற்றுக் கொள்ளும் சம்பளமும் இதே போன்று தான் உள்ளது. சினிமாவில் கோடிக்கணக்கில் பணம் பெற்றவர்கள், சின்னத் திரையில் ஒரு பகுதிக்கு (எபிசோட்டுக்கு) லட்சக் கணக்கில் பணம் வாங்குகின்றனர். ஆனால் சின்னத்திரை வருடக்கணக்கில் தொடர்வதால், சினிமாவையும் விஞ்சும் அளவில் சம்பளம் பெற்றுக் கொள்கின்றனர்.

அவர்கள் காசு வாங்கிக் கொண்டு அழுகின்றனர். நாங்கள் காசு கொடுத்து அவர்கள் அழுவதற்காக கண்கலங்கிக் கொண்டிருக்கின்றோம்.

விஜய் தொலைக்காட்சியின் நடன நிகழ்ச்சியின் நடுவராக வந்து கலங்கடிக்கும் ராதாவின் ஒரு எபிசோட்டுக்கான சம்பளம் 4 லட்சம். சிம்ரன் தனது சொந்தத் தயாரிப்பில் நடத்தும் நடன ஷோவில், ஒரு எபிசோட்டுக்கான அவரது சம்பளம் 2 லட்சம். சின்னத்திரை கதாநாயகிகளில் ராதிகாதான் அதிகளவு சம்பளம் வாங்குகின்றார். அவரது சம்பளம் ஒரு எபிசோட்டுக்கு 2 லட்சம் ரூபாய். ராதிகாவைத் தொடர்ந்து சீரியல் தயாரித்து நடிக்கும் குஷ்பு ஒரு எபிசோட்டுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் வாங்குகின்றார். ரம்யா கிருஷ்ணன் ஒரு எபிசோட்டுக்கு ஒரு லட்சம் வாங்குகின்றார். சின்னத்திரை மட்டுமல்லாது சொல்வதெல்லாம் உண்மை என்ற நிகழ்ச்சியை நடத்தும் லட்சுமி ராமகிருஷ்ணன், இசை நிகழ்ச்சிக்கு நடுவராக வரும் அனுராதா ஸ்ரீராம் ஆகியோர் ஒரு எபிசோட்டுக்கு 1 லட்சம் ரூபா சம்பளம் வாங்குகின்றனர்.

அதேபோல இசை நிகழ்ச்சிகளின் நடுவர்களாக வரும் மனோ, சித்ரா, கங்கை அமரன் ஆகியோர் ஒரு எபிசோட்டுக்கு 2 லட்சம் சம்பளம் வாங்குகின்றனர்.

இதேபோல இன்று ஒரு சின்னத்திரை தொடர் மூலம் முன்னணி நிலைக்குச் சென்ற ஸ்ருதி, மீதா, சந்தோஷஸ்ரீ, நிமா ஆகியோர் ஒன்றுக்கும் மேற்பட்ட தொடர்களில் தற்போது நடித்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் ஒரு எபிசோட்டுக்கு 50 ஆயிரம் ரூபாதான் சம்பளம் வாங்குகின்றனர்.

சின்னத்திரை தொடர்களில், கதாநாயகிகளை விட அதிக அளவில் இல்லத்தரசிகளால் விரும்பப்படுவது வில்லி நடிகைகள்தான். பெரும்பாலும் மாமியார்தான் வில்லிகளாக வலம் வருகின்றனர். நளினி, சுதாசந்திரன் ஒரு எபிசோட்டுக்கு 30 ஆயிரம் ரூபாவே சம்பளம் வாங்குகின்றனர். வடிவுக்கரசி, சாந்தி வில்லியம்ஸ், ஸ்ரீலேகா ராஜேந்திரன் ஆகியோர் ஒரு எபிசோட்டுக்கு 20 ஆயிரம் ரூபா வாங்குகின்றனர்.

## ரிலாக்ஸா வாசியுங்க



தாத்தா: அந்தக் காலம் மாதிரி வராதுடா பேராண்டி....
பேரன்: ஏன் தாத்தா...?
தாத்தா : அந்தக் காலத்தில் என்னை கடைக்குப் போகச் சொல்லி எங்கம்மா கையில் ஒரு ரூபாய் தான் கொடுப்பாங்க...
பேரன் : சரி....
தாத்தா : நா அந்தக் காசில் அரிசி, புளி, காய்கறி, பழம் எல்லாம் வாங்கிட்டு, கடைசியில சொக்லேட்டும் வாங்கி சாப்பிடுவேன்...
பேரன் : அப்படியா...
தாத்தா : ம்.. இப்ப சொல்லு, இதெல்லாம் இந்தக் காலத்தில் நடக்குமா...?
பேரன் : நிச்சயமா முடியாது தாத்தா, இப்பத்தான் எல்லாக் கடையிலயும் சீ.சீ.ரி.வி கமரா வைத்திருக்கிறாங்கள். திருடினா அது காட்டிக் கொடுத்திடும்.
தாத்தா : ????

## ஒட்சிசனை சேமிக்கும் பொருள்

உயிர் வாழத் தேவையான ஒட்சிசனை சேமித்து, தேவைப்படும்போது பயன்படுத்திக்கொள்ளும் வகையிலான புதிய வகை பொருளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். தெற்கு டென்மார்க் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இது குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு தற்போது தங்களது இலக்கை எட்டியுள்ளனர்.

அந்த விஞ்ஞானிகள் கூறியதாவது:- படிகத்தன்மை கொண்ட அந்தப் பொருளின் அணுக்களில் ஒட்சிசன் நிரப்பப்பட்டு தேவைப்படும் போது அதில் உள்ள ஒட்சிசனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு தேக்கரண்டி அளவுள்ள இந்த பொருள் ஒரு அறையில் உள்ள மொத்த ஒட்சிசனையும் உறிஞ்சும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

## கைவிரலில் அலங்காரம்?



## தாரில் வீழ்ந்த நாய்

கொதிக்கும் தாரில் வீழ்ந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நாயை மனதாபிமானமிக்க நபர்கள் இணைந்து மீட்ட சம்பவம் இந்தியாவின் மேற்கு மாநிலமொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் ராஜஸ்தான் உடைப்பூர் பகுதியில் நாயொன்று பாதையை கடக்கும்போது கொதிக்கும் தாரில் வீழ்ந்துள்ளது. இதனால், நாயின் உடல் முழுதும் குப்பைகள் மற்றும் இலைகள் ஒட்டி கொண்டன.

பாதையை கடந்து சென்ற மூவர், எழுந்து நடக்க முடியாமல் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நாயைக் கண்டு; உடனடியாக உள்ளூர் மீட்பு நிலையத்துக்கு அறிவித்துள்ளனர். மீட்பு நிலையத்திலிருந்து வந்த மூவர், நாயை மீட்டு அதனது உடலில் மரக்கறி எண்ணெயை ஊற்றி மெதுவாக அதனது உடலில் இருந்த குப் பைகளை அகற்றினர். இந்த நாயின் மீது ஒட்டிகொண்ட தாரை அகற்றுவதற்க் 3 மணித்தியாலங்கள் சென்றதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.





## இன்றைய பேஸ்புக் தத்துவம்

காதலியாக இருக்கும் போது பெண்கள், நம்மைக் கவிஞனாக்குகின்றார்கள். அதே மனைவியாகும் போது நம்மை தத்துவம் சொல்ல வைக்கின்றார்கள்...

## மாற்றத்தை எதிர்பார்க்கும்

# பிரகாஷ்ராஜ்

சிறந்த குணச்சித்திர நடிகர், வில்லன் நடிகர் என்று பெயர் பெற்றவர் பிரகாஷ்ராஜ். சில வருடங்களுக்கு முன் நாயகனாகவும் நடிக்க ஆரம்பித்தார். ஆனாலும், அவருக்குப் பொருத்தமான படங்களை, கதைகளை மட்டுமே தேர்வு செய்து நடிக்க ஆரம்பித்தார். மொழி, வெள்ளித் திரை, காஞ்சீவரம், அபியும் நானும், தோனி ஆகிய படங்கள் ஒரு நாயகனாகவும் அவரை வேறு ஒரு பரிமாணத்தில் வெளிப்படுத்தின.

சில வருடங்களுக்கு முன் இயக்குநராகவும் மாறி கன்னடத்தில் 'நானு நன்னா கனசு' என்ற படத்தையும், தமிழில் 'தோனி, உன் சமையலறையில்' ஆகிய படங்களையும் இயக்கினார். தமிழ்த் திரையுலகில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக படங்களையும் தயாரித்து வருகிறார்.

அதே சமயம் தெலுங்குத் திரையுலகில் 'ஆகாடு' படத்தில் நடிக்காமல் சண்டை போட்டு விட்டு அவர் விலகியது, தெலுங்குத் திரையுலகிலும், ரசிகர்களிடத்திலும் அவரைப் பற்றிய சில தவறான செய்திகள் பரவ ஆரம்பித்தன. அந்தப் பிரச்சினையைப் பற்றி அவர் இது வரை வெளிப்படையாக எதையும் பேசவில்லை. ஆனால், உதவி இயக்குநர்கள் அனை வரும் ஒன்று சேர்ந்து பிரகாஷ்ராஜுக் குத் தெலுங்குத் திரையுலகில் நடிப்பதற்கு தடை விதிக்கும் வரை சென்றார்கள். இதனிடையே, பிரகாஷ்ராஜை தன்னுடைய படத்தில் நடிக்க வைக்க வேண்டும் என் பதில் உறுதியாக இருந்த ராம் சரண், தற்போது வெளியாக உள்ள 'கோவிந் துடு அந்தாரி வாடிலே' படத்தில் நடிக்க வைத்தார். இந்தப் படத்தில் பிரகாஷ்ராஜ் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள் ளாராம். இந்தப் படம் வெளி வந்த பின் தன்னைப் பற்றிய தவறான செய்திகள் மறைந்து, மீண்டும் பழையபடி தெலுங்குத் திரையுலகமும், ரசிகர்களும் தன்னைக் கொண் டாடுவார்கள் என்று பிரகாஷ்ராஜ் தெரிவித்துள்ளார்.



## இறைவன் எங்கே

ஞானக்கதிர்

யோகர் சுவாமிகளின் மகிமையை அறிந்த வெளிநாட்டு அன்பர்கள் சிலர் அவரைத் தரிசிப்பதற்கு விரும்பி யாழ்ப்பாணம் வந்தடைந் தனர். அவர்களை உயர்ந்த உத்தியோகம் வகிக்கின்ற உள்நாட்டு அன்பர் ஒருவர் யோகர் சுவாமிகளிடம் அழைத்துச் சென்றார். அழைத்துச் சென்ற அன்பர் தன்னைப் பற்றியும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் பற்றியும் பல விடயங்களைக் கூறி கடவுளைப் பார்ப்பதற்காக வந்துள்ளார்கள் என்ற கருத்துடன் கூறி முடித்தார். அந்த அன்பரின் போலித்தனமான வாழ்க்கை முறையையும் உயர்ந்த பதவி வகிப்பதால் அவருக்குள்ள ஆணவத்தையும் சுவாமிகள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். யோக சுவாமிகள் அந்த அன்பரைப் பார்த்து "நீ உடனே நீ கடமையாற்றும் இடத்துக்குச் சென்றுவிடு உன்னை எதிர்பார்த்து பல பேர் அங்கே கச்சேரியில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் இருக்கிறார் என்று நீ நினைத்தால் உனது கடமையை முதலில் செய்திருப்பாய் அப்படி நீ சரியாக உனது கடமையைச் செய்தால் நீ கடவுளை அங்கேயே பார்க்கலாம்" என்று கூறி அவரை அவரது அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

# தலை மன்னார் கிராம மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



மன்னார், ஒக். 3
தலைமன்னார் கிராம மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் வடக்கு மாகாண மீன்பிடிப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை அங்கு பயணம் மேற்கொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடக்கு மாகாண அமைச்சருக்கும் மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

குறித்த மக்கள் தற்போது எதிர்நோக்கி வரும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும், குறிப்பாக மீனவர்களும்,ஏனைய சுய தொழில் மேற்கொள்வோரும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதில் ஆராயப்பட்டது.

அத்துடன் மாதர், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தற்போதைய நிலை தொடர்பிலும், எதிர்காலத்தில் குறித்த சங்கங்கள் வருவாயை ஈட்டிக்கொள்ளும் வகையில் மேற்கொள்ளவேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து குறித்த கிராமத்துக்குச்செய்யவேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்தும் பேசப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் அந்தக் கிராம மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-56)



## கிணற்றில் இருந்து கைக்குண்டு மீட்பு

வவுனியா, ஒக். 3
வவுனியா வேப்பங்குளம் பகுதியில் கிணறு ஒன்றிலிருந்து கைகுண்டை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வேப்பங்குளம் யாழ். ஐஸ்கிறீம் வீதியில் தனியார் ஒருவருக்குச் செந்தமான காணியில் உள்ள கிணறை நேற்று முன்தினம் காணி உரிமையாளர் துப்புரவு செய்த போது கிணற்றுக்குள் கைகுண்டு ஒன்று காணப்பட்டது.

இதனையடுத்து அவர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். அவர்கள் அங்கு வந்து அதனை உறுதிப்படுத்திய பின்னர் விசேட அதிரடிப்படையினருக்கு அறிவித்தனர்.

அவர்கள் அங்கு வந்து கைக்குண்டைச் செயலிழக்கச் செய்தனர்.

இந்தக் காணி ஏற்கனவே இராணுவத்தினர் இருந்து வெளியேறிய காணியாகும்.

இவ்வாறு குண்டுகள் இருப்பது தொடர்பாக விழிப்புடன் செயற்படுமாறு வவுனியா பொலிஸார் கேட்டுள்ளனர். (த-402)

## வவுனியா தமிழ் மன்றத்தின் விவாதப் பயிற்சிப் பட்டறை

வவுனியா, ஒக். 3
வவுனியா தமிழ் மாமன்றம் வவுனியா பாடசாலை மாணவர்களின் விவாத ஆற்றலை மேம்படுத்தும் நோக்கோடு பாடசாலை மாணவர்களுக்கான விவாதப் பயிற்சிப்பட்டறையொன்று வவுனியா தமிழ் மத்திய மாகாவித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்தது.

மாணவர்கள் மத்தியில் இயல் துறையை வளர்க்கும் நோக்கோடு, தமிழ் மாமன்றம் வருடாந்தம் ஏற்பாடு செய்த மற்றும் செய்துகொண்டிருக்கும் இந்த விவாத பயிலரங்கானது வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடைபெற்று வருகின்றது. தொடர்ச்சியான பயிற்சிகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியதன் பின்னர், வன்னியின் வாதச் சமர் எனும் போட்டி நிகழ்வையும் தமிழ் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. இதேவேளை- கடந்த வருடம் இடம்பெற்ற வன்னியின் வாதச் சமர் நிகழ்வில் பங்கேற்று சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்களும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன. (த)

## மண் அரண்கள் அழிப்பு

கிளிநொச்சி.ஒக். 3
கிளிநொச்சி மாவட்டத்தில் போர்க் காலத்தில் உருவாக்கப்பட்ட மண் அரண்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என்று கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கு.அருணதாஸ் தெரிவித்தார்.

25 மில்லியன் செலவில் 34 கிலோ மீற்றர் தூரம் கொண்ட மண் அணைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. பாரதிபுரம் கிராமத்தில் இந்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் மண் அரண்களில் மிதிவெடிகளின் அபாயம் இருப்பதன் காரணமாக இராணுவத்தின் மிதி அகற்றல் அணியின் உதவி பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-18)



உலகமெங்கும் அனுஷ்டிக்கப்படும் உலக இருதய தினத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தரும் இணைந்து புளியங்குளம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தினர். (த-402)

## புதுமுறிப்பு கிராம மாணவர் பஸ் சேவை இன்றிச் சிரமம்

கிளிநொச்சி, ஒக். 3
கிளிநொச்சி புதுமுறிப்பு கிராம மாணவர்களை பஸ்கள் ஏற்றிச் செல்வதில்லையெனப் பெற்றோர்கள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கனகபுரம் மகா வித்தியாலயம் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், திரேசா பெண்கள் கல்லூரி ஆகியவற்றுக்கு பெருமளவு மாணவர்கள் நாள் தோறும் சென்று வரும் நிலையில் அக்கராயன் பகுதியில் இருந்து வரும் பஸ்கள் மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லையெனப் பெற்றோர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

புதுமுறிப்பு கிராமத்திலிருந்து மாணவர்கள் கிளிநொச்சி நகரம் சென்று வரக்கூடிய வகையில் பஸ் சேவையொன்றை நடத்த நடவடிக்கை எடுக்கும்படி பெற்றோர்கள் கோரியுள்ளனர்.



புதுமுறிப்பு கிராமத்தில் 450 மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் பல குடும்பங்கள் வறுமையான நிலையினால் நெருக்கடி நிலையை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-18)

## நீதிமன்ற உத்தரவின்றி புதைக்கப்பட்ட சடலத்தை தோண்டி எடுக்கப் பணிப்பு

### உடற்கூற்றுப் பரிசோதனைக்கும் உத்தரவு



மன்னார், ஒக் 3
மன்னார் நீதிமன்றம் உத்தரவிடாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சடலத்தை எதிர்வரும் 4 ஆம் திகதி நீதிவான் மற்றும் வைத்திய அதிகாரிகள் முன்னிலையில் தோண்டி எடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மன்னார் வங்காலைக் கடற்கரையோரப் பகுதியில் இருந்து கடந்த 3 ஆம் திகதி புதன்கிழமை அடையாளம் காணமுடியாதவாறு சிதைவடைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

குறித்த சடலத்தைப் பார்வையிட்ட மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி ரி.பி.சிந்தாத்துரை அடையாளம் காண்பதற்காக மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த சடலம் அடையாளம் காண்பதற்காக மன்னார் வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது.

அதேவேளை, மன்னார் சௌத்பார் கடற்கரைப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை உருக்குலைந்த நிலையில் இரண்டாவது சடலம் மீட்கப்பட்டது.

குறித்த சடலத்தைப் பார்வையிட்ட மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி ரி.பி.சிந்தாத்துரை அதனையும் அடையாளம் காண்பதற்காக மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்குமாறு உத்தர விட்டார்.

இந்த நிலையில் குறித்த இரண்டாவது சடலமும் மன்னார் பொது வைத்திய சாலையின் பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்தது.

கடந்த 3 ஆம் திகதி வங்காலைக் கடற்கரைப் பகுதியில் முதலாவதாக மீட்கப்பட்ட சடலம் நீண்ட நாள்களாக அடையாளம் காணப்படாமல் வைக்கப்பட்டிருந்த நிலையில் அதனை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யுமாறு நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டிருந்தார்.

குறித்த சடலம் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இரண்டாவதாக மன்னார் சௌத்பார் கடற்கரையில் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்த சடலம் மாறி அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக உரிய தரப்பினர் வைத்தியசாலையின் பிரேத அறைக்குச் சென்றபோதே சடலம் மாறி அடக்கம் செய்யப்பட்ட விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.

இந்த நிலையில் இரு சடலங்கள் தொடர்பான விசாரணை நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் இடம் பெற்றது.

இதன்போது அடக்கம் செய்யப்பட்ட குறித்த சடலத்தை எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி,பொலிஸ் தடவியல் நிபுணர்கள், திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோர் முன்னிலையில் தோண்டி எடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று வியாழக்கிழமை உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (த-56)

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம். ஒக்.3

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 6ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு விசேட செயற்திட்டம் பிறிதொரு தினங்களுக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

செயற்திட்டம் நடைபெறவுள்ள 6ஆம் திகதி அரச விடுமுறையாக நேற்றுமுன்தினம் அரசினால் அறிவிக்கப்பட்டதையடுத்து விசேட செயற்திட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண ரூ. 2 லட்சம்

பளை, ஒக். 3

கிளாலிப் பகுதியில் வசிக்கும் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண வந்துள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் அரியரட்ணம் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து கிணறு வெட்டுவதற்கு இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இதையடுத்து கிணறு அமையவுள்ள இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ள பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலாளர் எம்.மகாதேவன் பருவ மழை ஆரம்பமாகவிருப்பதால் அடுத்த வாரம் கிணறு வெட்டும் வேலை ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கிளாலிப் பகுதியில் 275 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன. இவர்கள் பயன்படுத்தி வந்த 11 பொதுக் கிணறுகளிலும் நீர் வற்றியுள்ளதால் அவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதில்பெரும் சிரமங்களுக்குள்ளாகி யுள்ளனர்.

இவர்களின் நிலைப்பாடு குறித்துப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளருக்கும், பிரதேச செயலருக்கும் தெரியப்படுத்தியதையடுத்து தற்பொழுது குறிப்பிட்ட இடங்களில் நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு இரு தினங்களுக்கு ஒருமுறை பவுஸர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதேநேரம் கிளாலியிலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்களை வழங்கியதுடன் குடிதண்ணீர்ப் பிரச்சினையால் திண்டாடும் மக்களுக்குக் கிணறு வெட்டுவதற்கு நிதி தருவதாகவும் தெரிவித்துள்ளதை அடுத்து கிணறு வெட்டுவதற்கான பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஈடுபட்டுள்ளார்.

அதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சு வளர்ப்பதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந் திரன் பயனாளிகளைத் தெரிவுசெய்யுமாறும் தெரிவித்துள்ளார். (த-115)

# தென்மேற்குப் பிரதேச சபையில் முக்கிய ஆவணங்கள் பல மாயம்

## விசாரணை மேற்கொள்ளுமாறு உறுப்பினர்கள் கோரிக்கை

வலி.தென்மேற்கு. ஒக். 3

வலி.தென்மேற்குப் பிரதேச சபை அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த முக்கியமான ஆவணங்கள் காணாமற்போனமை தொடர்பாக அதிர்ச்சி தெரிவித்துள்ள உறுப்பினர்கள், இந்த மோசடி வேலையில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுவதால்உள்ளூராட்சிஆணையாளர் மட்டத்தில் விரிவான விசாரணை நடத்தி உண்மை நிலையை வெளிக்கொண்டு வரவேண்டும் என்று தவிசாளரைக் கோரியுள்ளனர்.

இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் சிறப்புக் கூட்டம் தவிசாளர் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் முக்கிய கோவைகள் அடிக்கடி மாயமாக மறை வது பற்றி மேற்படி கூட்டத்தில் உறுப்பினர்கள் மட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமான கோவைகள், அவற்றுக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமான கோவைகள் மற்றும் கட்டடங்கள் சம்பந்தமான ஆவணங்கள் என்பன அடிக்கடி மாயமாக மறைவது குறித்துச் சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள், பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இந்தக் கோவைகளுக்கு என்ன நடந்தது.என்பது பற்றி அறிய வேண்டிய நிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளதாலும், இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் இருப்பதற்கு வசதியாகவும்உயர்மட்டவிசாரணை நடத்த வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது எனக் கூறினர்.

உறுப்பினர்களின் கூற்றைத் தவிசாளரும் ஏற்றுக்கொண்டதை அடுத்து இது சம்பந்தமாக உள்ளூராட்சி ஆணையாளர் மட்டத்தில் விசாரணை நடத்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-115)

# கைதடியில் முதியோர் தினம் இரு கண்காட்சிகளும் திறப்பு



வலி.வடக்கு, ஒக் 3

கைதடி அரச முதியோர் இல்லத்தில் சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம் வடக்கு மாகாண உள்ளூராட்சி சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதியோர் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த ஆயுள் வேத பீட மாணவர்களின் ஆயுள் வேத மூலிகைக் கண்காட்சி மற்றும் சாந்திகம் உளவள நிலையத்தின் நூல் கண்காட்சி என்பவற்றைத் திறந்து வைத்தார்.

வெகு விரைவில் முதியவர்களை உள்ளடக்கிய கழகங்களை வட மாகாணத்தில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது சம்பந்தமாக முன்னோடியாக நேற்று வியாழக்கிழமை தனது அலுவலகத்தில் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் அதே வேளை கைதடி அரச முதியோர் இல்லத்திலும் இந் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் எனவும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இங்கு உரையாற்றிய ஆளுநர், பல்வேறு அரச திணைக்களங்களின் உதவிகளுடன் முதியோர் கழகங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் முதியவர்கள் அதிக நன்மைகளைப் பெறுவ துடன் சந்தோஷமாகவும் இருக்க முடியும்-என்று கூறினார். (த-86)

# விழிப்புலனற்றோருக்கு சுயதொழில் முயற்சிகள்

யாழ்ப்பாணம். ஒக்.3

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சித் திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் மு.கனகசபை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சங்கத்தின் அநேகமான அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்குச் சில சுயதொழில் முயற்சித் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம்.

சங்கத்தின் அங்கத்துவப் பயனாளிகள் தமது சுயதொழிலை மேற்கொள்ளக் கூடிய வகையில் இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களுக்குச் சங்கம் உதவவுள்ளது.

குறிப்பாகச் சித்தன்கேணியில் உள்ள விழிப்புலனற்றோர் சங்க அங்கத்துவப் பயனாளி ஒருவர் வெற்றிலைச் செய்கையை மேற்கொள்வதற்கு ஆர்வமும் விருப்பமும் தெரிவித்துள்ளார். அந்தப் பயனாளிக்கு ஒரு தொகுதி வெற்றிலைத் துண்டங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளது.

அதனைவிட ஏனைய அங்கத்தவர்களுக்கு இந்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பு மற்றும் பனம் பொருள் கைப்பணி உற்பத்தி போன்ற சிறுதொழில் முயற்சிகளுக்கும்சங்கம்உதவியுள்ளது.

இந்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கிணறு வசதி அற்று இருக்கும் அங்கத்தவர்களுக்கு கிணறுகளும்அமைத்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சுயதொழில் முயற்சித் திட்டங்களை சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தில் மேலும் விஸ்தரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் எதிர்வரும் 15ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது - என்றார். (த-17)

# தெல்லிப்பழைப் பகுதியில் மூத்த பிரசைகள் கழகம்



வலி.வடக்கு, ஒக் 3

வடக்கு மாகாண ஆளுநர் நேற்று முன் தினம் புதன் கிழமை அறிவித்தமைக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் மூத்த பிரசைகள் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மூத்த பிரசைகள் கழகத்தைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்தநிகழ்வில்வடக்குமாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி.விஜயலட்சுமி ரமேஸ், சமூக சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், இலங்கை சின்மயா மிஷனின் யாழ்.பிராந்தியத்தைச் சேர்ந்த சைத்தன்யா சுவாமிகள் உட்பட ஆளுநர் அலுவலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மூத்த பிரசைகள் சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் கழக அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-86)

## மிளகாய் திருடனுக்கு 6 மாதங்கள் சிறை

தென்மராட்சி, ஒக் 3

கொடிகாமம் பொதுச் சந்தையில் 30 கிலோ மிளகாயைத் திருடிய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-9)

# மக்கள் கோரிக்கையை ஏற்றது மாகாணச் சுகாதார அமைச்சு

தென்மராட்சி, ஒக்.3

தென்மராட்சிப் பிரதேச மக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றது மாகாணச் சுகாதார அமைச்சு. சாவகச்சேரி மருத்துவமனைக்கு நிரந்தர ஆய்வுகூட உத்தியோகத்தரொருவரை நியமிக்குமாறு விடுத்த கோரிக்கையை அடுத்து மாகாண சுகாதார அமைச்சு ஆய்வுகூட உத்தியோகத்தரொருவரை நியமித்துள்ளது.

நியமிக்கப்பட்ட ஆய்வு கூட உத்தியோகத்தர் நேற்று முன் தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

மருத்துவமனைக்கு ஆய்வு கூட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டமைக்கு நோயாளர்கள், மாகாணச் சுகாதார அமைச்சு, சுகாதாரத் திணைக்களம், யாழ்.பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (த-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களின் மனங்களையும் நிச்சயம் வெல்ல முடியும்

கொழும்பு அரசு என்னதான் அபிவிருத்திகளை வடக்கு - கிழக்கில் செய்தாலும் அவற்றால் தமிழர்களின் மனங்களை ஒருபோதும் வெல்ல முடியாது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ்ப்பாணத்திலே கூறியிருக்கிறார். கடந்த காலங்களையும், நடந்து முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலையும் மனதில் வைத்து அவர் அப்படிக் கூறியிருக்கக்கூடும்.

அமைச்சர் ராஜித, இடதுசாரிப் பின்னணியைக் கொண்டவர். தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை ஆதரிக்கக்கூடிய, கொழும்பு அரசில் இருக்கும் ஒரு சிலரில் அவரும் ஒருவர். யாழ்ப்பாணத்தில் அவர் கூறிய கூற்றில் உண்மையில்லாமல் இல்லை. போர் முடிந்ததன் பின்னர் பல ஆயிரம்கோடி ரூபாய்களைக் கொட்டி வீதிகளையும் கட்டடங்களையும் கொழும்பு அரசு விருத்தி செய்த போதும், தமிழர்களின் மனங்களை வெல்ல முடியவில்லை. அதற்குக் காரணம் உண்டு. இதுவரையில் செய்யப்பட்ட அபிவிருத்திகளால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் மிகச் சொற்பமானவையே. பொருளாதார நன்மைகளோ, அபிவிருத்தியோ இந்த அபிவிருத்திச் செயல் திட்டத்தால் ஏற்படவில்லை. ஆனால், அதே காலப்பகுதிக்குள் தமிழர்களின் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் இருப்பையும் அழிப்பதற்கு கொழும்பு அரசு எடுத்த நடவடிக்கைகள் ஏராளம். எனவே மக்கள் கொழும்பு அரசின் அபிவிருத்தியால் மனமகிழ்ச்சி அடைய முடியாத நிலையை எட்டினர்.

அவர்களின் நிலங்கள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன. பறிக்கப்பட்ட நிலங்களில் இராணுவத்தினர் விருந்தினர் விடுதிகளை அமைத்தும், விவசாயத்தையும் மேற்கொண்டனர். அச்சுறுத்தும் தோரணையில் இராணுவம் இன்னமும் தமிழர்கள் மத்தியில் நிலைகொண்டுள்ளது. சிவில் நிர்வாகத்தில் அளவுக்கதிகமாகவே இராணுவத் தலையீடு இருக்கிறது. போர் முடிந்து 5 ஆண்டுகளாகி விட்டாலும் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. நாற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய ஒரு தொழிற்சாலைகூட அமைக்கப்படவில்லை. தமிழர்களின் மிகப் பெரும் மூலதனமான கல்வியை விருத்தி செய்வதற்கான சிறப்புக் கவனம் எதுவும் செலுத்தப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் மற்றும் தீர்வு விடயங்களில் இம்மியளவும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

தமிழர்களின் மனங்களை வெல்ல முடியாமல் போனதற்கான காரணங்களை இப்படி இன்னமும் சொல்லிக்கொண்டே போகலாம். அதற்காக தமிழர்களின் மனங்கள் வெல்லப்படவே முடியாதவைகள் அல்ல. அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம், தங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொள்ளக்கூடிய அதிகாரங்களும், நிரந்தர அமைதியையும்தான். அவற்றைக் கொடுத்துவிட்டால் மிகச் சுலபமாகத் தமிழர்களின் மனங்களை வென்றுவிட முடியும்.

1994இல் வெறும் சமாதானம் என்ற முழக்கத்துடன் வந்த சந்திரிகா அம்மையாரையே சமாதான தேவதையாகத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியவர்கள் தமிழர்கள். அவரும் பின்னர் துர்தேவதையாகிப் போனமை துரதிர்ஷ்டமானது என்றபோதிலும், அமைதி மற்றும் தீர்வு பற்றி சந்திரிகா பேசியது ஒன்றே தமிழர்களின் மனங்களைக் கவர்வதற்குப் போதுமானதாக இருந்தது. எனவே அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கான உண்மையான, நேர்மையான முயற்சிகளில் கொழும்பு இறங்கினால்போதும், தமிழர்களின் மனங்களைக் கவர்ந்துவிடலாம். அமைச்சர் ராஜிதவின் கவலையும் தீர்ந்துவிடும்.

அத்தகைய தூரநோக்குச் சிந்தனையுடைய தலைவர்கள் சிங்களவர்கள் மத்தியில் என்றாவது உருவாகுவார்களா? அதற்கான பதில்தான் தமிழர்களின் மனங்களை வெல்வதற்கான மூல சூத்திரம்.

# அளுத்கம சூட்டுச் சம்பவம்; மாற்றமடைகிறது அறிக்கை



டிரன் குமார
பங்ககம ஆரச்சி

கடந்த செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி களுத்துறை மேலதிக நீதிவான் அபூர்வமான தீர்ப்பொன்றை அளித்தார். அதாவது அளுத்கம, தர்காநகர் ஆகிய பிரதேசங்களில் கடந்த ஜூன் மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற இனவாத கலவரங்களின் போது, கொல்லப்பட்ட இரு முஸ்லிம்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதன் காரணமாகவே மரணமடைந்துள்ளதாகத் தீர்ப்பு வழங்கினார்.

அளுத்கம தர்காநகரில் இனவாதத் தீயை மூட்டியவர்கள் யார் என்பது இரகசியமானதொன்றல்ல. அத்துடன் அங்கு மக்களின் பாதுகாப்புக்கிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உண்மையில் பாதுகாப்பு வழங்கியது யாருக்கென்பதும் இரகசியமானதல்ல. எனினும் அதை இரகசியமாக வைத்துக் கொள்வதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். அதற்காக ஒரு கதையைக் கட்டிவிட்டார்கள். அதாவது இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில், வாள்வெட்டுக்கு இலக்காகியே ஒருவர் இறந்தார் எனச் சொல்லப்பட்டது. இது பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

மரணமடைந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள் எனில், அந்த சந்தர்ப்பத்தில் துப்பாக்கியைக் கையில் ஏந்தியிருந்தது, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் என்பதால் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டவர்களும் அவர்களாகத்தான் இருக்கக்கூடும். அவ்வாறாயின் நேரடியாக இந்த இனவாதத் தீயை மூட்டுவதற்குப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தேவைக்கும் அதிகமாக சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது உறுதியாகிறதில்லையா? அதன்படி இந்தக் கலவரத்துக்கு அரசு மறைமுக அனுமதியை வழங்கியுள்ளது என்று கொள்ளலாம்.

கடந்த ஜூலை மாதம் 2ஆம் திகதி களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் மரண விசாரணை மேற்கொண்ட வைத்திய அதிகாரி எஸ்.எச்.எச். த சில்வா வழங்கிய அறிக்கையின்படி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானமை தொடர்பான குறிப்பெதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. இதனால் சிங்கள இனவாதிகள் மகிழ்ச்சியடைந்த போதிலும் முஸ்லிம்களின் மனங்கள் உடைந்து விட்டன. ஏனென்றால் தமது இறந்த தந்தைக்கு, சகோதரருக்கு, உறவினருக்கு அநீதியொன்று இடம்பெற்று விட்டது என்பதை அவர்கள் நம்பினார்கள். மோசமான முறையில் திடீரென தோன்றியவர்கள் ஈவிரக்க மற்றவாறு நான்கு திசைகளையும் நோக்கித் தீர்த்த துப்பாக்கிச் சன்னங்களால் மண்டை சிதறி இருவர் இறந்தபோதும், அதனை விசாரித்த இறுதியறிக்கை இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலொன்றினால் ஏற்பட்ட வெட்டுக்காயங்கள் காரணமாக நிகழ்ந்த மரணமெனக் கூறுவது பெரும் பொய்யாகும்.

நீதி அமைச்சரும் இந்த மரணம் வெட்டுக்காயங்களால் அன்றி துப்பாக்கி வேட்டினால் இடம்பெற்ற மரணமென்பதற்கான சான்றுகள் இருப்பதாகப் பகிரங்கமாகக் கூறியிருந்தார். பிரச்சினை நீதிமன்றத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படுவது இறந்தவர்களைவிட உயிர் வாழ்கின்றவர்களுக்கு நியாயம் கிட்ட வேண்டுமென்ற காரணத்தினாலாகும். அதன்படி மீண்டுமொரு விசாரணைக்கான தேவை ஏற்படுகின்றது. சட்டத்தரணிகள் சங்கமும் முறையான விசாரணையொன்று அவசியமெனக் கடுமையான கோரிக்கையை முன்வைத்தது.

முஸ்லிம்களின் சம்பிரதாயத்தின்படி ஒரு நாளைக்குள் மரண சடங்குகளை முடிவுக்குக் கொண்டு வருகிறார்கள். அதனால் அனைத்து விடயங்களும் ஒரு நாளைக்குள் மூடப்பட்டு விடுமென அனேகமானோர் நினைத்திருக்கக்கூடும். எனினும் மீண்டும் அந்த உடல் வெளியெடுக்கப்பட்டு பரிசோதனை மேற்கொண்டு, மரணத்துக்கான சரியான காரணத்தை முன் வைக்கவும் என்ற கோரிக்கை நீதிமன்றத்திடம் முன் வைக்கப்பட்டது.

அதற்கேற்ப இறந்தவர்களது சடலங்கள் வெளியே எடுக்கப்படாத போதிலும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தீர்மானம் மாற்றமடைகிறது. அந்த தீர்மானத்தின்படி குறித்த மரண விசாரணை அதிகாரியே இந்த மரணங்கள் துப்பாக்கிச் சூட்டினால் இடம்பெற்றவையே என இரண்டாவது தடவையும் குறிப்பிட்டார்.

களுத்துறை மேலதிக நீதிவான் குறித்த சம்பவத்தோடு தொடர்புபட்ட சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு பணிப்புரை விடுத்தார். அவ்வாறாயின் பொலிசார் அந்த வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும். யாரைக் கைது செய்தார்கள்? எப்போது கைது செய்தார்கள்? கைது செய்யப்படவேண்டியவர்கள் யார் என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தெரியும்.

அவர்கள் அன்று ஆயுதங்களைக் கையிலேந்தியவாறு இருந்தவர்களே . அதன்படி அன்று அளுத்கம, தர்கா நகருக்கு ஆயுதம் சகிதம் தொடர்புபட்டிருந்த பாதுகாப்பாளர்களைக் கைது செய்ய முடியும். ஆயினும் அவ்வாறு இடம்பெறுமா? இடம்பெற்றாலும் இடம்பெறாவிட்டாலும் ஒன்று மட்டும் தெளிவானது. இந்த மக்களது பாதுகாப்புக்கென்றிருந்த பாதுகாப்புப்படையினர் மக்களை இன, பேத அடிப்படையில் பிரித்து வேறாக்கி விட்டனர். அவர்களது பாதுகாப்பு சிங்களவர்களுக்கு கிட்டிய அதேவேளை, தமிழ், முஸ்லிம் உயிர்களுக்கு தூரமாக இருக்கின்றது. ஆரம்பத்தில் இது பற்றி தவறான கருத்து நிலவிய போதிலும் சட்டத் தீர்ப்பு காரணமாக மீண்டும் அது சரி செய்யப்பட்டு விட்டது. அது உண்மையிலேயே- இறந்தவர்களைவிட வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு செய்த நியாயமொன்றெனக் குறிப்பிட வேண்டும். நான் நாட்டில் இருந்திருந்தால் இவ்வாறான சம்பவம் நிகழ்வதற்கு இடமளித்திருக்க மாட்டேன் என சவால் விட்ட அமைச்சர் ராஜித சேனாரத்னவை பின்னர் சந்தித்து இடம்பெற்ற விடயம் தொடர்பில் நியாயம் பெற்றுத் தருமாறு வேண்டிய போது அவர், இரட்டை வேடத்துடன் செயற்பட்டாரென தர்கா நகரவாசிகள் குறிப்பிடுகின்றனர்.

அனைத்துக் கலவரங்களையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உடனடியாகக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வர இயலுமாக இருந்த போதிலும் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அது மாத்திரமன்றி, இருவர் கொல்லப்பட்டு, இருவரது கால்கள் இழக்கப்பட்டமையானது, அவர்கள் தயவு தாட்சணியமும் இன்றி முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலாகும். அதனை மேலும் வலுப்படுத்துவதாக இந்தத் தீர்ப்பு வந்திருக்கின்றது. இது தொடர்பில் விசாரிக்கவும், அறிக்கை சமர்ப்பிக்கவும் ஏற்கனவே கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகள், பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையினால் முழுமையான விசாரணையொன்றை மேற்கொண்டனர். அந்த அறிக்கைக்கு நேர்ந்ததென்ன?

இப்படியே அதுவும் மறைக்கப்பட்டோ, மறக்கப்பட்டோ விடும். ஆனால் நடந்த குற்றங்கள் பற்றிய தீர்வுகள் மாற்றமடையும்.

நன்றி - ராவய

இன்று மது ஒழிப்புத் தினமாகும்

# மதுவை முற்றாக ஒழிப்போம் மனித குலத்தைக் காப்போம்

த.நந்தகுமார்,
பிரதம மதுவரி பரிசோதகர், மதுவரி நிலையம், மன்னார்.

என்ன வண்ணத்தில் வந்தாலும் மதுபானத்தில் ஈதையில் அற்ககோல் என்னும் மதுசாரம் இருக்கிறது. இந்த ஈதையில் அற்ககோல் உடலின் சகல கலங்களுக்கும் தாக்கம் ஏற்படுத்துகிறது.

ஏன் மதுபானத்தை நாடுகிறார்கள்? மதுப் பழக்கத்தை கவரக்கூடிய விதத்தில் சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்துவது அதாவது (chees) சியர்ஸ் என்று சொல்லி குவளையை தட்டுவது (bites) பயிட்ஸ் கேட்பது போன்றவற்றின் மூலம் அந்த வழக்கம் அடையாளம் காட்டப்படுகிறது. மேலும், மதுசாரத்தில் உள்ள இரசாயனத் தன்மையால் ஏற்படும் ஊக்கப்பாடு தற்காலிக உசாரடைதல், தற்காலிக மகிழ்ச்சி போன்ற காரணங்களினாலும் பலர் மதுபானத்தை நாடுகின்றனர். அத்துடன் குடி போதையில் செய்யப்படும் செயல் மற்றவர்களினால் மன்னிக்கப்படுவதால் அல்லது மறக்கப்படுவதால் ஒருவரை அடிக்க வேண்டுமானால் குடி போதையில் அடிப்பதால் அடி வாங்கியநபர் அவர் குடிபோதையில் தான் தன்னை அடித்தார் என மன்னித்து விடுகிறார்.

ஆனால் போதையில் இருப்பவர் அந்த செயலை தெரிந்து கொண்டு தான் செய்கிறார். இவை மட்டுமல்ல சகல மனிதர்களிடமும் மனச்சாட்சி என்ற உள்ளுணர்வு நிச்சயம் இருக்கிறது. அந்த மனச்சாட்சி எப் போதும். அவர்களை தீய வழிகளில் செல்ல விடாது தடுக்கிறது. எனவேதான் மதுவை அருந்திமனச்சாட்சியை அழித்து விட்டு தீய வழிகளில் செயற் படுவதற்கு முயற்சிக்கின்றார்கள். இதைவிட தம்மை வளர்ந்தவர்கள் போலக் காட்டிக் கொள்வதற்காகவும், ஏக்கம், தனிமை, பதற்றம், சலிப்பு போன்ற உணர்வை குறைப்பதற்காகவும் ஒரே வயதினரின் அழுத்தம் காரணமாகவும், வயதுவந்தவர்களின் முன்னுதாரணத்தைப் பின்பற்றுவதற்காகவும் சிலர் மதுபானத்தை நாடிச் செல்கின்றனர்.

மதுபானத்தை அருந்துவதால் சுயநிலை மறந்து மனநிலை மாறி, ஒருதரம் சொன்னதை மீண்டும் மீண்டும் கூறி, பிறரின் எரிச்சலுக்கு ஆளாகி விடுகிறார்கள். நண்பர்களுடன் பொழுதுபோக்காக சிறிதளவு மது அருந்தும் ஒருவர் பின்பு பெரும் குடிகாரராக மாறுகிறார்.

குடிப்பழக்கம் ஒரு நாகரிகமானது எனவும் சிறப்பான வாழ்க்கை எனவும் திரைப் படங்களிலும் தொலைக்காட்சியிலும் காட்டுவதன் பின் விளைவுதான் இது. இந்த விடயத்தில் ஊடகங்கள் மனச்சாட்சியுடன் நடந்து கொள்ள வேண்டும். அனேகமான தொலைக்காட்சி ஒளிபரப்புக்களில் "மது அருந்துதல் உடல் நலத்துக்குக் கேடு" என்ற எச்சரிக்கை வாசகம் போடுகிறார்கள். ஆனால் அந்த எச்சரிக்கை வாக்கியம் பெரிதாக எடுபட்டதாகத் தெரிய வில்லை. இளைஞர்களுக்கு அலுத்து விட்டது. இதைவிட அந்தக் காட்சியைத் தவிர்ப்பது மிகவும் நல்லது.

மதுபானத்தை அருந்துவதால் கைகால்கள் சோர்வடைகின்றன. தலையிடியும் தலைப் பாரமும் ஏற்படுகிறது. நடையில் தள்ளாட்டம், நுரையீரல், சிறுநீரகம் பாதிப்படைகிறது. கண்பார்வை கெடும். மூளையில் 'இமெனஸியா' என்ற நிலை ஏற்படும். ஈரலில் கலன்கள் செயலிழக்கும். பாலியல் பலவீனம், நரம்பு பலவீனம் ஏற்பட்டு 'சிரோசியஸ்' ஏற்படும் உளப் பாதிப்பு காரணமாக மது அருந்துகிறார்கள். மது அருந்துவதால் உளப் பாதிப்பும் ஏற்படுகிறது. மனித உழைப்பு சீரழிகிறது. குடும்பம் சீரழியும். மனித கொலைகள், வாகன விபத்துக்கள், துர்நடத்தைகள், உடல்நோய்கள் இப்படி அனேகமானவை மதுபானம் அருந்துவதாலேயே ஏற்படுகிறது.

குடிகாரன் பிள்ளைகளின் கல்விக்காக செலவிடும் பணத்தையும் மனைவியின் காதில் மின்னிக் கொண்டு இருக்கும் நகைகளையும் விற்றுக் குடித்து விட்டு குப்புற விழுந்து விடுவான். வீட்டின் செலவுக்கான பணத்தை மது பானத்துக்காகச் செலவழித்தால் குடும்பப் பிரச்சினை ஏற்படுகிறது. மது பானத்தால் நோயுற்ற வரைக் காப்பாற்றுவதற்காக வைத்திய சாலையில் செல வழித்தால் நாட்டுக்குப் பிரச்சினை மொத்தத்தில் மதுபானம் ஆனது சமுதாயத்தை அழிக்கும் ஒரு புற்று நோயாக மாறுகிறது.

உண்மையில் சாராய விற்பனை நிறுவனங்கள் இலாபத்தை மட்டுமே நோக்காகக் கொண்ட வணிக நிறுவனங்கள் ஆகும். இவ்வாறான பல் தேசிய நிறுவனங்களின், விளம்பர உத்திகள் நிறுத்தப்பட வேண்டும். கஷ்டப்பட்டு உழைத்த தொழிலாளி, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த தொழிலாளி, நாரி எலும்பு நோக நோக உழைத்த தொழி லாளி, உழைத்த பணத்தை இப் பாழாய்ப் போன மதுபானத்துக்குச் செலவிடுவதுதான் கவலை அளிக்கும் விடயம் ஆகும். பின்பு கடன்பட்டு காலப் போக்கில் எல்லாம் இழந்து தற்கொலையை நாட நேர்கிறது.

போரின் போது மதுபானக் கடைகள் இல்லாத இடங்களில் கூட தற்போது புதிதாக மது பானக் கடைகள் முளைத்து இருக்கின்றன. நடந்து முடிந்த மலையகத் தேர்தலின்போது மதுபானத்தைக் கொடுத்து வாக்குக் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



எனவே குடிக்கு அடிமையானவர்களுக்கு குடியால் வரும் தீமைகளை போதிக்க வேண்டும். நம்பிக்கையை ஏற்படுத்துதல், மருத்துவ ஆலோசனை வழங்குதல், மதம் சார்ந்த பயிற்சிகளில் ஈடுபடுத்துதல், வர்ணம் தீட்டுதல், நீச்சல் பயிற்சி அளித்தல், சமையல் பயிற்சிகளை வழங்குதல், உளச் சிகிச்சை அளித்தல், இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தல், வாய் மூலம் விற்றமின்கள் வழங்குதல், குடும்ப ஆதரவு ஆலோசனை வழங்குதல், சமூகப் பங்களிப்பு பயிற்சிகள் வழங்குதல், வறுமைக்கான காரணங்களை கண்டு அறிந்து உதவுதல், மது ஒழிப்புக்கு பாடுபடும் தொண்டு நிறுவனங்களுடன் இணைத்தல் போன்ற விதங்களிலும் உதவுதல் வேண்டும். விழிப்புணர்வு மற்றும் கண்காட்சிகளை நடத்துதல் வேண்டும்.

# நவராத்திரி விழாவும் ஏடு தொடக்குதலும்

தி.தவரத்தினம்
ஆசிரியர் யா/விக்ரோறியாக் கல்லூரி.

இந்து சமயம் பரந்த நோக்கோடு மனித வாழ்வை மேம்படுத்தத் தக்க வகையில் சமய சமூக விழாக்கள், விரதங்கள், பண்டிகைகளை வகுத்து மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றது. அந்த வகையில் புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது தினங்களில் முதல் மூன்று நாள்களும் வீரம் வேண்டி துர்க்கையையும், அடுத்து வரும் மூன்று தினங்களும் செல்வம் வேண்டி இலட்சுமியையும் இறுதி மூன்று நாள்களும் கல்வி வேண்டி சரஸ்வதியையும் வணங்குகின்றோம். ஆதி பராசக்தியின் வடிவான முத்தேவியரையும் வணங்கி வழிபடும் இந்தச் சமய சமூக விழாவின் போது தமிழர் தம் கலை, பண்பாடு கலாசாரம் ஆகியவற்றை பேணிப் பாதுகாக்கச் சிறப்பாக வாணி விழா என்று அழைத்து சகல கலைகளையும் அரங்கேற்றுவர்.

பத்தாம் நாளான விஜயதசமி வெற்றிக்குரிய நாளாக கொள்ளப்படுகின்றது. சாமுண்டி, சங்கரி, காளி, துர்க்கை போன்ற நாமம் பெறும் தேவியானவள் மகிடாசுரனை வதம் செய்ய மகிடாசூரவர்த்தினியாக துஷ்டரை அழித்து நல்வரமருள துர்க்கையாக தமது சகல சக்திகளையும் ஒன்று திரட்டிய முத்தேவியராக எழுந்தருளும் நாளே விஜயதசமியாகும்.

இந்த நாள் மிகச் சிறப்பானதாகும். இந்த வழிபாட்டுக்குச் சான்றாதாரமாக இதிகாசங்களிலே விஜயதசமி வழிபாடு காணப்படுகின்றது. இந்த விழாவின் முக்கியமான தினமான விஜயதசமி ஆலயங்களிலும், தொழிற் பீடங்களிலும் குறிப்பாக பாடசாலைகளிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த நவராத்திரியில் கும்பம் வைத்துத் தேவியரை எழுந்தருளச் செய்யும் நவராத்திரி விழா ஆரம்பம் மிகவும் முக்கியத்துவம் உடைய ஒன்றாகும். அதாவது புரட்டாதி மாதத்திலே வருகின்ற அமாவாசையை அடுத்து வரும் பிரதமைத் திதி முதல் தசமித் திதி ஈறாக உள்ள பத்து நாள்களுமே நவராத்திரி எனப்படும். எனவே திதியை வைத்து ஆரம்பிக்கும் இந்த விழா பிரதமையிலே ஆரம்பமாக வேண்டும். இந்த முறை அமாவாசைத் திதி பங்குபட்டு 24.09.2014 புதன்கிழமை நண்பகல் 12.09 வரை உள்ளது. அதேபோல் விஜயதசமி 03.10.2014 காலை 6.41 நிமிடத்தில் ஆரம்பமாகி அன்று முழுமையாக உள்ளது. பின் இரவு 4.24 மணியுடன் தசமித் திதி நிறைவடைகின்றமையால் மகிடாசூர சம்காரமும் அன்றே நடைபெறும்.

இந்த விழா நிர்ணயத்தை சில எடுத்துக்காட்டுக்களுடன் 25.09.2014 வியாழக்கிழமை பத்திரிகைகளில் வெளிவந்த போதும் வாக்கிய பஞ்சாங்க திதி நிர்ணயத்தின்படி நவராத்திரி விழா கும்பம் வைத்தல் 24.09.2014 நண்பகல் 12.09 இல் இருந்து ஆரம்பித்திருத்தல் சிறப்பு. ஏனெனில் நவராத்திரி என்பது தேவியரை மாலை வேளையில் பூசிப்பதே சிறந்தது. ஆலயங்களிலும் நவராத்திரி பூசை ஏற்பாடுகள் மாலை வேளையே மேற்கொள்ளப்படுவது எமது ஊர் பாரம்பரிய வழக்கமாகவும் உள்ளது. அடுத்த நாள் 25.09.2014 நவராத்திரி விழா ஆரம்பித்திருந்தால் பிரதிமைத் திதி பிற்பகல் 1.23 உடன் நிறைவடைகின்றது. எனவே எங்ஙனம் ஆலயங்களில் கும்பம் வைப்பது, விரத அனுஷ்டானங்கள், விரத நிர்ணயங்கள் பற்றி இந்துக்கள் அறிந்திருப்பது அவசியமாகும். சோதிடம் இறைவனால் இறை சித்துக்கிணங்க அருளப்பட்டது. இதைக் கணிப்பதற்காக பஞ்சாங்கங்கள் காலக் கண்ணாடியாக செயற்படுகின்றன. இவற்றின் கணிப்புப்படியே நாம் இந்து சமய விரத நிர்ணயம் செய்கின்றோம்.

பிரபஞ்ச பிரம இரகசியம் ஏராளம். சாதாரண மானிடர்களால் அவற்றை இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாது. இது இவ்வாறு நடக்க வேண்டும் என்பது முடிந்த முடிவாயின் அது நடக்கும். எனவே இந்த நவராத்திரியின் திதி நிர்ணயம் கூறும் சோதிட உண்மைகளும் நடந்தேயாக வேண்டும். இதுவே விஜயதசமியின் உட்பொருளுமாம்.

### ஏடு தொடக்கல்

விஜயதசமி கல்விக்கு முக்கியத்துவம் உடைய நாளாகும். ஏனெனில் அறுபத்து நான்கு கலைகளுக்கும், பதினாறு செல்வங்களுக்கும் அதிபதியான தேவியரை வழிபடுவதோடு இவற்றைப் பெற்றால் பாதுகாக்கும் ஆன்ம வீரத்தையும், உடல் வீரத்தையும் இந்த நாளிலே பெறுகின்றோம். எனவே சிறு மழலைப் பிள்ளைகள் தமது கல்வியை ஆரம்பிக்க சிறந்த நாள் விஜயதசமி ஆகின்றது. இந்து சமயம் தைப்பூசத் திருநாளிலும் ஏடு தொடக்குவதற்குரிய காரண காரிய சோதிட சமய காரணங்களைக் குறிப்பிடுகின்றது.

புரட்டாதி மாதத்திலே கன்னி இராசியே புதனுக்குரிய அதிகார வீட்டிலே சூரியன் இருப்பது விசேடமாகும். ஏனெனில் புதன், சூரியன், குரு, சந்திரன் ஆகியோர் கல்விப் புலமைக்கு காரணர் ஆகின்றனர்.

இந்த ஆண்டு கடக இராசியில் குரு உச்சமாகவும் கன்னி இராசியில் சூரியன், புதன் கூடி இருப்பது ஏடு தொடக்குவதற்கு சிறந்த நாளாகும். பொதுவாக பாடசாலைகளில் ஏடு தொடக்குதலை ஏதோ ஒரு பகல் வேளையில் பூசை முடித்து கும்பம் கலைத்த பின்னர் நல்ல நேரம் பார்க்காமல் கல்வி ஆரம்பம் செய்வார்கள். அது சரியன்று. தேவியர் கும்பத்தில் அவாகனமாக எழுந்தருளி இருக்கும் போதே தக்க குருவைக் கொண்டு சிறப்பாக ஏடு தொடக்க வேண்டும். இதற்கான சுப நேரத்தைக் கண்டறிவது சிறப்பாகும்.

மெய்ப் பொருளை அறிந்தவர்களைக் கொண்டு ஆற்றிடும் கருமம் சிறப்பானதாகும். எனவே விஜயதசமி அன்று வெள்ளிக்கிழமை சுப வேளையான 7.30 தொடக்கம் 9 மணி வரை அல் லது 12.45-1.30 வரை உள்ள சுப நேரத்தில் ஆரம்பிக்கலாம்.

தற்காலத்திலே எல்லாம் போலியாக உருமாறத் தொடங்கிவிட்டன. அல்லது சம்பிரதாயத்துக்கான ஒன்றாகிவிட்ட நிலையில் ஏடு தொடக்குவதற்கு கடதாசி ஏடுகளை உபயோகிப்பதை தவிர்ப்பது நன்றாம். உரு ஏற்றப்பட்ட பனை ஓலை ஏட்டுச் சுவடிகளைப் பயன்படுத்துவது சிறந்ததாகும். அந்த வகையில் எமது முன்னோர் மிகச் சிறந்த அறிவாற்றல் கொண்டவர்களாக விளங்கியமைக்கு இந்த ஏட்டுச் சுவடியே ஆதாரம். நூற்றாண்டு பழைமை கொண்ட போதும் இன்றும் இந்தச் சுவடிகளை நாம் காண்கின் றோம்.

இந்து சமயத்திலே உலோகங்களுக்கும் தனியான இடம் உண்டு. அதன் உபயோகங்களுக்காக உண்டு. அந்த வகையில் பனை ஓலையில் தக்க முறையில் பதப்படுத்தி உருவேற்றப்பட்ட ஓலைச் சுவடிகள் தனி இடம்பெறுகின்றன. எமது முன்னோர் இந்த ஓலைச்சுவடிகளில் செப்பு உலோக ஆணிகளால் எழுதினர்.

தமிழர் தொல் மரபுக் கல்வியின் காத்திரத் தன்மையை இந்தச் சுவடிகள் எடுத்து இயம்புகின்றன. காலத்தால் கரைந்து போகாமல் நின்று நிலைக்கக்கூடிய சீரிய அறிவுத்திறன் வாய்ந்தவர்களாக நாம் திகழ்ந்து உலகப் பந்தில் மறைந்து கொண்டிருக்கும் தொல் தமிழர் கல்வியின் அறிவியலையும் வெளிக்கொண்டு வர இந்த ஏடு தொடக்க நாளை ஆதாரமாகப் பற்றுவோம். இனிவரும் காலத்தில் பனை ஓலையிலான காகிதத் தாளை தயாரிப்பதற்கான சக்தியைப் பெற வேண்டிசகலகலாவல்லியை வணங்குவோமாக.

**இன்னல் களைந்து இகபரம் வேண்டி**
**சகலகலா வல்லியைத் தொழுவோம்**
**புதுமையில் பழைமையைக் காண்போம்**
**புத்தாக்க சக்தியின் துணை**
**வேண்டி நிற்போம்**

என்று எல்லாம் வல்ல இறைவியை வேண்டி நலம் பல பெறுவோமாக.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதற்றத்துடன் காணப்படுவார்கள்.



**இடபம்**: எந்தச் சூழ்நிலையிலும் மனம் தளராது விடாமுயற்சியுடன் காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் உண்டாகும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். திடீர் சுபச்செலவு ஏற்படும். சிலருக்கு மருத்துவ செலவு ஏற்படும்.



**மிதுனம்**: தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயந்து வேலை செய்ய வேண்டி இருக்கும். உழைப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் உறவினருடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். சொத்து விவகாரங்களில் கவனம் தேவை.



**கடகம்**: எதிர்பாராத செலவு உண்டாகும். வாக்கு வாதத்தைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களிடம் அனுசரித்துப் போவது நன்மைதரும். வீண் பேச்சைக் குறைப்பது நல்லது. எடுத்த காரியங்களைச் செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகலாம்.



**சிங்கம்**: எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மன உறுதியுடன் சமாளித்து வெற்றி காண்பீர்கள். எதிர்ப்புகள் நீங்கும். நீண்ட நாள்களாக இருந்த பிரச்சினை குறையும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும்.



**கன்னி**: உங்கள் வாக்கு வன்மையால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரிய ங்களில் சாதகமான நிலை காணப்படும்.



**துலாம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, வீண் அலைச்சல் குறையும். எதிர்பார்த்த அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும். சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும்.



**விருச்சிகம்**:மற்றவர்களின் இடையூறுகள் வந்து சேரலாம். பேச்சை கட்டுப்படுத்திக் கொண்டு செயலில் இறங்குவது நன்மை தரும். நண்பர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். நிதானமாகச் செயற்படுவது நல்லது.



**தனுசு**: தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளைத் தட்டிக் கொடுத்து எதையும் செய்யச் சொல்வது நல்லது.



**மகரம்**: வீண் பேச்சைக் குறைப்பது நன்மை தரும். தங்கள் உடைமைகளை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது அவசியம். உத்தியோகத்தர்கள் மேலிடத்தை அனுசரித்துச் செல்வது நல்லது. எடுத்த வேலையை செய்து முடிப்பதற்குள் பல தடங்கல்கள் உண்டாகும்.



**கும்பம்**: உங்களது முயற்சிகளுக்கு இருந்த முட்டுகட்டைகள் அகலும். மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். நண்பர்களிடம் பகை ஏற்படலாம். பிடிவாதத்தைத் விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். வீண் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம்.



**மீனம்**: பயணம் மூலம் சாதக பயன் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டிவரும்.


## நாளை

**புரட்டாதி-18 சனிக்கிழமை | 04.10.2014**

திதி: ஏகாதசி பி.இ. 02.02 வரை
நட்சத்திரம்: திருவோணம், பி.ப. 04.28 வரை

சுபநேரம்:03.02-04.32 வரை
இராகுகாலம்:09.02-10.32 வரை
ஏகாதசி விரதம்

# உலகின் மிகச்சிறிய புத்தகத்தை உருவாக்கிய கனடிய சகோதரர்கள்



கனடாவைச் சேர்ந்த இரு சகோதரர்கள் உலகிலேயே மிகச்சிறிய புத்தகம் ஒன்றை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளார்கள்.

கனடாவில் உள்ள டூனிப் டவுன் என்ற பகுதியைச் சேர்ந்த மால்காம் டௌக்லஸ் சாப்லின்-ராபர்ட் சாப்லின் என்ற இரு சகோதரர்கள் கிரிஸ்டலைன் சிலிகான் என்ற பொருளால் உலகின் மிகச்சிறிய புத்தகம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். 70 மைக்ரோ மீற்றர் அகலமும் 100 மைக்ரோ மீற்றர் நீளமும் கொண்ட இந்தப் புத்தகம் 30 பக்கங்களைக் கொண்டது.

இந்தச் சிறிய புத்தகத்தில் உள்ள எழுத்துக்களை நுணுக்குக் காட்டியின் மூலமாக மட்டுமே பார்க்க முடியும். மேலும் மனிதனின் தலைமுடியை விட இந்தப் புத்தகத்தின் அகலம் குறைவு என்பது அதிசயமான ஓர் விடயம் ஆகும்.

அவர்களுடைய சாதனையை கின்னஸ் சாதனை நிறுவனம் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளது.

தற்போது பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள சைமன் பிரேஸர் பல்கலைக் கழகத்தில் உள்ள நூலகத்தில் இந்தப் புத்தகம் வைக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தை உருவாக்க இந்த இரு சகோதரர்களுக்கு 15,000 டொலர்கள் செலவாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பிரபஞ்சத்தின் எல்லையற்ற நூற் களஞ்சியம் மனத்தினுள்

நாம் எந்தவொரு மனிதனின் குணத்தை எடுத்துக் கொண்டாலும் உண்மையில் அது அவனுடைய உள் உணர்வுகள் அத்தனையும் சேர்ந்து உருவான ஒன்று என்பதையும், அவனுடைய எண்ணங்கள் அத்தனையினதும் திரண்ட வடிவம் என்பதையும் அறியலாம். இவற்றை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சரிசமமான இடத்தைப் பெறுகின்றன.

வெளி உலகம் என்பது உங்களை உங்கள் மனதைப் பற்றி ஆராய்வதற்காக அமைந்த வெறும் ஒரு தூண்டுகோலும் சாக்குப் போக்குமேயாகும். ஆனால் அந்த ஆராய்ச்சிக்கு உரிய பொருள் உங்களது மனமாகவே இருக்க வேண்டும். மரத்திலிருந்து அப்பிள் விழுந்தமை நியுட்டனுக்கு ஒரு தூண்டுதல். அதன்மூலம் அவர் தன்னுடைய மனத்தை ஆராய ஆரம்பித்தார். தன்னுடைய முன்சிந்தனைத் தொடர்களை எல்லாம் முறைப்படுத்தித் திருத்தி அமைத்த போது அவற்றுக்கு இடையே அமைந்திருக்கின்ற ஒரு புத்தம் புதிய தொடர்பை அவர் கண்டுபிடித்தார். அதை நாம் புவியீர்ப்பு விதி என்று கூறுகிறோம். இது அப்பிள் மரத்திலோ அல்லது பூமியின் நடுவிலோ இல்லை. எனவே ஆன்மாவைப் பற்றிய ஞானமோ இந்த உலகத்தைப் பற்றிய அறிவோ எல்லாமே மனிதனின் மனதில் தான் இருக்கின்றன. பல இடங்களில் இவை கண்டு பிடிக்கப் படுவதே இல்லை எல்லாமே மறைந்து கிடக்கின்றன.

அந்த மறைப்புக்கள் எல்லாம் மெல்ல நீக்கப்படும் போது கற்கிறோம் என்று நாம் சொல்கிறோம். அறிவின் அளவு இந்த மறைப்பை நாம் விலக்குகின்ற அள வையே பொறுத்திருக்கிறது. இந்தத் திரை எந்த மனிதனிடமிருந்து நீக்கப்பட்டிருக்கிறதோ அவன் மிகுதியான ஞானத்தை உடையவனாக விளங்குகிறான். உலகம் பெற்றுள்ள எல்லா வகையான அறிவும் மனதிலிருந்து வந்ததேயாகும். பிரபஞ்சத்தின் எல்லையற்ற நூல்களஞ்சியம் உங்களுடைய மனத்துக்குள்ளேயே இருக்கிறது.

எனவே நம்முடைய எல்லா வகையான உணர்வுகள் உருகும் உருக்கங்கள், வடிக்கின்ற கண்ணீர்கள், செயல்கள் சிரிப்புக்கள், மகிழ்ச்சிகள் ஆனந்தங்கள், துன்பங்கள், துடிப்புக்கள், அழுகைகள், சாபங்கள், வாழ்த்துக்கள், பாராட்டுதல்கள், திட்டுதல்கள் இவை எல்லாம் எமது மனதிலிருந்தே தோன்றுகின்றன.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள்,

இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | 4 | 9 | | 7 | |
| 9 | | | | | | 3 | | 5 |
| | 7 | 5 | | | 2 | | 6 | |
| 1 | | | | | | 7 | 5 | |
| 5 | | 8 | | | | 4 | | 2 |
| | 3 | 2 | | | | | | 8 |
| | 4 | | 2 | | | 6 | 8 | |
| 8 | | 6 | | | | | | 3 |
| | 5 | | 6 | 3 | | | 1 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 2 | 8 | 3 | 5 | 6 | 4 | 1 |
| 1 | 5 | 6 | 2 | 4 | 7 | 9 | 8 | 3 |
| 3 | 4 | 8 | 6 | 9 | 1 | 2 | 7 | 5 |
| 9 | 3 | 5 | 7 | 8 | 6 | 4 | 1 | 2 |
| 8 | 2 | 7 | 1 | 5 | 4 | 3 | 9 | 6 |
| 6 | 1 | 4 | 3 | 2 | 9 | 7 | 5 | 8 |
| 4 | 6 | 9 | 5 | 1 | 3 | 8 | 2 | 7 |
| 2 | 7 | 1 | 9 | 6 | 8 | 5 | 3 | 4 |
| 5 | 8 | 3 | 4 | 7 | 2 | 1 | 6 | 9 |

# சம்பியன் லீக் ரி-20 இறுதியாட்டத்தில் சென்னை - கொல்கத்தா



பந்துவீச்சில் கலக்கிய நெஹ்ரா

தொடக்கத்தில் தடுமாறி பிராவோ, ஜடேஜாவின் துடுப்பாட்டத்தால் ஓட்டங்களைச் சேர்த்த சென்னை அணி நெக்ரா தலைமையிலான பந்துவீச்சு படையின் உதவியுடன் பஞ்சாப் அணியின் இலக்குகளை வீழ்த்தி 65 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது.

நேற்று இரவு நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஐ.பி.எல் அணிகளான கிங்ஸ் லெவன் பஞ்சாப்பும், சென்னை சுப்பர் கிங்ஸும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் களமிறங்கிய சென்னைக்கு ஆரம்பம் சொல்லிக் கொள்ளும்படியாக அமையவில்லை. ஸ்மித் 14 ஓட்டங்களுடனும், அதிரடி வீரர்கள் மக்கலம், ரெய்னா 6 ஓட்டங்களுடனும் வெளியேறினர். 4ஆவது இலக்குக்கு ஒன்று சேர்ந்த டு பிளசிஸ் மறும் டுவைன் பிராவோ நிலைத்து நின்று அதிரடியாக ஆடினர். 33 பந்துகளில் 49 ஓட்டங்களை பெற்று டு பிளசிஸ் வெளியேறினார். களமிறங்கிய நெகி 8 ஓட்டங்களுடன் அவ்வன்னா பந்தில் வெளியேற, ஏற்கனவே வீசிய ஓவரின் இறுதிப்பந்தில் இலக்கைக் ஸ்கைப்பற்றியிருந்த அவருக்கு ஹற்றிக் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. உள்ளே வந்த டோனியை முதல் பந்திலேயே வெளியேற்றிய அவர் ஹற்றிக் சாதனையை புரிந்தார். இறுதி நேரத்தில் பிராவோ, ஜடேஜா அதிரடி காட்ட சென்னை அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பிராவோ 39 பந்துகளில் 67 ஓட்டங்களையும், ஜடேஜா ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அவ்வன்னா 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு பலமான துடுப்பாட்ட வரிசையுடன் களமிறங்கிய பஞ்சாப் பணி சென்னையின் பந்து வீச்சுக்கு தடுமாறியது. ஓட்டவேகத்தையும் பேணாமல், இலக்குகளையும் இழந்த பஞ்சாப் 18.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 117 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதன் மூலம் 65 ஓட்டங்களால் வெற்றி பெற்ற சென்னை அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது. பஞ்சாப் சார்பாக, அக்ஷர் பட்டேல் 31 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 22 ஓட்டங்களையும் அதிகபட்ச்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில், நெஹ்ரா 3ஓவர்களை வீசி 9 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 2 இலக்குகளையும், மோகிற் சர்மா, பவான் நெஹ்ரா,ரெய்னாஆகியோரும்தலா2இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தின் மூலம் அணியைக் காப்பாற்றிய டுவைன் பிராவோ தெரிவானார்.



பான்டேயின் துணையுடன் அதிரடி காட்டிய கலிஸ் கொல்கத்தாவை இறுதிக்கு அழைத்துச் சென்றார்.

நேற்று மாலை ஐதராபாத்தில் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஹோபேட் ஹரிக்கேன்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி யும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹோபேட் ஹரிக்கேன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.மிகப்பெரிய இலக்கை நிர்ணயிக்கும் முனைப்புடன் களமிறங்கிய ஹோபேட் அணியின் தொடக்க வீரர்கள் கொல்கத்தாவின் பந்து வீச்சிற்க்கு கட்டுபட்டுப் போயினர். முதலாவது ஓவரில் 3 ஓட்டங்கள் மட்டுமே பெறப்பட, இரண்டாவது ஓவரிலும் ஒரு ஓட்டமே பெற்றிருந்த நிலையில் ஓவரின் இறுதிப்பந்தில் டொம் மைக்கல் ஓட்டமெதனையும் பெறாமல் ரசலின் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். மற்றைய தொடக்க வீரர் பென் லங்க் மறுமுனையில் ஆட்டத்தை அதிரடியாகக் கொண்டு செல்ல முயல, களமிறங்கிய அதிரடி வீரர் பிலிஷார்ட் யூசுப் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். களமிறங்கினார் சொய்ப் மலிக், ஆட்டத்தின் நான்காவது ஓவரில் எல்லையை நோக்கி பவுண்டரிகளாக பந்துகள் உருளத் தொடங் கின. ஒரளவுக்கு ஓட்ட வேகத்தை சரிப் படுத்த முயல்வதற்குள் பென் டங்க் 39 ஓட்டங்களுடன் வெளியேறினார். சட்டென அடக்கி வாசிக்க தொடங்கிய மலிக் களமிறங்கிய ரவிஸ் பேர்ற் உடன் இணைந்து மெதுவாக இலக்கை நகர்த்தினார். பேர்ற் 13 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அவரைத் தொடர்ந்து வந்தவர்களும் அடுத்தடுத்து ஆட்டமிந்தனர். மலிக் மட்டும் நிலையாக நின்று சந்தர்ப்பம் பார்த்து பந்துகளை விளாசி 4 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 46 பந்துகளில் 66 ஓட்டங் களைஆட்டமிழக்காமல் பெற்றார். ஹோபேர்ட் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. எட்டக் கூடிய இலக்கை விரட்டிய கொல்கத்தாவுக்கு தொடக்கம் சுமாரானதாகவே இருந்தது. அணி 20, 44 ஓட்டங்களை பெற்றிருந்த போது முறையே கம்பீர் 4 ஓட்டங்களுடனும், உத்தப்பா 17 ஓட்டங்களுட்டனும் ஆட்டமிழந்தனர். பின்னர் கூட்டுச் சேர்ந்த ஜக்ஸ் கலிஸ், மனிஸ் பான்டே ஹோபேட்டின் பந்துகளை விளாசித் தள்ளினர். அணி வெற்றியை நெருங்கிக் கொண்டிருந்த போது பான்டே 40 ஓட்டங்களில் வெளியேறினார். உட்புகுந்த யூசுப் பதான் அமைதி காக்க கலிஸ் அடித்தாடினார். இரண்டு ஓவர்களில் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் 19ஆவது ஓவரின் முதல் பந்தை கலிஸ் சிக்ஸருக்கு விளாச, அந்த ஓவரில் 11 ஓட்டங்கள்பெறப்பட்டன. இறுதி ஓவரில் 6 ஓட்டங்கள் பெற வேண்டியிருக்க, எதிர் அணியினர் கடுமையான திட்டங்களை தீட்டினர். ஆனால், ஓவரின் முதல் பந்தையே சிக்ஸருக்கு விளாசிய கலிஸ் வெற்றியை உ[illegible] செய்தார். 40 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்களாக 40 பந்துகளில் 54 ஓட்டங்களை குவித்து கொல்கத்தாவை இறுதிக்கு அழைத்துச் சென்ற கலிஸ் ஆட்டநாயகனாகத் தெரிவான்னார்.

## மாறாத காயம்; தொடரும் விலகல்



இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான ரோகித் சர்மா காயம் காரணமாக தொடர்ந்தும் அவதிப்பட்டுவரும் நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான தொடரிலிருந்து விலகினார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரில் விரல் மற்றும் தோள்பட்டையில் உபாதைகளுக்கு உள்ளான ரோகித் சர்மா அந்த தொடரில் இருந்து இடைவிலகினார். காயத்திலிருந்து குணமடையாத நிலையில் தற்போது நடைபெற்றுவரும் சம்பியன் லீக் தொடரிலும் அவரால் விளையாட முடியாமல் போனது. தொடரில் அவர் அணித்தலைவராக இருந்த மும்பை அணி பொலார்ட் தலைமையில் விளையாடி தகுதிச் சுற்றுடனேயே வெளியேறியிருந்தது.

இந்த நிலையில் அவரது கைவிரல் காயம் குணமடைந்துள்ள போதிலும் தோள்பட்டை காயத்திலிருந்து இன்னமும் குணமடையாத அவர், அதிலிருந்து மீண்டு வர மேலும் மூன்று வாரங்கள் ஆகும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் மேற்கிந்தியதீவுகளுக்கெதிரான ஒருநாள் தொடர் மற்றும் டி- 20 ஆட்டத்தில் அவரால் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை நடக்கவுள்ளது. டெஸ்ட் தொடர் வருகின்ற 30ஆம் திகதியே தொடங்கவுள்ளதால்· அதில் பங்கேற்பதற்கான்வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவருகிறது. (ரி)

## நடவடிக்கை இல்லை



பாகிஸ்தான் அணியின் வீரர் யூனிஸ் கான், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகத்துக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டமைக்கும், தான் இல்லாமல் டெஸ்ட் அணியை எவ்வாறு கட்டி எழுப்புகின்றனர் என நான் பார்க்கின்றேன் என சவால்விட்டமைக்கும் எதிராக எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சஹாரியார் கான் தெரிவித்துள்ளார்.

யூனிஸ்கான் இவ்வாறு நடந்து கொண்டது சிறுபிள்ளைத்தனமான செயல் என அவர் கூறியுள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்துக்கு உட்பட்ட ஒரு வீரர் இவ்வாறு நடந்து கொண்டமைக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும். ஆனாலும் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என சஹாரியார் கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் நடந்து கொண்ட விதம் எனக்குப் பெரிய அதிர்ச்சியை தந்தது. யூனிஸ்கான் ஒரு சிரேஷ்ட வீரர். நாங்கள் அவர் மீது பெரிய மரியாதை வைத்துள்ளோம் எனவும் சஹாரியார் கான் கூறியுள்ளார். அவருக்கு கடிதம் மூலம் இவ்வாறு இனி வரும் காலங்களில் நடந்து கொள்ளவேண்டாம் என அறிவுறுத்தியுள்ளோம். இது அவரின் மரியாதைக்கும் நல்லது அல்ல. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நற் பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் என கூறியுள் ளோம். அவர் நிலைமைகளை விளங்கிக்கொள்வார் எனநம்புகின்றேன் என அவர் மேலும்தெரிவித் துள்ளார். நான்விரைவில்அவரை சந்திக்கவுள்ளேன். அப்போது அவருடன் பேசி அவருடைய பிரச்சினைகளை கேட்டறியவுள்ளேன். ஆனால் ஆஸ்திரேலியா அணிக்கான ஒருநாள் அணியை தெரிவுக்குழு தெரிவுசெய்துவிட்டது என அவர் தெரிவித்துள்ளார். (ரி)

# கோலூன்றிப் பாய்தலில் அனித்தா தேசிய ரீதியில் புரிந்தார் சாதனை

யாழ்ப்பாணம்,ஒக்.3

பாடசாலை மட்டத்திலான சாதனையை முறியடித்த அதே வேளை, அகில இலங்கை ரீதியிலான திறந்த போட்டிச் சாதனையையும் முறியடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா.




தேசிய மட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டிகள் நேற்று வியாழக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

இதில் 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா 3.32 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். அதேவேளை அகில இலங்கை ரீதியிலான சாதனையையும் முறியடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.

2011 ஆம் ஆண்டு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி பவித்திரா 3.01 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நிலை நாட்டிய சாதனையை முறியடித்த அனித்தா, 2013 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டியில் நடைபெற்ற திறந்த போட்டியின் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் கடற்படை வீராங்கனை அனோமா கருணவம்சா 3.31 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து நிலை நாட்டிய சாதனையையும் முறியடித்தார்.

இவருக்கான பயிற்சிகளை விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் சுபாஸ்கரன் வழங்கியிருந்தார். (ரி- 23)

# கரம் சம்பியனானது யாழ்.பல்கலை அணி

யாழ்ப்பாணம்.ஒக்.3

இறுதிப்போட்டியில் மூன்று ஒற்றையர் ஆட்டங்களையும் வென்றதன் மூலம் 3:0 என்ற அடிப்படையில் பரியோவான் கல்லூரி அணியை வீழ்த்தி கரம் சம்பியனானது யாழ். பல்கலைக்கழக அணி.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கரம் அணியினரால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான ஆண்களுக்கான கரம் சுற்றுப்போட்டி கடந்த மாதம் 28ஆம், 29 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி மோதியது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த ஆர்.ஜீ.சி.ஜெயதிலக ஸ்ரீ காமாட்சி அணியின் எஸ். செலிஸ்ரனுடன் மோதி 31:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த எஸ். எம்.கருணாரட்ண ஸ்ரீ காமாட்சி அணியின் எம்.சோபாநந்துடன் மோதி 27:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வி. டினேஸ்குமார ஸ்ரீ காமாட்சி அணியின் எம்.குகதீபனுடன் மோதி 26:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். இதன் மூலம் 3:0 என்ற அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக அணி ஸ்ரீ காமாட்சி அணியினரை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில்பரியோவான் கல்லூரியைஎதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதியது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியின் எஸ். குமரேசன் பரியோவான் கல்லூரியின் எஸ்.பிரவீன்சனுடன் மோதி 28:06 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் பரியோவான் கல்லூரியின் எஸ்.மிதுஸன் கே.ஸி.ஸி.ஸி அணியின் ஆர்.வேந்தனுடன் மோதி 26:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் பரியோவான் கல்லூரியின் எம்.அபினாஸ். கே.ஸி.ஸி.ஸி. அணியின் எஸ். வல்லவக்குமரனுடன் மோதி 26:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியின் எஸ்.குமரேசன், எஸ்.நியூட்டன் குழுவினர் பரியோவான் அணியின் பி.இ.டெனுஸன், எஸ்.பிரவீன்சன் குழுவினருடன் மோதி 28:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர். இரண்டாவது இரட்டையர் ஆட்டத்தில் பரியோவான் அணியின் எஸ். யூட்மன், எம்.அபினாஸ் குழுவினர் கே.ஸி.ஸி.ஸி. அணியின் எஸ்.வல்லவக்குமரன், ஜி.டிஷிந் குழுவினருடன் மோதி 31:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர். 5 போட்டிகளில் 3 போட்டிகளில் வெற்றி பெற்ற பரியோவான் கல்லூரி அணியினர் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியினரும் பரியோவான் கல்லூரி அணியினரும் மோதிக் கொண்டனர். முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியின் ஆர்.ஜி.சி.ஜெயதிலக பரியோவான் கல்லூரியின் எஸ்.பிரவீன்சனுடன் மோதி 31:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த வி.டினேஷ்குமார பரியோவான் கல்லூரியின் எம்.அபினாசுடன் மோதி 25:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்திலும் யாழ். பல்கலைக்கழக அணியினர் வெற்றி பெற்றனர். இதன் மூலம் இறுதிப் போட்டியில் 3:0 என்ற அடிப்படையில் பரியோவான் கல்லூரியைத் தோற்கடித்த யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் ஸ்ரீ காமாட்சி அணியினரும் கே.ஸி.ஸி.ஸி. அணியினரும் மோதிக் கொண்டனர். முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியின் எஸ்.குமரேசன் ஸ்ரீ காமாட்சி அணியின் எம்.சோபானந்துடன் மோதி 24:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்ரீகாமாட்சி அணியின் எஸ்.செலிஸ்ரன் கே.ஸி.ஸி.ஸி. அணியின் ஆர்.வேந்தனுடன் மோதி 25:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்ரீ காமாட்சி அணியின் ரி.அனுராம் கே.ஸி.ஸி.ஸி. அணியின் எஸ்.வல்லவக்குமரனுடன் மோதி 28:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

நடைபெற்ற5 போட்டிகளில், 3 போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம் ஸ்ரீ காமாட்சி அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ரி-23)

## இன்றைய ஆட்டங்கள்

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்றுவெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாஷையூர்சென்.அன்ரனிஸ்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *


நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. (ரி- 23)

# மகாஜனவின் ஹொக்கிச் சுற்றுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நடத்தும் 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான லீக் முறையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு : முதலாவது ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாவது ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தெல் லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



பெண்களுக்கான முதலாவது ஆட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் குளமங்கால் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாவது ஆட்டத்தில் குளமங்கால் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எந்தவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ரி- 23)

## மரண அறிவித்தல்

### சின்னையா தங்கரத்தினம்
### (கிட்ணபிள்ளை)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், அத்தாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தங்கரத்தினம் நேற்று முன்தினம் (01.10.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராஜா, கந்தையா, பாக்கியம் மற்றும் ரத்தினம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், தெய்வானை ஆகியோரின் மைத்துனரும், பரமநாதன், சண்முகநாதன் (லண்டன்), சிவநாதன், பாலநாதன் (லண்டன்), நேரீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணநாதன் (தீயணைப்புப் படை உறுப்பினர்), கமலவதனா (பாப்பா), மங்கையர்க்கரசி (லண்டன்), விமலேஸ்வரி (யா/இடைக் குறிச்சி சுப்பிரமணியம் வித்தியாலயம்), ராஜினி (லண்டன்) ஆகியோரின் மாமனும், சாதனா (MSU), ஹரிரிதர்ஷன் (Silit), சாதுரியா, திலக்ஷன், கிரிதரன், பவித்திரன், கஜீவன், தர்ஜிகா, ஜெனிகா மற்றும் லண்டனைச் சேர்ந்த நிதர்ஷன், அனோஜன், டனுசன், சஷ்வினி, லக்ஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.10.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
அத்தாய், அல்வாய். (C/16742)(10) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



01.10.2014 அன்று அகாலமரணம் அடைந்த எமது நண்பன்

### சிவராசா நிசாந்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*May his soul rest in peace*

A/L 2004 Batch Students
Students St John's College
JAFFNA.

(c/16743)

# நாளை நரைன் பந்து வீச முடியாது



நாளை நடைபெறவுள்ள சென்னை அணிக்கெதிரான இறுதியாட்டத்தில் கொல்கத்தா அணியின் சுனில் நரைன் பந்து வீச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெற்று வரும் சம்பியன் லீக் தொடரின் போது, விதிமுறைகளுக்கு புறம்பான முறையில் பந்து வீசிய குற்றச்சாட்டுக்கு பாகிஸ்தானின் மொகமட் ஹபீஸ் மற்றும் அட்னான் ரசூல், பிரநீலன் சுப்ராயன் ஆகியோர் உள்ளாகியிருந்த நிலையில், மேற்கிந்திய தீவுகளின் வீரரும் சம்பியன் லீக்கில் கொல்கத்தா அணிக்காக விளையாடும் சுனில் நரைன் மீதும் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. ஐதராபாத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற டொல்பின்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது, சுனில் நரைன் வீசிய குயிக்கர் டெலிவரி பந்து வீச்சில் நடுவர்களுக்கு சந்தேகம் எழுந்தது. அதன்போது களத்தில் இருந்த நடுவர்களான அனில் சௌத்ரி, செட்டிஹோடி சம்சுதீன், மூன்றாவது நடுவர் குமார் தர்மசேன ஆகியோர் இந்த புகாரைத் தெரிவித்துள்ளனர். அதனையடுத்து சுனில் நரைனின் சந்தேக பந்து வீச்சு குறித்து பிசிசிஐயின் சந்தேக பந்துவீச்சு நடவடிக்கைக் குழுவிடம் அதிகாரப்பூர்வ மதிப்பீடு கோரப்பட்டதுடன் நரைனுக்கும் எச்சரிக்கை விடப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய அரையிறுதி ஆட்டத்திலும் இவரது பந்து வீச்சுக் குறித்து நடுவர்கள் புகார் அளித்துள்ளனர். இது இவர் மீது அளிக்கப்படும் இரண்டாவது புகார் ஆகும். சம்பியன் லீக் விதிமுறைகளின்படி இரண்டு தடவைகள் எச்சரிக்கைக்கு உள்ளாகும் பந்து வீச்சாளர் குறித்த தொடரில் பந்து வீச முடியாது. எனவே சம்பியன் லீக் தொடரில் தடைக்கு உள்ளாகியுள்ள நரைன் நாளை நடைபெறவுள்ள சென்னை அணிக்கெதிரான இறுதியாட்டத்தில் பந்து வீசமுடியாது.

(ரீ)

# நவிண்டில் உதைபந்தாட்டம்; றேஞ்சர்ஸ், பொம்மர்ஸ் வெற்றி



யாழ்ப்பாணம்,ஒக்.3

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகங்கள் வெற்றி பெற்றுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 3 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக வழங்கப் பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத் தில் சமரபாகு நியூட்டன் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது.

(ரீ- 23)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
11 . 01 . 1946

மறைவு
14 . 10 . 2013



### இளையதம்பி செல்வராசா
(ஓய்வுநிலை அதிபர்)

ஆண்டொன்று கடந்திட்டாலும்
ஆறிடுமோ நம் வேதனைகள்
அவனியில் நம்மை ஆதவன்போல் ஒளிரச் செய்தீர்
அன்று போல் என்றென்றும்
உம் நினைவுகள் எம் நெஞ்சில்

சிவ இல்லம், பொலிகண்டி. குடும்பத்தினர்.

# சென்.மைக்கல் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் வில கல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங் கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வரு கின்றன. இதில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் உடுப்பிட்டி யூத் விளையாட் டுக்கழக அணியும், திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்றுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழக அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ரீ- 23)

**இசை வகுப்புக்கள்**


இசைமாணிப் பட்டம் பெற்ற பிரபல ஆசிரியரால் வயலின், வாய்ப்பாட்டு வகுப்புக்கள் புதிதாக விஜயதசமி தினமாகிய இன்று ஆரம்பிக்கப்படும்.

தொடர்பு : 36, செட்டித்தெரு, நல்லூர். - 021 222 0076

## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் நடுவில் பொன்னு
(முன்னாள் இ.போ.ச சாரதி)

தோற்றம் 20.05.1940 மறைவு 09.03.2014



அன்பிலே தெய்வமாய்
அறிவிலே ஆசானாய்
பண்புடனே எமை வளர்த்து
பாசமழை பொழித்து
இன்பமுடன் நாம்வாழ
எல்லாம் எமக்களித்து
இறைவனடி சேர்ந்தாய் நீ!
என்றும் நாம் மறவோம்

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்து தொலைபேசி மூலமும் அஞ்சலி ஆறுதல் தெரிவித்த அச்சுப்பிரதி அடித்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகள் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதோடு,

இன்று வியாழக்கிழமை (03.10.2014) நண்பகல் 12.00 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு. குடும்பத்தினர்.

## வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல் -2014

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தற்பொழுது வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக உரிய தகைமைகளைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் ஆள்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல | பதவிப் பெயர் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | சுகாதாரத்தொழிலாளி | 02 |
| 02 | ஆயுர்வேத மருந்தாளர் | 01 |

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் 3 வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 5 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிட சான்றிதழ் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அல்லது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலின் மூலப்பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2014.10.20 அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகாது.
3. நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமை**

**பதவி இல.01 (சுகாதாரத்தொழிலாளி)**
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகளுடன் ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையொன்றில் 8 ஆம் வகுப்பு/ 9ஆம் ஆண்டு சித்தி கருத்தில் கொள்ளப்படும்.
**சம்பளம்:-** 2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/2006(IV) இற்கமைவாக மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ( PL-1 2006 A) ரூ.11730-10x120-10x130-10x145-12x160-17600

**பதவி இல.02 (ஆயுர்வேத மருந்தாளர்)**
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறுமாதங்களுக்கு குறையாத வகையில் தொழிற்பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
**சம்பளம்:-** 2007.08.24ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/2006(IV) இற்கமைவாக மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ( PL- 2 2006 A) ரூ.12210-10x130-10x145-10x160-12x170-18600

**தெரிவு செய்யப்படும் முறை**

1. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

* வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலையலுவலகத்தில் ரூ.100.00 ஐ செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப் படவேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க முடியும்.
* விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
* விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு **செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (மல்லாகம்)** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும்
* தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படல் வேண்டும்
* ஆள்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்கு பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் இந்நியமனம் நிறுத்தப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 2014.10.20 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இ. அறிவரசன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.(மல்லாகம்)
2014.10.03.

(சி/16736)(10.6)

## நுகர்வுக்கு உதவாத உணவுப்பொருள்களை திடீர் சோதனையில் கைப்பற்றி அழிப்பு



கல்முனை, ஒக்.3
கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சில பகுதிகளில் அமைந்துள்ள உணவகங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது மனித நுகர்வுக்கு உதவாத ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எம்.சி.எம்.மாஹிரின் வழிகாட்டலில் கல்முனைப் பிராந்திய மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் பி.பேரம்பலம் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ஜே.எம்.நிஸ்தார், எம்.அரியராஜா உட்பட மற்றும் பல அதிகாரிகளின் பங்கேற்புடன் இந்தச்சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கல்முனை, கல்முனைக்குடி, மருதமுனை போன்ற பகுதிகளில் அமைந்துள்ள ஹோட்டல்கள், தேநீர்சாலைகள் மற்றும் அரிசி விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் இந்தக் குழுவினர் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது திறந்த நிலையில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பண்டங்கள், சுத்தம், சுகாதாரம் பேணப்படாத மற்றும் காலாவதியான உணவுத் தயாரிப்புக்கள் என்பன கைப்பற்றப்பட்டதுடன் அவற்றின் உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் கல்முனை மாநகர சபை வளாகத்தில் வைத்து மாநகர ஆணையாளர் ஜே.லியாகத் அலி மற்றும் பிரதம சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எம்.சி.எம். மாஹிர், மாநகர முதல்வரின் செயலாளர் ரீ.எல்.எம்.பாறூக் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் எரியூட்டி அழிக்கப்பட்டன.

அதேவேளை அரிசி விற்பனை நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த அரிசிப் பொதிகளில் காலாவதி திகதிகளில் குளறுபடிகள் காணப்பட்டமையினால் அவற்றின் விற்பனைக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம். நிஸ்தார் தெரிவித்தார். (ஒ-10)

## மாற்று வலுவுள்ளோருக்கு உபகரணங்கள்

ஆலையடிவேம்பு, ஒக்.3
கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாற்று வலு உடையவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் விசேட தேவைக்குட்பட்டோருக்கு சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள் மற்றும் வீடமைப்பு நிதியுதவிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகள் புதன்கிழமை ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன. ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வின்போது விசேட தேவையுடையோராக இனங்காணப்பட்ட அக்கரைப்பற்று மற்றும் கோளாவில் பகுதிகளைச் சேர்ந்த இரு குடும்பத்தினருக்கு சக்கர நாற்காலிகளும், பனங்காடு, கவடாப்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த இரு குடும்பங்களுக்கு ஊன்றுகோல்களும் ஆலையடிவேம்பு பிரதேச செயலர் வி.ஜெகதீசனால் வழங்கப்பட்டன. (ஒ-10)

## வறிய குடும்பங்களுக்கு இலவச மின்சார வசதி

அட்டாளைச்சேனை, ஒக்.3
அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலமுனைக் கிராமத்தில் மின்சார வசதியில்லாத ஏழைக் குடும்பங்களுக்கு இலவச மின்சார வசதி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கட்டாரில் தொழில் புரிவோருக்கான அல்மீஸான் நலன்புரி அமைப்பின் தலைவர் எஸ்.ரி.எம். ஹுசைப் தெரிவித்தார்.

அல்மீஸான் நலன்புரி அமைப்பினுடைய விசேட கூட்டம் அமைப்பினுடைய தலைவர் எஸ்.ரி.எம். ஹுசைப் தலைமையில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அடிப்படை வசதிகளற்ற வறிய குடும்பங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது ஏனைய தேவைகள் தொடர்பான விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

இதற்கான தகவல்களைச் சேகரிப்பதற்காக அல் மீஸான் நலன்புரி அமைப்பின் உபதலைவர் எம்.எஸ். உவைஸ், உப செயலாளர் ஏ.எல் முர்ஸித், உறுப்பினர்களான ஏ.பி. நாசர், எஸ். முஹாஜிதீன் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-10)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையில்
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
தோற்றி 184 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த
தயானந்தன் மதிவதனி தம்பதியரின்
செல்வப் புதல்வன் சங்கீதன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
அவர் மேன்மேலும் பலசித்திகளைப் பெற்று
வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று
மனமார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அம்மம்மா, அப்பம்மா,
அத்தைமார், மாமாமார்,
பெரியம்மா, பெரியப்பா...
மூத்தவிநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.
(62867)(7.6)

### யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம் - 2014

காலம் : 16.10.2014 பி. ப.4மணி
இடம் : மானிப்பாய் இந்துக் கல்லூரி

நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. புதிய நிர்வாகிகள் தெரிவு
6. தேநீர் விருந்துபசாரம்
7. நன்றியுரை.

சகல பாடசாலை அதிபர்களையும் விளையாட்டுத்துறை முதல்வர்களையும் (POG)அன்புடன் அழைக்கின்றோம்.

ச.சிவநேஸ்வரன் தலைவர் | செ.தேவராஜா பொருளாளர் | அ.அகிலதாஸ் செயலாளர்
(சி/18734)(5.6)

### பணியாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில்
அனுபவ முள்ள
விற்பனையாளர்கள் தேவை.
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)
தொடர்பு : 077 892 4932
(சி/18732)(7.6.3)

### வீடு வாடகைக்கு

அரியாலை A9 வீதியில், தபாற்கட்டைச் சந்திக்கும் சித்திவிநாயகர் கோயிலுக்கும் இடையில் கோயில் பக்கமாக 3 அறைகள், ஒரு குளியல் அறை, முன்பின் விறாந்தைகள் நடுவில் பெரிய ஹோல்கள், கொமேட், ஒரு ஸ்கோட்டிஸ், ஒரு குசினி, ஒரு களஞ்சிய அறை என்பவற்றுடன், தண்ணீர்த் தாங்கி, கிணறும் கொண்ட வீடும் அவற்றுடன் சேர்ந்த வாகனங்கள் நிறுத்தக்கூடிய பெரிய வளவும் வாடகைக்கு உண்டு.
(52806)(7.6.3)
காரியாலயங்கள், பொது நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 071 856 1768

### கனடா ஜெயசாயி சுப்பர் சென்டர்





வருகின்ற தீபாவளியை முன்னிட்டு
ஜெயசாயி இல் கொள்வனவு செய்யப்படும்
அனைத்து விதமான ஆடைகள், பான்சி
பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு
பொருள்கள் அனைத்தும் குறித்த விலையில்
இருந்து அரைவாசி விலைக்கு
பெற்றுக்கொள்வதுடன் 3, 4, 5 ஆகிய
தினங்களில் 3000/= ரூபாவிற்கு மேல்
கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களும்
பரிசு பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(52808)(7.6)

## புதிய ஓகன் வகுப்பு

விஜயதசமி நாள் புதிய ஓகன் (ORGAN) வகுப்பு இன்று மாலை 5.30 இக்கு இடம்பெறும். புதிய மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர்- ஸ்ரீகுகன்
தொடர்பு: 0776980573
விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.




(52575)
(10)


## குருக்கள் மடம் புதைகுழி அறிக்கை சமர்பிக்க உத்தரவு

மன்னார், ஒக்.10

குருக்கள் மடம் புதைகுழி தொடர்பான முழுமையான அறிக்கையை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு களுவாஞ்சிக்குடி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய குருக்கள் மடம் பகுதியில் மனித புதைகுழி என சந்தேகிக்கப்படும் இடத்திற்கு ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் சட்ட வைத்திய நிபுணர்கள் சென்றிருந்த போதிலும், சரியான இடத்தை அடையாளப்படுத்த முடியாமல் போனது. இந்த நிலைமையிலேயே மனித புதைகுழி தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.(ற)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும்
செல்வன்
**பத்மநாதன் பிரஷாந்**

Best Wishes

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். செல்வன் பிரஷாந்தைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவருக்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

இவர் இதேபோன்று பல்கலையும் கற்று பட்டம் பெற்று பலீலாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அண்ணா,
மாமா குடும்பத்தினர்,
பெரியம்மா குடும்பத்தினர்.

கொடிகாமம் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

(49798)(10)



## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

அமரர்
**வைரமுத்து சிவபாலன்**



அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.10.2014) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கடற்கரையில் நடைபெறவுள்ளது. மறுநாள் 04.10.2014 சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சந்தை வீதி, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.
சி.ஜெகன் (மகன்) 071 238 7743

(49799)(10)



## மரண அறிவித்தல்



**செல்வி நாகமுத்து செல்லம்மா**

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்- வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, வடமராட்சி)

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்வி நாகமுத்து செல்லம்மா நேற்று (02.01.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து சிதம்பரம் தம்பதியரின் புதல்வியும், மட்டுவில் நல்லதம்பி (இளைப்பாறிய அதிபர்) காலஞ்சென்ற வல்லிபுரம் (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் இராசம்மா, காமாட்சி (இளைப்பாறிய ஆசிரியை), சின்னத்தம்பி டாக்டர்), சுந்தரம் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்- தபால் திணைக்களம்), சின்னம்மா (இளைப்பாறிய மருந்தாளர்), கமலாதேவி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.10.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மட்டுவில் ஊரிப்பிட்டி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் கட்டையடி, மட்டுவில் வடக்கு,
T.P: 021 7200 590

(47296) (10)

தகவல்: குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

திருமதி **மீனாட்சிபிள்ளை சுந்தரலிங்கம்**
**(இளைப்பாறிய ஆசிரியை- யாழ்/மந்துவில் ஸ்ரீபாரதிவித்தியாலயம்)**



யாழ்.மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Mississaugaஐ வதிவிடமாகவும் கொண்ட மீனாட்சிபிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள் (30.09.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகளும் செல்லையா-மாரிமுத்து(வசாவிளான்) தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம்(A.M.C-FA) அவர்களின் அன்பு மனைவியும் பிறேமா, பிறேமச்சந்திரன், பிறேமளா ஆகியோரின் அருமைத்தாயாரும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சரவணமுத்து, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசமூர்த்தி, மாதினி, கோடீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் புஸ்பலீலா காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், புஸ்பராணி, புஸ்பநிதி, சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சின்னமாவும் கஜந்தி, கஜந்தன், அர்தனி, அபிசயா ஆகியோரின் ஆருயிர் அம்மம்மாவும் அம்சவி, அக்ஷவி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0016478551963 ,0016478567636,
0019058191051, 0774083937

(52810)

தகவல்:
பெறாமக்கள்
பேரப்பிள்ளைகள்.






சலங்கை நர்த்தனாலய அதிபர்
திருமதி .மங்களநாயகி வசந்தகுமாரன்
(Master of Fine Arts) (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், இந்தியா)
அவர்களின் மாணவியும்
திரு.திருமதி மகாலிங்கம் வாசுகி தம்பதிகளின்
புதல்வியுமான
**செல்வி பவதா மகாலிங்கம்**
அவர்களின்
**பரதநாட்டிய அரங்கேற்றம்**

இடம்: இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி , யாழ்ப்பாணம்.
காலம்: 05.10.2014 காலை 9.00 மணி

பிரதம விருந்தினர்
"கலாபூஷணம்" திருமதி.பத்மினி செல்வேந்திரகுமார்
(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர், யாழ்.கல்வி வலயம்.)

சிறப்பு விருந்தினர்
பேராசிரியர் திரு.S. மௌனகுரு .
(முன்னாள் தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.)

கௌரவ விருந்தினர்கள்
"கலாபூஷணம்" நாட்டிய வாரிதி ஸ்ரீமதி. லீலாம்பிகை செல்வராஜா
"கலாகீர்த்தி" திருமதி. சாந்தினி சிவநேசன்
"கலாநிதி" Dr. கிருஷாந்தி இரவீந்திரா
"நாட்டிய கலாவித்தகர்" திருமதி .நந்தினி சிவராஜன்
முதுகல்விமாணி திருமதி . புவனேஸ்வரி வேல்நிதி

**அணிசேர் கலைஞர்கள்**
**(இந்தியக்கலைஞர்களும்)**

நட்டுவாங்கம்
"கலைஞானமணி"
திருமதி.மங்களநாயகி வசந்தகுமாரன்
(MFA)

தபேலா, உடுக்கு
முகர்சிங்
திரு.நல்லை க.கண்ணதாசன்
(நுண்கலைமாணி)

பாட்டு
"சங்கீத வித்துவான்"
திரு.கௌஷிக் சாம்பகேசன்
(இந்தியா)

தவில்
லய நாத வினோதன்
P.S. ரவீந்திரன்

மிருதங்கம்
பத்மஸ்ரீ
திரு.N.K.கேசவன்
(இந்தியா)

நாதஸ்வரம்
லய நாத வினோதன்
P.S. ரஜீந்திரன்

வயலின்
திரு.கோபிதாஸ் சுந்தரமூர்த்தி
(நுண்கலைமாணி)

நிகழ்ச்சித்
தொகுப்பாளர்
திரு. ஈ.ஷாம்குமார்



குறிப்பு:
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த மேற்படி அரங்கேற்ற நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் குறித்த திகதியில் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறும் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

திரு.திருமதி.மகாலிங்கம் வாசுகி தம்பதியினர்
(சுவிஸ்)

லது டிஜிற்றல் - இணுவில்



**Join Sri Lanka's #1**

ESOFT
*Shaping Lives, Creating Futures.*

**Vacancies @ ESOFT**

Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people

**Positions are available in Jaffna Campus & Kilinochchi**

### Lecturers

- Areas of expertise include Networking, Software Engineering, Web Engineering, Programming with JAVA/C#/ASP.NET & DBMS knowledge, Mathematics, Computer Science etc..
- Working week will be 5 and a Half days including week end
- Experience would be an added advantage

### Marketing Executive

- Result oriented individual with strong communication skills
- Willing to travel and meet clients
- Identify potential markets to promote company products
- Implementing, engage and monitoring promotional activities for the branch
- Assist to achieve branch monthly targets

### Student Counselors

We are looking for goal oriented, energetic young ladies to work at ESOFT front office. You will be responsible for handling enquires from customers including students and parents and guiding them in selecting the correct acdemic or professional study programme that matches their requirement

You will be provided with the necessary training about the programmes that we offer. Basic computer literacy is expected and we will also train you to use our enquiry and registration systems

Work time will be according to a duty roster consisting of a five and a half day working week including the weekend, which is our busiest time.

### How to Apply

Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself. Please state the position applied as the subject line of the email

Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

**ESOFT METRO CAMPUS**
137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142, Hotline: 077 309 9308
Web: http://www.esoft.lk Email: jaffna@esoft.lk

# தொடர்ச்சிகள்

## இராணுவம்

மீளெழக் கூடாது என்பதற்காகவே வேவு பார்க்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

'த நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' இந்திய ஆங்கில ஊடகத் துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில்,

"கிளிநொச்சி மாவட்டம் போர் வலயமாக இருந்தது. தற்போது திறந்த வெளிச் சிறைச்சாலையாக இருக்கின்றது. இராணுவத்தினரால் தாம் வேவு பார்க்கப்படுவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இது தொடர்பில், வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதி, 'நாங்கள் பொதுமக்களின் நிகழ்வுகளில் குறுக்கீடு செய்வதில்லை. எவராவது பயங்கரவாத நடவடிக்கைகளை, அரச விரோத நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறார்களா என்றே கண்காணிக்கிறோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

கத்தோலிக்க பாதிரியார் ஒருவரால் பிரிவினைவாத சிந்தனையைத் தூண்டும் வகையிலான கவிதைகள் அடங்கிய புத்தகம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பணிப்பின் பேரில் வன்னிப் பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனை நாம் தடுத்து நிறுத்தியுள்ளோம்.

நாம் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். 2 ஆயிரத்து 275 பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கியுள்ளோம். 45 பல்கலைக் கழக மாணவர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. எமது படையினர் இங்குள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக ஒரு லட் சத்து 30 ஆயிரம் ரூபாவை சேகரித்து வழங்கியுள்ளனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றமை தொடர்பில் கேட்கப்பட்டதற்கு, இது குறித்து வாக்கெடுப்பு இடம்பெறுமாக இருந்தால், இராணுவம் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாகவே மக்கள் வாக்களிப்பார்கள். ஏனெனில் இராணுவம் குற்றமற்ற சமாதானமான சமூகத்தை உறுதிசெய்துள்ளது - என்று அவர் தெரிவித்தார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## சொத்துக்களை

ரங்கு நிகழ்வில் 'முதியோர் தொடர்பான சட்டங்கள்' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கை சனத்தொகையில் கிட்டத்தட்ட 20 மில்லியன் 2.3 மில்லியன் முதியோர்கள் வாழுகின்றனர். 76 வயதுக்கு மேற்பட்ட பெண்களும், 74 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் முதியவர்களாகக் கணிக்கப்படும் நிலையில் பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களை முதியவர்களாகக் கருதுகிறோம்.

முதியவர்களுக்கு பல்வேறு பிரச்சினை ஏற்படுத்தப்பட்டாலும், சொத்துக்களை மாற்றம் செய்வதில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் முக்கியமானவை. இறப்புக்கு பின்னர் பின்னுரித்தானவர்களுக்கான உறுதிகளை மாற்றிவிடுகின்றனர். பிள்ளைகளே அந்த மோசடிகளையும் செய்கின்றனர். முதியவர்களிடம் ஏமாற்றி கையொப்பத்தை பெறுகின்றனர்.

முதியவர்களுக்கு தெளிவான ஆழமான அறிவு சட்டம் தொடர்பில் காணப்படாத காரணத்தால் இவ்வாறு ஏமாற்றப்படுகின்றனர். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என இருந்தாலும் சட்டத்தில் விசேடமாக முதியவர்கள், சிறுவர்கள், விசேட தேவையுடைவர்கள் என்பவர்களுக்கு விசேடமான சட்டங்கள் உள்ளன.

2000 ஆம் ஆண்டு முதியவர்களுக்கான சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளால் முதியவர்களுக்கு முக்கியமாக பிள்ளைகளில் இருந்து பராமரிப்பு பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அவர்களது தேவைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அத்துடன் பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு தங்குமிட வசதியுடன் கூடிய இடங்கள் அரச திணைக்களங்களில் இருந்து பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

சொத்துக்களை பிள்ளைகளுக்கு வழங்கும் போது உரிய பாதுகாப்புடன் சட்ட ஆலோசனைகளைப் பெற்று மாற்றுதல் வேண்டும். இதனைவிட வெற்றுத் தாள்களில் கையொப்பம் இடுவதை முதியவர்கள் தவிர்க்க வேண்டும். அத்துடன் தமக்கு எதிராக மோசடிகள் இடம்பெறும் போது மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்து இழப்பீட்டை பெற்றுக் கொள்ள முடியும்"- என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியவர்கள் மற்றும் அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-14)

## கூட்டமைப்பின்

பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. அதன்போதே மேற்படி விடயம் ஆராயப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில், இரு நியமன உறுப்பினர்கள் ஆசனம் கிடைத்தது. அதனடிப்படையில், ஓர் ஆசனம் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்தி மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஐ.அஸ்மினுக்கு வழங்கப்பட்டது.

மற்றைய ஆசனம் ஓர் ஆண்டுக்கு ஒரு முறை சுழற்சி அடிப்படையில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு, கடந்த வருடம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த திருமதி மேரிகமலா குணசீலனுக்கு அந்த ஆசனம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அடுத்ததாக, வவுனியா மாவட்டத்துக்கு வழங்கப்படவுள்ளது. வவுனியா மாவட்டத்தில் போட்டியிட்ட, நடராஜா நியமன உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார்.

இது தொர்டர்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா இறுதி முடிவு எடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## குற்றச்

டுள்ளது. சாட்சியமளித்தவர்களின் குடும்ப உறுப்பினர் கள் அல்லது சாட்சியமளித்தவர்கள் இலங்கையில் நெருக்குதல்களை எதிர்நோக்கக் கூடும் என்ற காரணத்தால் அவர்களின் பெயர் விவரங்களை வெளியிடப் போவதில்லை என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் தொடர்ச்சியாக குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடித்து வருகின்றது. மனித உரிமைப் பாதுகாப்பு தொடர்பில் இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறைமை பலவீனமானதாகக் காணப்படுகின்றமை வருத்தமளிக்கின்றது. சிறுபான்மை சமூகத்தினர் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. இலங்கையில் தொடர்ச்சியாக பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## ஜனாதிபதியை

றேன் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டை நாக விகாரையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஜனா திபதித் தேர்தல் மற்றும் பொதுவேட் பாளர் நியமனம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு வலியு றுத்திப் பேசினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது,

"நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டவும், அமைதியான சூழலை ஏற்படுத்தவும் நாம் கடந்த சில நாள்களாக நாட்டின் புத்திஜீவிகள், நீதிபதிகள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஓய்வுபெற்ற முக்கிய அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடிக்கொண்டு வருகிறோம்.

ஏனெனில், நாடு தற்போது மிக மோசமான சூழ்நிலையில் பயணித்துக்கொண்டு வருகிறது. பொலிஸாரின் கண் முன்னே நடக்கும் சம்பவங்கள் முதல் தற்போது நடைபெற்ற பிரிட்டன் தூதுவர் தாக்கப்பட்ட சம்பவம் வரை அனைத்தும் நாட்டின் மோசமான போக்கையே எடுத்துக் காட்டுகின் றன.

இவற்றையெல்லாம் ஒழிக்க வேண்டுமெனில் நாமும் இன, மத வேற்றுமையை மறந்து ஒற்றுமையாகச் செயற்பட்டு புதியதோர் சூழலை உருவாக்க வேண்டும்" என்றார்.

அத்தோடு, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் காலம் கனிந்துவிட்டதாகவும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

அடுத்ததாக நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போது நடைமுறையிலிருக்கும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாதொழிக்கப்பட்டு, நாடாளுமன்ற ஆட்சி முறைமை உதயமாக வேண்டும்.

இதற்காக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இனியும் காலதாமதம் செய்யாது பொது வேட்பாளர் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டும் என்றும் 18 ஆவது திருத்தம் முற்றாக ஒழிக்கப்பட்டு மீண்டும் 17 ஆவது திருத்தம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கியத் தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராக களமிறக்கப்படுவது தேர்தலின் போது அசாதாரணத்தை ஏற்படுத்தும் விடயமாக கருதப்பட்டாலும், அவருடைய ஆதரவும் ஐ.தே.கவின் ஆதரவும் இல்லாது பொது வேட்பாளர் ஒருவர் வெற்றி பெற முடியாது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழர் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அவர்களின் ஆதரவுடனேயே பொது வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். ஏனெனில், தற்போது நாட்டில் தமிழ் - முஸ்லிம் மக்களும் ஜனாதிபதியை தெரிவு செய்யும் சக்திகளாக மாறிவிட்டனர்.

ஆகவே, சிங்கள வாக்குகளைச் சிதறடிக்காமல் பாதுகாப்பதுடன், சிறுபான்மையின வாக்குகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இதற்காக அவர்களை ஒரே மேசையில் கொண்டு வந்து பேச்சு நடத்த நான் தயாராகவே இருக்கிறேன். ஆகவே, அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக் கூடிய ஒருவர் எதிர்வரும் மாதங்களுக்குள் உடனடியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்திய சோபித தேரர் அதற்கான "சரியான தருணம் இதுவே - என்று தெரிவித்தார்.

(ற-சி)

## சப்ரகமுவ

திலங்கைப் பல்கலைக் கழக மாணவர்களால் கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான பல்கலைக் கழக மாணவ - மாணவியர் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருந்த முதலாம் வருட மாணவனான, முகமாலையைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் (வயது-21), கடந்த ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டிருந்தார். அதற்கு சில தினங்களுக்கு முன்னதாக, பல்கலைக் கழக வளாகத்தை விட்டு வெளியேறுமாறு தமிழ் மாணவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தன் பின்னணியிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றிருந்தது. தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவனை சில தினங்களின் பின்னர் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்திருந்தனர்.

குறித்த மாணவன், பல்கலைக் கழகத்தில் வேண்டுமென்றே குழப்பங்களை ஏற்படுத்த முயற்சி செய்தார் என்றும், தன்னைத் தானே தாக்கிக் கொண்டார் என்றும் தெரிவித்தே பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

குறித்த மாணவன் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில், குறித்த மாணவனை விடுவிக்குமாறு கோரி சப்பிரகமுவ பல்கலைக் கழக மாணவர்களால் ஓகஸ்ட் மாதமே போராட்டம் நடத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் மாணவ னை விடுவிக்குமாறுகோரி, அனைத்திலங்கை பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாபெரும் போராட்டம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக நேற்று முன்தினமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ற-5)

## பாப்பரசரை

இத்தாலி மற்றும் வத்திக்கான் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு நேற்று மதியம் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றார். இத்தாலி செல்லும் ஜனாதிபதி தான் தங்கியிருக்கும் காலத்தில் அங்குள்ள இலங்கை சமூகத்தினரை சந்திக்க உள்ளார்.

அத்துடன் வத்திக்கான் அரச செயலாளர் மற்றும் பிரதமர் ஆகியோரையும் ஜனாதிபதி சந்திக்க உள்ளார்.

(ற)

## மஹிந்தவின்

லான சந்திப்பு, வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்றுக் காலையிலி ருந்து மாலை வரையில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகள் தொடர்பிலேயே அதிகம் விவாதிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. மக்களால் வடக்கு மாகாண சபை தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ள னர். மேலும், வடக்கு மாகாண சபையால் ஒரு வருடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள், அதன் போது கொழும்பு அரசால் விளைவிக்கப்பட்ட இடையூறுகள் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக, பிரதம செயலாளர் தொடர்ந்த வழக்கின் நிலைமை மற்றும், அதன் பின்னணி தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. வடக்கு மாகாண அமைச்சர்கள் பங்கெடுக்கும் மக்கள் சந்திப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவ்வாறு தெரிவிப்பதற்கு வடக்கு மாகாண அமைச்சரவை இணங்கியுள்ளது.

வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 13 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இதற்கான அழைப்பிதழ்கள் வடக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே இதில் பங்கெடுப்பதா இல்லையா என்பது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சிலர் பங்கெடுக்க வேண்டும் என்றும், சிலர் பங்கெடுக்கத் தேவையில்லை என்றும் கருத்துத் தெரிவித்தனர். இதனால் இது தொடர்பில் முடிவு எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி தலைமையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு முன்னதாக மீண்டுமொரு முறை கூடி பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-5)

## மின்

படும் முதல் 30 அலகுகள் தொடர்பாக அலகொன்றுக்கு 2ரூபா 50 சதமாகும். மாதாந்த நிலையான கட்டணம் 30 ரூபாவாகும்.

31இல் இருந்து 60 அலகுகள் வரையில் அலகொன்றுக்கு 4.85சதமாகும். அந்த கட்டணத்தொகுதிக்குரிய நிலையான கட்டணம் 60 ரூபாவாகும்.

60 மின் அலகுகளுக்கு மேற்பட்ட மின்சாரத்தைப் பயன்படுத்தும் பாவனையாளர்கள் தொடர்பாக அலகொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் 7ரூபா 85 சதமாகும்.

மின் அலகுகள் 61 இல் இருந்து 90 வரையில் மின் அலகு ஒன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் 10 ரூபாவாகும். நிலையான கட்டணம் 90 ரூபாவாகும்.

91 இல் இருந்து 120 மின் அலகுகள் வகையில் மின் அலகு ஒன்றுக்கான அறவீட்டுக் கட்டணம் 27.75 ரூபாவாகும். நிலையான கட்டணம் 480 ரூபாவாகும். 121 மின் அலகுகளிலிருந்து 180 அலகுகள் வகையில் அறவீட்டுக் கட்டணம் அலகு ஒன்றுக்கு 32ரூபாவாகும். நிலையான கட்டணம் 480 ரூபாவாகும்.

மாதாந்தம் 180 மின் அலகுகளுக்கு மேற்பட்டு பயன்படுத்தும் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படும் மின் அலகு ஒன்றுக்கான கட்டணம் 45 ரூபாவாகும். அந்தப் பாவனைத் தொகுதிக்கு உரிய நிலையான கட்டணம் 540ரூபாவாகும்.

(ற-22)

## தமிழ்க்

ஒருசாரார் வலியுறுத்தி வரும் நிலையில் இன்னொரு சாரார் அதற்கு சம்மதிக்காத நிலை தொடர்ந்து வந்தது. இந்நிலையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவது தொடர்பில் அனைத்துக் கட்சிகளும் கொள்கையளவில் இணங்கியிருப்பது முக்கிய மாற்றமாகக் கருதப்படுகிறது.

(த)

## முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஒக்.03
நல்லூர் பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சி நெறி எதிர்வரும் 9, 10 மற்றும் 13ஆம் திகதிகளில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3மணிவரை நடைபெறவுள்ளது.
நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தொழில் முயற்சியாளர்கள் மேற்படி பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பினால் 5 முயற்சியாளர்களின் பெயர் விவரங்களை இன்று வெள்ளிக்கிழமைக்குள் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (வ-7)

## பரதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு செயலமர்வு நாளை

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பரதநாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் புலோலி ஆசிரிய வள நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (வ-108)

## சம்பந்தன் தலைமையிலான குழுவினரை சந்தித்தனர் தென்னைமரவாடி மக்கள்



தென்னைமரவாடி, ஒக். 03
திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமான தென்னைமரவாடி மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயும் நோக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் அந்தக் கிராமத்துக்குச் சென்றிருந்தனர்.
தென்னைமரவாடி மக்கள் நீண்ட காலமாக தொடர்ச்சியாகத்தாம் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளை இரா.சம்பந்தரிடம் முன்வைத்தனர். அதில் முக்கியமாக பூர்வீக நிலமான தங்களுடைய வயல் காணிகளை பெரும்பான்மை இனத்தவர்கள் பயமுறுத்தி நெற்செய்கை மேற்கொள்ள விடாமல் தடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். அத்துடன்தாம் 2011ம் ஆண்டு மீளக் குடியமர்த்தப்பட்டும் இது வரைதமது அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப் படவில்லை என்றும் எடுத்துக் கூறினர்.
இதனையடுத்து கிழக்கு மாகாண காணித் திணைக்கள அதிகாரிகள் தென்னைமரவாடி தமிழ் மக்களின் சொந்தக் காணிகளை மீள ஒதுக்கீடு செய்து புதியவர்களுக்கு வழங்குவது ஒரு பொருத்தமற்ற செயல் எனவும் இது தொடர்பாக தான் காணி ஆணையாளருடன் தொடர்பு கொள்வதாகவும் இந்த காணி விவகாரத்தை கிழக்கு மாகாண சபையில் முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இரா.சம்பந்தன் அந்தக் கிராம மக்களிடம் கூறினார். அத்துடன் குறித்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை, தபால் சேவையில் நிலவும் குறைபாடுகள்போன்ற பிரச்சினைகள் காணப்படுவதாகவும்குழுவினர்தெரிவித்துள்ளனர்.
சம்பந்தன் தலைமையில் சென்ற குழுவில் கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான துரைராஜசிங்கம், ஜெனார்த்தனன், நடராஜா, பிரசன்னா இந்திரகுமார், கிருஷ்ணபிள்ளை, இராஜேஸ்வரன் ஆகியோரும் உடனிருந்தனர். (ஓ-10)

## குற்றங்களும் கைதுகளும்

பளை

### சிறுமி மீது வன்புணர்வு குடும்பஸ்தர் கைது

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற 14 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய 32 வயதுடைய திருமணமான நபரொருவரை பளைப் பொலிஸார் மூன்று மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.
இந்தச் சம்பவம் பளையில் இடம்பெற்றுள்ளது.
இதுதொடர்பாக சிறுமியின் தாயார் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து தலை மறைவான இந்த குடும்பஸ்தரையே பொலிஸார் தற்போது கைது செய்துள்ளனர். (வ—9)

தென்மராட்சி

### யாழ்ப்பாணம் வாசி கைது

மதுபோதையுடனும் ஆவணங்கள் எதுவுமின்றியும் வாகனத்தைச் செலுத்திச் சென்ற யாழ்ப்பாணம் வாசியொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இதுதொடர்பில் சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 18 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன் அவரது சாரதிய அனுமதிப்பத்திரத்தை 2 மாதங்களுக்கு நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (வ—9)

திருக்கோவில்

### வீட்டிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

திருக்கோவில் பிரதேச தம்பிலுவில் மகா வித்தியாலய வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து 4 கைக்குண்டுகள் மற்றும் 2 துப்பாக்கி மகஸீன்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இவை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டதாக திருக்கோவில் வலய இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் வீரசிங்க தெரிவித்தார். மேலும், வீட்டு உரிமையாளர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே மேற்படி குண்டுகள் மீட்கப்பட்டதாகவும் குறித்த வீடு உள்நாட்டு போர்க் காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமாக பயன்படுத்தப்பட்டதாகவும் மேஜர் வீரசிங்க தெரிவித்தார்.(வ—10)

தென்மராட்சி

### அனுமதியின்றி சாராயம் விற்ற கொடிகாமம் வாசி கைது

அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்பனை செய்த கொடிகாமம் வாசியொருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ—9)

தென்மராட்சி

### சாரதிகள் 5 பேர் கைது

மணல் ஏற்றிச் செல்வதற்கு வழங்கப்பட்ட நேர அவகாசத்தின் பின்னர் வாகனத்தில் மணல் ஏற்றிவந்த 5 சாரதிகளை கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர். அவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தியபோது 30 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
பொலிஸாரால் குறித்த சாரதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நீதிமன்றில் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் ஐவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் மணலையும் வாகனத்தையும் மீள ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (வ— 9)

# கடல் வளத்தைப் பாதுகாப்பது கட்டாய தேவையாக உள்ளது

## வலியுறுத்துகிறார் வடமாகாண கடற்றொழில் அமைச்சர்

வலி.வடக்கு, ஒக்3
எமது கடல் வளத்தை பாதுகாக்கத் தவறினால் எமது சந்ததியினர் இன்னும் 10-15 வருடங்களில் கடல் வளத்துக்கு அந்நியர்களிடம் கையேந்தி நிற்கும் நிலை ஏற்படும் என்று வட மாகாண கடற்றொழில் அமைச்சார் டெனீஸ்வரன் தெரிவித்தார்.
அரியாலையில் மீன் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:
"எமது வளம் இன்று தென்னிந்திய மீனவர்களாலும் அதேபோல தென்னிலங்கையில் இருந்து வரு வோர்களாலும் அழிக்கப்படுகின்றது; சுரண்டப்படுகின்றது. இதனை நாம் ஒன்றிணைந்து கட்டுப்படுத்த வேண்டும்.
18 வகையான சட்டவிரோதமான தொழில் வகைகள் தற்போது நடைபெறுகின்றன. இதனை நாம் கட்டாயமாகத் தடை செய்ய வேண்டும். எமது பகுதி அபிவிருத்தியில் வடக்கு மாகாண அரசு, மத்திய அரசு என்ற வேறுபாடு இன்றி செயற்பட வேண்டும். இதன் மூலமே எமது அபிவிருத்தியை நாம் அடைய முடியும்.
எமது மீனவ சமுதாயத்தை நல்ல நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் இதற்கு மத மொழி, சமூக, அரசியல் வேறுபாடுகள் இன்றி நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். எமது அரசியல் நோக்கங்கள் உரிமைகள் வேறுபட்டாலும் அபிவிருத்தி என்று பார்க்கும் போது அவற்றைத் தவிர்த்துச் செயற்பட்டால் மட்டுமே கடந்த கால போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அபிவிருத்தியை அடைய முடியும்.
கடந்த சிலமாதங்களுக்கு முன்னர் கடற்றொழில் அமைச்சரை நாம் அவருடைய அலுவலகத்தில் சந்தித்து எமது மாகாணத்துக்குரிய பல்வேறு அத்தியாவசிய விடயங்கள் தொர்பாகக் கலந்துரையாடினோம்.
அதன்போது அவர் பல விடயங்களை எனது அமைச்சின் ஊடகவட பகுதியில் முன்னெடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அனைத்து மாகாண அரசுகளினதும் அமைச்சர்களையும் அழைத்து கலந்துரையாடியதுடன் எமது மாகாணத்துக்கென நன்னீர் மீன் பிடி தொடர்பாகவும் கலந்துரையாடினார். அதன் அடிப்படையில் கடந்த மாதம் 10 லட்சம் ரூபாவை நன்னீர மீன் பிடி தொடர்பான நடவடிக்கைகளுக்காக ஒதுக்கித் தந்துள்ளார்.
கடற்றொழில் அமைச்சரைப் பொறுத்தவரையில் அவர் மத்திய அரசு மாகாண அரசு என்ற வேறுபாடுகள் இன்றி செயற்படும் ஒரு அமைச்சராவார். இந்தவகையில் எமது மக்களின் பாதிப்புக்களை நீக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு எமது அமைச்சர் சில திட்டங்களை முன்வைத்துள்ளார்.
உரிமை குறித்துக் கதைக்கும் போது அபிவிருத்தியையும், அபிவிருத்தி குறித்துக் கதைக்கும் போது உரிமையையும் இணைத்துப் பேசுகின்றோம். இதனைவிடுத்து, அபிவிருத்தியையும் இனப் பிரச்சினையையும் உரிமைப் பிரச்சினையையும் தனித்தனியாக பேச வேண்டும். இதன் மூலம் தான் நாம் எமது பகுதியில் நல்லதொரு அபிவிருத்தியை அடைய முடியும் என்று குறிப்பிட்டார். (வ-86)

# தாய்மார் வெளிநாடுகளுக்கு செல்வதால் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறி

## தென்எருவில்பற்று பிரதேச செயலர் தெரிவிப்பு

*மண்முனை, ஒக்.03*
பிள்ளைகளை விட்டுவிட்டுதாய்*மார்கள் தொழில்வாய்ப்புக்காக* வெளிநாடு செல்வது தற்காலத்தில் அதிகரித்துள்ளது. இவ்வாறு தாய்மார்கள் வெளிநாடு செல்வதனால் சிறார்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது.
இவ்வாறு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் தெரிவித்துள்ளார்.
சர்வதேச சிறுவர் தினத்தை *முன்னிட்டு நேற்றுமுன்தினம்* புதன்கிழமை மட்டக்களப்பு - *செட்டிபாளையம், சிவன்* கிட்ஸ் கோம், பாலர் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறுவர் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-
தாய் வெளிநாடு சென்று பல வருடங்கள் கழிந்த நிலையில் *தனது தாயின் வருகைக்* காகக் காத்துக் கொண்டிருந்த *8 வயது சிறுவன் ஒருவன்* தாய் வராத காரணத்தினால் தனது உயிரை மாய்த்துக் கொள்ள எத்தனித்திருந்த சம்பவம்ஒன்றுஅண்மையில்நமது நாட்டில்தான் பதிவாகி யிருந்தது.
எமது பகுதியில் பல தாய்மார்கள் கணவன், குழந்தைகளை விட்டுவிட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றார்கள். இதனால் இங்கு குழந்தைகள் பரிதவிப்பது மாத்திரமல்லாமல் வெளிநாடு செல்லும் பெண்களும் பல துன்பங்களை அந்த நாடுகளில் அனுபவித்து வருகின்றார் கள். இதனால் இங்குள்ள கணவன், பிள்ளைகள் போன்றோர் பிழையான செயற்பாடுகளுக்குச் செல்லக்கூடிய சூழல் உருவாகின்றது. பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு இலக்காகும் சூழலுக்கும் தள்ளப்படுகினறனர்.
எனவே எந்தத் தாய்மாரும் மத்தியகிழக்கில் கையேந்தக் கூடாது. மாறாக தாய்மாருக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு எமது பிரதேச செயலகத்தினூடாக அதிகளவு நிதிகளை வழங்கிக் கொண்டு இருக்கின்றோம். இதனூடாக வெளிநாடு செல்லாமல் இங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். குழந்தைகளை சிறந்த முறையில் கல்விகற்க வைத்து வழிநடத்தலாம் இதனூடாக அன்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, ஆதரவு, பெருகி சிறந்த முறையில் வாழலாம். குழந்தைகள் நமக்குக் கிடைக்கின்ற செல்வங்கள். அந்த செல்வங்கள்தான் எதிர்கால வளர்ச்சிக்கும், எதிர்கால நல்வாழ்வுக்கும் ஆதார சக்தியாக ஆவார்கள் எனத் தெரிவித்தார். (ஓ-10)

CMYK



அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் 145 ஆவது காந்தி ஜெயந்தி மற்றும் சர்வதேச அகிம்சை தினம் என்பன நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.
யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்ததைத் தொடர்ந்து மாவட்டப் பணிமனையில் சங்கத் தலைவர் தி. இராசநாயகம் தல்லைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் காந்தீயம் பத்திரிகை வெளியீடு மற்றும் சிறப்புரைகள் இடம்பெற்றன.
இதில் பொதுமக்களுடன் இராணுவத்தினரும் கலந்துகொண்டனர். (த-ரி)

# 60,000 கிலோவுக்கும் அதிகமான மீன்கள் நந்திக் கடலில் இறந்து கரையொதுங்கின



முல்லைத்தீவு, ஒக். 3

முல்லைத்தீவு வட்டுவாகல் நந்திக்கடல் வடக்காறு பகுதியில் கடந்த 5 நாள்களாக மீன்கள் இறந்து கரையொதுங்கி வருகின்றன.

இதுவரை சுமார் 60 ஆயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட சிறிய வகை மீன்கள் இறந்து கரையொதுங்கியுள்ளன. நேற்று அப்பகுதிக்கு நேரில் சென்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலைமையை நேரில் அவதானித்ததோடு மக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

முன்பு சுமார் நான்கு தொடக்கம் ஐந்து மீற்றர் வரை ஆழமாக இருந்த இப்பகுதி, சுனாமியின் பின்னர் ஆழம் குறைவடைந்துவிட்டது. சூரிய வெப்பம் அதிகரித்த காரணத்தால் நீர்ப்பரப்பில் உப்பின் செறிவு கூடியதாலும், நீரில் ஒட்சிசன் சார்பு அளவு குறைவடைந்ததாலுமே இந்த மீன்கள் இவ்வாறு இறந்து கரையொதுங்குகின்றன என அப் பகுதி மக்கள் தெரிவிக்கின் றனர்.

வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் அமைப்பால் கரையொதுங்கிய மீன்களை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தொடர்பிலான நிலைமைகளை மாகாண அமைச்சர் டெனீஸ் வரனுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடியுள்ளார் என மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார். (த-433)

## போதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு அபராதம்

மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கும், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய ஒருவருக்கும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன் சாரதி அனுமதிப் பத்திரங்களை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன் தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்து சாரதிய அனுமதிப் பத்திரத்தை நீதிமன்றில் 6 மாதங்கள் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (த-9)

# நெடுந்தீவு செல்வார் ஜனாதிபதி மஹிந்த

யாழ்ப்பாணம், ஒக். 3

எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை நெடுந்தீவுக்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நெடுந்தீவுப் போக்குவரத்துக்கெனப் புதிய படகு ஒன்றை உடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச சபை தனக்கென ஒரு படகை வழங்குமாறு ஜனாதிபதியைக் கோர வேண்டும் எனவும், குமுதினி படகு போன்று நெடுந்தீவுக் கடலைச் சமாளிக்கக் கூடியதாகவும் துறைமுகத்தின் உள்ளே வரக் கூடியதாகவும் உள்ள ஒரு படகு மக்களின் போக்குவரத்துச் சேவைக்கு அவசியம் எனவும் பொதுமக்கள் ஜனாதிபதியிடம் கோரவுள்ளனர். (த-7)

இங்கே இது எம்மால் மட்டுமே சாத்தியமாகும்
UK இல் படிக்க உழைக்க சத்தியமாகவே IELTS தேவையில்லை
இந்த அரிய வாய்ப்பு எண்ணி 7 பேருக்கு மாத்திரமே
எதிர்வரம் (07.10.2014) வரை மட்டுமே
★ ஒரு மாதத்தில் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து விடும்.
★ ஒரு மாதத்தில் நல்லது கெட்டது எல்லாம் தெரிந்துவிடும்.
சனி, ஞாயிறு உட்பட 7 நாள்களும் திறந்திருப்போம்
அனைத்தும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
இல.175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்
அரசபதிவிற்கு உட்பட்டது பதிவிலக்கம்:PV 82703
021 221 9016

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
இம்மாதம் நடைபெறவுள்ள
கணக்காய்வாளர், கணக்காளர்
பரீட்சைக்குரிய வகுப்பு சனி, ஞாயிறு 9.00 மணிக்கு
அபிவிருத்தி உத்தியோகத்தர் வினைத்திறன் பரீட்சைக்கு
ஞாயிறு 9.00 மணி - 12.00 மணி வரை
அரச முகாமைத்துவ உதவியாளர் தெரிவு
பிரிவு I
ஞாயிறு 1.30 மணி - 4.30 மணி வரை
பிரிவு II
புதன் 3.00 மணி - 5.30 மணி வரை
T.P : 0754164564
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்

A/L நிறுப் பின்னர்
HND கல்வியினை
அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்



BTEC edexcel HND
SOFTWARE ENGINEERING
SINESS MANAGEMENT
36+ ஆண்டுகள் ஒருங்கிணைந்த விரிவுரை அனுபவம்
நன்மைகள்
பகுதி நேர அல்லது முழு நேரக்கல்வி
மறைமுக செலவீனங்கள் இல்லை
வேலைவாய்ப்புகளுக்கு பரந்த வாய்ப்புக்கள்
Diploma in English கற்கை நெறி இலவசம்
Edexcel -UK இனால் 2013 ம் ஆண்டிற்கான தங்கப்பதக்கம் பெற்ற நிறுவனம்
Your Career Pathway
HND 18 Months | Top-up Degree 1 Year | Masters 1 Year
புதிய பிரிவுகள் 10.09.2014 9:00am
Leading to B.Sc from London Metropolition University through ESOFT
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 04.10.2014
பிரிவு 1. காலை 8.00-10.00 பிரிவு 2. காலை 10.00-12.00
திங்கள், புதன் பிரிவுகள் ஆரம்பம் - 06.10.2014
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

விசேட கருத்தரங்கு
★ SLAS (Limited) போட்டிப் பரீட்சை
பிரதி சனி, காலை 9.00- 1.00 மணிவரை
கட்டணம் -3000/=
(புதிய பரீட்சை மாற்றத்துக்கு அமைவான வினாத்தாள்கள் விடைகளுடன் ஆராயப்படும்.)
★ முகாமைத்துவ உதவியாளர் (clerical) போட்டிப் பரீட்சை
பிரதி சனி, மாலை 2.00- 5.00 மணிவரை
கட்டணம் - 1500/=
(கடந்தகால மாதிரி வினாப்பத்திரங்கள் விடைகளுடன் ஆராயப்படும்.)
விரிவுரையாளர்: P. உமாசங்கர், P.கமல்நாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர். T.P: 077 469 6695 (C/16739) (10)

லக்ஸ்மி ஸ்பீட் சேவிஸ்



உலக நாடுகளுக் கான துரித பொதிகள் சேவைகள் குறைந்த கட்டணத்தில்
யாழ்ப்பாணம், ⇌ கொழும்பு, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கான பொதிகள் சேவைகள்.
(உங்கள் வீடுகளில் வந்து பார்சல்கள் பெற்றுக் கொள்ளப்படும்)
118, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
☎ 076 625 5093 (சி/16733) (7.6.3)

உடனடி வேலை வாய்ப்பு
வவுனியா மண்ணில்
தேசிய தொழில் வங்கியால் ஒழுங்கமைக்கப்பட்ட உடனடி வேலை வாய்ப்புகள்.
பின்வரும் பதவிகளுக்கான நேர்முக தேர்வுகள் சனி(04.10) மற்றும் ஞாயிற்றுகிழமை(05.10) நடைபெற இருக்கின்றது.
■ சுற்றுலாதுறை மற்றும் விமானப்பயண பற்றுச்சீட்டு உத்தியோகத்தர்கள்
■ வரவேற்பாளர்கள்
■ கணனி உதவியாளர்கள்
■ மொழி பெயர்ப்பாளர்கள்
■ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
■ வாகன ஓட்டுனர்கள்
மேலதிக விபரங்களுக்கு 0710920920
காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நேர்முக தேர்வுகள் இடம்பெறும் அனைவரும் தங்கள் சுய விபரக் கோவையுடன் கலந்து கொள்ளலாம் முன் அனுபவம் அற்றவர்களும் கலந்து கொள்ளலாம்.
இணையதள முகவரி
www.nationjobbank.com
Nation Job Bank
179A Railway Station Road,
Vairavapuliyankulam,
Vavuniya.

இலவச கணினிப் பயிற்சி
Web design Multimedia Networking
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்களைப் பூர்த்தி செய்த எமது நிறுவனம் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மேற்படி பயிற்சி நெறியினை கற்கை நெறிக்கட்டணமின்றி வழங்கவுள்ளோம்.
விண்ணப்பிக்க விரும்புவோர் Free<Name> <Date.of.Birth><District> என்பவற்றை 772395895 என்ற இலக்கத்திற்கு sms செய்யவும்.
Registered:இளைஞர் திறன் விருத்தி அமைச்சு,
மூன்றாம் நிலை தொழிற்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு
MCS

புலமை கல்வி நிறுவனம்
புதிய புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்
சோதிவேம்படி லேன், மானிப்பாய்
ஆசிரியர்: க.கஸ்மோகன் (B.A,Dip..in..Tecah..)
காலம்: 03.10.2014 வெள்ளிக்கிழமை
தரம்: 5 (தற்போது தரம் - 4) பிரிவு - II பி.ப.4.00 மணி
தரம்: 4 (தற்போது தரம் - 3) பிரிவு - I பி.ப.4.30 மணி
குறிப்பு: பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பதிவுகளுக்கு முந்துங்கள்
தொடர்புகளுக்கு: 077 212 1915/021 490 2836
நிர்வாகி, சோதிவேம்படி லேன், (சாமி பாடசாலை அருகில்) மானிப்பாய். (52730) (12.3.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 3.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.